# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை
## மாதிரி வினாத்தாள் - 02

| அரசியல் விஞ்ஞானம் I | புதிய பாடத்திட்டம் |
|---|---|
| 23 T I | இரண்டு மணித்தியாலம் |

**அறிவுறுத்தல்கள் :**

- ✧ இவ்வினாத்தாள் A, B ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ✧ பகுதி A 30 பல்தேர்வு வினாக்களையும் பகுதி B 20 குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
- ✧ சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதவேண்டும்.
- ✧ ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி A

✧ **1 - 20 வரையிலான வினாக்களுக்கு சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

01. அரசியல் என்பது,
    (1) சமூக வாழ்வில் அத்தியாவசியமான ஓர் அங்கமாகும்.
    (2) அரசறிவியல் எனவும் பொருள் கொள்ளலாம்.
    (3) அரசியலைக் கற்பதைக் குறிக்கின்றது.
    (4) அரசியல் விஞ்ஞானத்துடன் தொடர்பற்றது.
    (5) அரசியல் போராட்டத்தின் கோட்பாட்டு வடிவமாகும்.

02. அரசியல் விஞ்ஞானம் என்பது,
    (1) அரசியலின் பிரயோக செயன்முறையாகும்.
    (2) அரசியலைப் பயிலும் துறையாகும்.
    (3) அரசியலின் நடைமுறைப் பகுதியாகும்.
    (4) அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடாகும்.
    (5) இயற்கை விஞ்ஞானங்களுடன் நெருங்கிய தொடர்புடையது.

03. அரசியல் செய்தல் என்பது யாதெனில்,
    (1) பிரயோக அரசியலைக் கற்றல்.
    (2) அரசியலைக் கல்வித்துறை சார்ந்த வகையில் கற்றல்.
    (3) அரசியல் அதிகாரத்திற்கான போராட்டம்.
    (4) அரசு, அரசாங்கம் போன்ற ஒழுங்கமைப்புக்களை அறிதல்.
    (5) பொதுக்கொள்கைகள், அவற்றின் நடைமுறைகள் பற்றிய ஆய்வு.

04. அரசு என்பது,
    (1) பல்வேறு அரசியல் தளங்களில் பரவலடைந்து பல்வேறு இயல்புகளைப் பெற்ற சமூக நிறுவனம்.
    (2) அரசாங்கம் என்பதனை வெளிப்படுத்தும் வேறு ஒரு பதமாகும்.
    (3) அரசு என்பது வரலாற்று ரீதியாக விசேடத்துவம் மிக்க படைப்பன்று.
    (4) அரசு என்பது ஜனநாயக அரசுகளை மட்டும் குறிப்பதாகும்.
    (5) மனிதன் அரசின் அமுக்கத்துக்கு உட்படாது வாழமுடியும் என்பதாகும்.

05. அரசாங்கம் என்பது,
(1) ஜனநாயக அரசியலில் நீண்டகாலம் நிலைத்திருக்கும் தன்மை கொண்டது.
(2) இறைமை அதிகாரத்தைக் கொண்டது.
(3) அரசியல் நிறுவனமாக அரசாங்கம் அரசின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவர் நிலையமாக செயற்படுகின்றது.
(4) சட்ட உருவாக்கம், நடைமுறைப்படுத்தல், கொள்கை உருவாக்கம் நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளை அரசாங்கத்துக்காக அரசு மேற்கொள்கின்றது.
(5) அரசாங்க நிறுவனங்கள் ஒழுங்கமைத்த முறையினை மூன்று கருத்தியல்களாக வகைப்படுத்த முடியும்.

06. ஆட்சி (Regime) முறையென்பதற்கு பொருந்தாத கூற்றைத் தெரிவு செய்க.
(1) அரசாங்கம் என்பதற்குச் சற்று நெருக்கமுடைய எண்ணக்கருவாகும்.
(2) அரசாங்கத்தின் விசேட தன்மையின் அடிப்படையில் அடையாளப்படுத்துவது.
(3) அரசைக் குறிப்பது.
(4) அரசாங்கத்தின் தலைமைத்துவத்தை குறிப்பது.
(5) கருத்தியலின் அடிப்படையில் நலன்புரி ஆட்சி, சமவுடமை ஆட்சி, அனைத்தாண்மை ஆட்சி எனவும் அழைப்பர்.

07. சமவுடமை அரசு மாதிரி
(1) இங்கு அரசியல் கட்சிகளை மையப்படுத்தி போட்டித் தன்மை காணப்படும்.
(2) சமவுடமை அரசில் தொழிலாளர் நலன்கள் பேணப்படும்.
(3) உழைப்புச் சுரண்டல் அற்ற சமூகத்தில் வகுப்பு வாதமொன்று இல்லாத சமத்துவாத சமூகத்தை கட்டியெழுப்புவதே சமவுடமை அரசின் நோக்கமாகும்.
(4) சமவுடமை அரச முறை 19ம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்த அரச முறையாகும்.
(5) அரசு என்ற அடக்கு முறைத்தாபனம் தொடர்ந்தும் காணப்படும்.

08. தத்துவார்த்த அல்லது இலட்சிய வாத அணுகுமுறை
(1) 1930 ஆம் தசாப்தங்களிலும் 1940 ஆம் தசாப்த்தங்களிலும் அமெரிக்க அரச அறியியலாளர் குழுவொன்றின் பிரசித்தி பெற்ற கருத்தாகும்.
(2) ஐரோப்பிய அரசியல் சிந்தனையின் பிரதான சக்தியாக இருந்த சிசரோ சென்ஒகஸ்தர் மாக்கியாவல்லி தோமஸ் றொய்ல் ஜோன்லொக் இமானுவல் காண்ட கால மாக்ஸ் போன்றோர் இந்த அணுகுமுறையை முன்வைத்தவர்களில் பிரதானமானவர்கள்.
(3) அரசியல் ஆய்வில் குறுகிய கால பயன்பாட்டினைக் கொண்ட அணுகுமுறை
(4) தத்துவார்த்த அணுகுமுறையின் அடிப்படைப் பண்புகள் நான்காகும்.
(5) அரசறிவியலுக்கு அப்பால் உள்ள துறைகள் கோட்பாடுகள் எண்ணக்கருக்கள் விதிமுறைகள் அரசியல் விபரிப்புக்கு இது உட்படுத்துகின்றது.

09. பெண்ணியல் வாதம்,
(1) லிபரல் பெண்ணியல் வாதிகள் பெண்களின் விடுதலைக்காக அரசின் தலையீட்டினை ஏற்கவில்லை.
(2) அரசு தொடர்பான பெண்ணியல் வாதக்கோட்பாடு காணப்படுகின்றது.
(3) பால் நிலையினை அடிப்படையாகக் கொண்டது என்பதே இக்கோட்பாட்டின் பிரதான கருத்து.
(4) பெண்ணியல் வாதத்தில் லிபரல் வாத கற்கைத்துறை மட்டும் காணப்படுகின்றது.
(5) ஆண்களின் உலக தத்துவத்துக்கேற்ப கட்டியெழுப்பப்பட்ட தோற்றப்பாட்டமைப்பில் உலகத்தில் பெண்கள் அர்த்தப்படுத்தப்படுவதில்லை உடல்மையப்படுத்தப்படவில்லை.

10. பாராளுமன்ற முறையின் பண்பு
(1) அரசின் தலைவர் அரசாங்கத்தின் தலைவர் இரண்டும் பிரதமரிடம் காணப்படும்.
(2) சட்டத்துறை நிறைவேற்றுத் துறைக்கிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதில்லை.
(3) பிரதமரும் அமைச்சரவையும் பாராளுமன்றத்துக்கு பொறுப்பு சொல்லத் தேவையில்லை.
(4) பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற கட்சிகள் அல்லது கூட்டணியின் தலைவர் பிரதமர் எனப்படுகின்றார்.
(5) பிரதமரை குற்றப்பிரேரணை மூலம் பதவிநீக்க முடியும்.

11. முரண்பாடு தீர்த்தலின் அடிப்படை நோக்கமாவது,
    (1) ஒரு தரப்புக்கு வெற்றி கிடைப்பது.
    (2) இரு தரப்பிற்கும் வெற்றி கிடைப்பது.
    (3) இரு தரப்பிற்கும் தோல்வி கிடைப்பது.
    (4) ஒரு தரப்புக்கு மாத்திரம் அதிக வெற்றி கிடைப்பது.
    (5) முரண்பாட்டுத் தரப்பு நீதிமன்ற முன்னிலையில் ஆஜராகுவது

12. தாராண்மை வாத அரசியல் கருத்தியலானது,
    (1) சமூக சமத்துவத்தை மூலக் கொள்கையாகக் கொண்டது.
    (2) சமூக அசமத்துவத்தை எதிர்க்கின்றது.
    (3) அரசின் தலையீட்டையும் கட்டுப்பாட்டையும் ஆதரிக்கின்றது.
    (4) தனியாள் சுதந்திரம் மற்றும் சுதந்திரமான சந்தைப் பொருளாதாரம் என்ற கருப்பொருளையுடையது.
    (5) சமவுடைமை வாதத்துக்குப் பின்னர் தோற்றம் பெற்ற பதிலீட்டுக் கருத்தியலாகும்.

13. சவில் சமூகம் என்பதன் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
    (1) அரசு என்ற பரப்புக்கு வெளியில் அமைந்துள்ளது.
    (2) பிரஜைகளின் சுயாதீனமான அமைப்புக்களைக் கொண்டது.
    (3) ஆரோக்கியமான ஜனநாயகமொன்றிற்கான முக்கியமான கூறாகும்.
    (4) பொதுக்கொள்கை உருவாக்க செயன்முறைக்கு உள்ளீடுகளை வழங்குகின்றது.
    (5) தாராள ஜனநாயகத்திற்கு ஒரு தடையாக காணப்படுகின்றது.

14. நலன் பேணும் குழுக்களில் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
    (1) ஜனநாயக ஆட்சிக்கு உதவுவன.
    (2) அரசியல் கட்சிகளில் இருந்து வேறுபடுத்தி இனங்காணப்பட முடியும்.
    (3) அனைத்தாண்மை ஆட்சி முறைகளில் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றன.
    (4) கொள்கை வகுப்பாளர்கள் மீது செல்வாக்குச் செலுத்தி தமது இலக்குகளை அடைந்துகொள்வதனை நோக்காக கொண்டவை.
    (5) தமது குழு உறுப்பினர்களின் நலன்களுடன் அக்கறை கொண்டவை.

15. ஜனநாயக முறைமைகளில் அரசியற் கட்சிகளின் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
    (1) முக்கியமான அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டல்
    (2) அரசியல் அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டவை.
    (3) அரசியல் முறைமைக்கு தேவையான எதிர்கால தலைவர்களை சேர்த்துக் கொள்கின்றன.
    (4) அரசாங்கத்தை அமைப்பதற்கான ஊடகமாக காணப்படுகின்றன.
    (5) சர்வாதிகார ஆட்சிக்கு வழிசெய்கின்றன.

16. தற்போதைய சர்வதேச முறைமையில்
    (1) ஐக்கிய நாடுகள் சபை உலக அரசாங்கமாக தொழிற்படுகின்றது.
    (2) சகல நாடுகளும் ஐக்கிய அமெரிக்காவை உலகத் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளன.
    (3) இந்தியா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் களாகியுள்ளன.
    (4) ஐக்கிய நாடுகள் சபை உலகின் கூட்டு பாதுகாப்புக்கு பொறுப்பாக காணப்படுகின்றது.
    (5) சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகள் ஒரு கூட்டு சமஷ்டி அரசாங்கத்தை உருவாக்கியுள்ளன.

17. சுவிற்சர்லாந்து அரசியலமைப்பு மாதிரி
    (1) ஓர் அரைகுறை சமஷ்டி முறை
    (2) வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க முறைக்கான தற்போதைய நடைமுறை உதாரணம்
    (3) கூட்டு நிர்வாக முறையினை நிராகரிக்கின்றது.

(4) கன்டோன்களின் சட்டங்களின் அரசியலமைப்பு தன்மையினைத் தீர்மானிப்பதற்கு சமஷ்டி நீதிமன்றத்தை வலுப்படுத்துகின்றது.
(5) கன்டோன்களுக்கான அரசியலமைப்பினை உருவாக்குவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அனுமதி வழங்குகின்றது.

18. இலங்கையின் மாகாண சபைகள் முறைமை
(1) நாட்டின் சமஷ்டி அரசாங்க முறைமையொன்றுக்கு நிலைமாற்றம் செய்துள்ளது.
(2) நாட்டின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
(3) செனற் சபை ஒன்றினை உருவாக்கியுள்ளது.
(4) ஆளுநர் தலைமை தாங்கும் அமைச்சர்கள் சபையினை உருவாக்கியுள்ளது.
(5) மாகாண சபைகளுக்கு முழுமையான சட்டவாக்க அதிகாரத்தை வழங்கியுள்ளது.

19. நவீன ஜனநாயக நாடுகளில் கலப்பு நிர்வாக முறை
(1) ஜனாதிபதித்துவ மற்றும் கபினட் அரசாங்க முறைகளின் கலப்பினை அனுமதிப்பதில்லை.
(2) பிரதமர் அவசியமானபோது ஜனாதிபதியை மீறிச் செல்வதற்கு அனுமதிக்கின்றது.
(3) ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஓர் அமைச்சரவைக்கு வழிகோலுகின்றது.
(4) ஜனாதிபதி தனது விருப்பின் பெயரில் அமைச்சர்களை தெரிவுசெய்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.
(5) சட்டசபையின் நம்பிக்கையின்றி அமைச்சரவையின் இருப்பிற்கு வாய்ப்பளிக்கின்றது.

20. சமகால சர்வதேச முறைமை அடையாளப்படுத்தப்படுவது,
(1) ஐக்கிய நாடுகள் சபைக்கு தமது இறைமை அதிகாரத்தை ஒப்படைத்துள்ள தேசிய அரசுகளைக் கொண்ட ஒரு முறைமை.
(2) பெரிய மற்றும் சிறிய அரசுகளுக்கிடையில் போர் இல்லாத சமாதான சகவாழ்வு.
(3) சீனாவை புதிய உலக வல்லரசாக சகல நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளமை.
(4) ஒரு பல்துருவ உலக ஒழுங்கு.
(5) ஒரு இருதுருவ உலக ஒழுங்கு.

✧ **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் நான்கு கூற்றுகள் மட்டும் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவுசெய்க.**

21. 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் பரிந்துரைகளாவன
A - இராஜகாரிய முறையினை ஒழித்தல்.
B - நிர்வாக மற்றும் சட்ட சபைகளை ஸ்தாபித்தல்.
C - ஒரு பொதுவான குற்றவியல் நீதி முறைமையினை அறிமுகப்படுத்தல்.
D - சகல வர்த்தக ஏகபோக உரிமைகளையும் முடிவுக்குக் கொண்டுவருதல்.
E - நீதித்துறை தொடர்பான ஆளுநரின் அதிகாரத்தினை பலப்படுத்தல்.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

22. டொனமூர் அரசியலமைப்பு சீர்திருத்தம்
A - சர்வசன வாக்குரிமையை அறிமுகப்படுத்தியது.
B - நிர்வாகக்குழு முறைமையினை ஸ்தாபித்தது.
C - உள்ளூர் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்தில் பங்குபற்றுவதற்கு வழிகோலியது.
D - மூன்று அரச உத்தியோகத்தர்களும் பிரித்தானிய ஏகாதிபதியத்தின் நலன்களை பாதுகாக்க வேண்டும் என எதிர்பார்த்தது.
E - ஆளுநரை அரசாங்கத்தின் நாம நிர்வாக தலைவராக மாற்றியது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

23. சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றம்
   A - எந்தவொரு சட்டத்தையும் உருவாக்கவும் இல்லாது செய்யவும் அதிகாரம் கொண்டிருந்தது.
   B - பிரித்தானிய முடியை பிரதிநிதித்துவப்படுத்திய மகாதேசாதிபதி, செனற்சபை மற்றும் சனப்பிரதிநிதிகள் சபை என்பவற்றைக் கொண்டிருந்தது.
   C - தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   D - அதனுடைய சட்டவாக்க அதிகாரத்தில் கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது.
   E - ஓர் இரு மன்ற சட்ட சபையாகக் காணப்பட்டது.

   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

24. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் தேசிய அரசுப் பேரவை
   A - நிர்வாக, சட்ட மற்றும் நீதித்துறை அதிகாரங்களைக் கொண்டிருந்தது.
   B - அரசின் மீயுயர் நிறுவனமாகக் காணப்பட்டது.
   C - பொதுச் சேவையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருந்தது.
   D - ஓரங்க சட்ட சபையாகக் காணப்பட்டது.
   E - அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு பதிலளிக்க கடமைப்பட்டிருந்தது.

   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

25. ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி முறைமை
   A - ஐம்பது மாநிலங்களையும் மத்திய அரசாங்கத்தையும் கொண்டது.
   B - பகிரப்பட்ட இறைமையை பண்பாகக் கொண்டுள்ளது.
   C - எஞ்சிய அதிகாரங்களை மாநில அரசாங்கங்களுக்கு வழங்குவதற்கு வழி செய்துள்ளது.
   D - மாநிலங்கள் சமஷ்டி உறுப்புரிமையில் இருந்து விலகிக்கொள்வதற்கு வழி செய்துள்ளது.
   E - முன்னைய கூட்டு சமஷ்டி முறையினை மீள மாற்றீடு செய்துள்ளது.

   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE

✧ **26 - 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 26. | இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப் பிற்கான 19வது சீர்திருத்தத்தின் படி ஜனாதிபதியால் பிரதமர் நியமிக்கப்படுகின்றார். | பாராளுமன்றத்தில் அதிக நம்பிக்கையைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியால் பிரதமராக நியமிக்கப்படல் வேண்டும். |
| 27. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 18 வது சீர்திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களை பலவீனப்படுத்தியது | 18 வது அரசியலமைப்பு சீர்திருத்தம் ஜனாதிபதியினுடைய பதவி தவணைக்கால மட்டுப்பாட்டினை நீக்கியது. |
| 28. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13வது சீர்திருத்தம் மாகாண சபை முறையினை அறிமுகம் செய்தது. | மாகாணசபை முறை எல்லா வழிகளிலும் இந்திய சமஷ்டி முறைக்கு ஒப்பானது. |
| 29. | இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு இரு மன்றங்களைக் கொண்ட சட்டசபைக்கு வழி செய்தது. | இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் குழு உரிமையினை அங்கீகரித்துள்ளது. |
| 30. | 1978 ஆம் ஆண்டு மூல அரசியல் யாப்பானது பொதுத் தேர்தலுக்கு விருப்பு வாக்குடன் கூடிய விகிதாசார முறையினை அறிமுகம் செய்தது. | விகிதாசார பிரதிநிதித்துவ முறையானது கட்சித் தலைமைத்துவத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தியுள்ளது. |

## பகுதி B

31. பண்டைய கிரேக்கர் காலத்தில் இருந்து நவீன காலம் வரைக்கும் ஜனநாயகம் அதனுடைய பரிணாம வளர்ச்சியில் இரண்டு வடிவங்களைக் கொண்டமைந்துள்ளது. அவ்வடிவங்கள் இரண்டும் எவை?

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

32. பண்டைய கிரேக்கத்தின் அரசியல் சிந்தனையாளர்கள் இருவர் அரசியற் கற்கையினுடைய ஸ்தாபகர்களாக கருதப்படுகின்றனர். அவர்கள் இருவரினதும் பெயரைக் குறிப்பிடுக?

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

33. அரசியல் சிந்தனையின் வளர்ச்சிக்கு பங்களித்த இந்திய அரசியல் சிந்தனையாளர் ஒருவரினும் சீன அரசியல் சிந்தனையாளர் ஒருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) இந்தியா ..........................................................................................................................................

(ii) சீனா ..............................................................................................................................................

34. இரண்டு பிரித்தானிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்கள் ''இயற்கை நிலை" தொடர்பாக இரண்டு வேறுபட்ட வழிமுறைகளில் விவரித்துள்ளார்கள். அவர்கள் இருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக?

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

35. அரசியலமைப்புகளில் திருத்தம் மேற்கொள்கின்ற செயன்முறையின் கடினத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவை இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன. அந்த இரு வகைகளினதும் பெயரைத் தருக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

36. பின்வரும் எண்ணக்கருக்களை அறிமுகஞ்செய்த இரு அரசியற் சிந்தனையாளர்களின் பெயரைக் குறிப்பிடுக?

(i) தத்துவார்த்த ஆட்சியாளன் ..............................................................................................................

(ii) பொது விருப்பம் ..............................................................................................................................

37. கீழே தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களும் இரு அரசியல் நிறுவனங்களைக் குறிப்பிடுகின்றன. அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) தேர்தல்களின் ஊடாக அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதனை நோக்காகக் கொண்ட ஒழுங்கமைப்புக்கள்

..........................................................................................................................................................

(ii) பொது ஆர்ப்பாட்டங்கள் ஊடாக தமது நோக்கங்களை அடைந்துகொள்ள முயலும் ஒழுங்கமைப்புக்கள்

..........................................................................................................................................................

38. இலங்கையில் பின்வரும் இரு அரசியல் நிறுவனங்களையும் உருவாக்கிய இரு அரசியலமைப்புகளும் எவை?

(i) ஓர் ஈரங்க சட்டசபை ................................................................................................................................

(ii) ஒம்புட்ஸ்மன் ..........................................................................................................................................

39. பாசிச கருத்தியலை முன்னின்று ஆதரித்த இரு ஐரோப்பிய அரச தலைவர்களின் பெயரைத் தருக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

40. (i) ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசாங்கத்தின் சட்டசபையினுடைய உத்தியோகபூர்வ பெயர் என்ன?

..........................................................................................................................................................

(ii) இந்திய பாராளுமன்றத்தினுடைய மேற்சபையின் உத்தியோகபூர்வ பெயர் என்ன?

..........................................................................................................................................................

41. (i) காலனித்துவ இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையினை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..........................................................................................................................................................

(ii) காலனித்துவ இலங்கையில் நிர்வாகக் குழு முறையினை அறிமுகம் செய்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் எது?

..........................................................................................................................................................

42. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 ஆம் திருத்தச்சட்டத்தின் கீழ் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டபொழுது மூன்று விடயப் பட்டியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

43. அரசியலைக் கற்பதற்கான இரு நவீன அணுகுமுறைகளைக் குறிப்பிடுக?

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

44. (i) ஐக்கிய நாடுகள் சபையில் உலக சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பான பிரதான நிறுவனம் எது?

..........................................................................................................................................................

(ii) ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகளுக்கு பொறுப்பான நிறுவனத்தின் பெயரினைக் குறிப்பிடுக?

..........................................................................................................................................................

45. ஜனநாயக சமூகங்களில் சிவில் சமூகத்தின் இரு பணிகளைக் குறிப்பிடுக?

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

46. (i) இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது இடதுசாரிக் கட்சியினைக் குறிப்பிடுக?

.......................................................................................................................................................

(ii) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கொள்கை கருத்தியலைக் குறிப்பிடுக.

.......................................................................................................................................................

47. 1978 யாப்பின் 19 வது திருத்தத்தின் அமைச்சரவை

(i) உறுப்பினர்களின் எண்ணிக்கை

.......................................................................................................................................................

(ii) அமைச்சரவையின் உறுப்பினர் இல்லாத பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................................................................

48. (i) 19 வது திருத்தப்படி அரசியலமைப்புப் பேரவையின் தலைவர் யார்?

.......................................................................................................................................................

(ii) 19 வது திருத்தத்தில் மேலதிகமாக அறிமுகம் செய்யப்பட்ட ஆணைக்குழுக்கள் இரண்டையும் தருக?

.......................................................................................................................................................

49. (i) சோல்பரி யாப்பின் மகாதேசாதிபதி எவ்வாறு நியமிக்கப்பட்டார்?

.......................................................................................................................................................

(ii) அடிப்படை உரிமைகள் முதன்முதலில் இலங்கையில் எவ் யாப்பின் கீழ் எழுதப்பட்டது?

.......................................................................................................................................................

50. இலங்கையில் செயற்படும் அமுக்கக்குழுக்களுக்கு இரு உதாரணம் தருக.

(i) .......................................................................................................................................................

(ii) .......................................................................................................................................................

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை
## மாதிரி வினாத்தாள் - 02

**அரசியல் விஞ்ஞானம் II** | **புதிய பாடத்திட்டம்**

**23 T II** | **மூன்று மணித்தியாலம்**

**அறிவுறுத்தல்கள் :**

- ✧ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.
- ✧ **பகுதி** I இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் **பகுதி** II இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் **பகுதி** III இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01. ''அரசியல் என்பதை வரைவிலக்கணப்படுத்தி விளக்குக?

02. ''அரசு மற்றும் அரசாங்கம் ஒரு அரசியல் நிறுவனமாகும்'' விளக்குக?

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை பரிசீலிக்குக.
    (அ) ஒற்றையாட்சி முறையின் பண்புகளும் தற்கால போக்குகளும்
    (ஆ) சமஷ்டி ஆட்சி முறையின் பண்புகள்
    (இ) பாதி (அர்த்த) ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள்

## பகுதி II

04. இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றத்தில் டொனமூர் அரசியல் யாப்புடன் தொடர்புடைய பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை விளக்குக.
    (அ) தேசாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்
    (ஆ) நிர்வாகக் குழு முறையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்
    (இ) அரசாங்க சபையின் அதிகாரங்கள் மற்றும் நிலை

05. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை 1978 ஆம் ஆண்டு யாப்போடு தொடர்புபடுத்தி ஆராய்க.
    (அ) ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை
    (ஆ) 18ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் நிலை
    (இ) ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றும் வழிமுறை

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை ஆராய்க.
    (அ) சோல்பரி யாப்பின் கீழும் 1972 யாப்பின் கீழும் நீதித்துறையின் சுதந்திரம்
    (ஆ) சிறுபான்மைக்கான காப்பீட்டு ஏற்பாடுகள்
    (இ) 1948 யாப்பின் நாம நிர்வாகியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை

07. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சீர்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.

(அ) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(ஆ) மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(இ) அரசாங்கத்தின் தலைவர் என்றவகையில் ஜனாதிபதியின் வகிபங்கு

(ஈ) தற்போதைய யாப்பின் கீழ் ஒப்பங்கோடல்

## பகுதி III

08. பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.

(அ) இந்திய சமஷ்டியில் அதிகாரப் பகிர்வு முறைமை

(ஆ) ஐக்கிய அமெரிக்க சமஷ்டியில் அதிகாரப்பகிர்வு முறைமை

(இ) சுவிட்சர்லாந்தின் அதிகாரப்பகிர்வு முறைமை

09. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை விளக்குக.

(அ) பாசிசவாதம்

(ஆ) அரசியல் கட்சிகளின் பணிகள்

(இ) காலணித்துவ அரசு

(ஈ) அரசுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

10. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பரிசீலிக்குக.

(அ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நோக்கங்களும் மூலக்கொள்கைகளும்.

(ஆ) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தின் நோக்கங்களும் மூலக்கொள்கைகளும்.

(இ) மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் வகிபங்கு.

(ஈ) சர்வதேச அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு.

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 02**

**அரசியல் விஞ்ஞானம் I** | **விடைகள்** | **புதிய பாடத்திட்டம்**

## பகுதி A

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 2 | 21. | 1 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 1 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 5 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 1 |
| 05. | 3 | 15. | 5 | 25. | 2 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 5 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 1 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 2 |
| 09. | 3 | 19. | 3 | 29. | 4 |
| 10. | 4 | 20. | 4 | 30. | 3 |

## பகுதி B

31. 1. நேரடி ஜனநாயகம்
    2. மறைமுகமான ஜனநாயகம் / பிரதிநிதித்துவ ஜனநாயகம்

32. 1. பிளேட்டோ
    2. அரிஸ்டோட்டில்

33. 1. இந்தியா - கௌடில்லியர் - அர்த்தசாஸ்திரம், மகாத்மாகாந்தி
    2. சீனா - கென்பூசியஸ் / லாவோட்சி - மாவோசேதுங்

34. 1. தோமஸ் ஹொப்ஸ்
    2. ஜோன் லொக்

35. 1. நெகிழும் யாப்பு
    2. நெகிழா யாப்பு

36. 1. பிளேட்டோ
    2. ஜீன்ஜக்கி ரூஸோ

37. 1. அரசியல் கட்சிகள்
    2. அமுக்கக்குழுக்கள் / சிவில் சமூகம் / சிவில் சமூக இயக்கங்கள் / நலன்பேண் குழுக்கள் / தொழிற்சங்கம்

38. 1. சோல்பரி யாப்பு - 1947
    2. இரண்டாம் குடியரசு யாப்பு - 1978 / இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பு

39. 1. பெனிடோ முசோலினி
    2. அடோல்ப் ஹிட்லர்
    3. பிராங்கோ

40. 1. காங்கிரஸ்
    2. இராஜ்ய சபா

41. 1. 1910 குறுமெக்கலம் சீர்திருத்தம்
    2. டொனமூர் சீர்திருத்தம் - 1931

42. 1. மாகாண சபை நிரல் / மாகாணப் பட்டியல்
    2. மத்திய நிரல் / மத்திய அரசாங்க பட்டியல்
    3. பொதுப்பட்டியல் / ஒத்தியங்கும் பட்டியல்

43. 1. நடத்தைவாத அணுகுமுறை
    2. விஞ்ஞான அணுகுமுறை
    3 சமூகவியல் அணுகுமுறை
    4. புள்ளிவிபரவியல் அணுகுமுறை
    5. பல்துறை சார் அணுகுமுறை
    6. பெண்ணியல் அணுகுமுறை
    7. பின் நவீனத்துவ அணுகுமுறை
    8. சமகால ஒப்பீட்டு அணுகுமுறை
    9. அரசியல் பொருளாதார அணுகுமுறை

44. 1. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை
    2. ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை / UNHRC / மனித உரிமை சபை / மனித உரிமை பேரவை / மனித உரிமை ஆணைக்குழு

45. - ஆலோசனை / கொள்கை ஆதரவு பிரச்சாரம் / நியாயப் பிரசாரம்
    - பிரஜைகளை வலுவூட்டல்
    - மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தல்.
    - அரசாங்கத்தின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல்.
    - எதிர் அதிகாரமாக செயற்படல்
    - ஜனநாயகத்தின் காவல் நாயாக செயற்படல்
    - பிரசைகளின் ஒட்டுமொத்த சமூக வாழ்க்கையினை வழிநடத்தல்
    - பிரசைகளை சுயாதீனமாக ஒழுங்கமைத்தல்.
    - அரசியல் அறிவூட்டல்
    - கொள்கை வழிகாட்டல்
    - அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தல்

46. 1. LSSP / இலங்கை சமசமாஜ கட்சி
    2. அணிசேராக் கொள்கை / கூட்டுச்சேராக் கொள்கை

47. 1. 30
    2. 40

48. 1. சபாநாயகர்
    2. (1) கணக்காய்வு சேவை ஆணைக்குழு
       (2) தேசிய பெறுகை ஆணைக்குழு

49. 1. இலங்கைப் பிரதமரின் சிபாரிசின் படி பிரித்தனிய முடியால் நியமிக்கப்படுவார்.
    2. 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில்

50. - சிறுதோட்ட தேயிலை உரிமையாளர் சங்கம்
    - இலங்கை வர்த்தக சபை
    - இலங்கை அரச வைத்தியர் சாங்கம்
    - அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம்
    - பெருந்தோட்ட துறைமார் சங்கம்
    - இந்துமா மன்றம்

| கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 02 | | |
|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் II | விடைகள் | புதிய பாடத்திட்டம் |

## பகுதி I

**01. ''அரசியல் என்பதை வரைவிலக்கணப்படுத்தி விளக்குக?**

சமூக விஞ்ஞான பாடங்களில் ஒன்றாகிய அரசியலை வரைவிலக்கணமொன்றில் உள்ளடக்குவது கடினமாகும். இதற்கு காரணம் இக்கற்கை நெறி பற்றிய கருத்துக்கள் காலத்துக்குக் காலம் மாற்றமுற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளதாகும். அத்துடன் ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து பிறிதொரு காலத்தில் முக்கியத்துவம் இழப்பதும் புதிய விடயங்கள் ஆய்வுப் பொருளாவதுமான ஒரு இயங்கியல் தன்மைக் கொண்டதாக இக்கற்கை நெறி காணப்படுவதாகும்.

அரசியல் என்றால் என்ன என்பதற்கு பொதுவாகக் கிடைக்கும் இலகுவான பதில் ''தேசத்தை ஆட்சி புரிதல்'' என்பதாகும். இது அரசியல் என்ற எண்ணக்கரு தொடர்பில் காணப்படும் பயன்பாட்டில் உள்ள அர்த்தமாகும். இது அரசியல் தொடர்பில் காணப்படும் முழுமையான வரைவிலக்கணம் அல்ல. இது வாய்மொழி ரீதியான வரைவிலக்கணமாகும்.

அரசியலுக்கான வரைவிலக்கணத்தை கல்விசார் நோக்கில் ஆராயும் போதுதான் சரியான வரைவிலக்கணத்தினை கண்டு கொள்ளலாம். இவ்வகையில்,

01. அரசு, அரச நிருவாகம், ஆட்சி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதே அரசியலாகும். இந்த வரைவிலக்கணம் புராதனமாக இருந்தாலும் நல்ல அர்த்தத்தைக் கொண்டுள்ளது. புராதன கிரேக்க, இந்திய, சீன தத்துவஞானிகள் இப்பொருளிலேயே அரசியலைப் பற்றிப் பேசினர்.

    ஆங்கில மொழியில் Politics என்ற சொல் Politikos என்ற சொல்லிலிருந்தே தோன்றியுள்ளது. பொலீஸ் (Polis) என்பது நகர அரசாகும். அதாவது, சிறிய நகரத்தை மையப்படுத்திய அரசாகும். ''நகர அரசு'' என்ற பொருளைத்தரும் Polis என்ற அர்த்தம் Politikos என்ற சொல்லில் பொதிந்துள்ளது. இதன் மூலம் கிரேக்க காலத்தில் அரசியல் என்பது ''நகர அரசு'' தொடர்பான விடயத்தினை ஆராயும் விஞ்ஞானம் அல்லது கலையாகவே கருதப்பட்டது. இவ்வரசு நேரடி ஜனநாயகத்தின் தாயகமாக விளங்கியதோடு சுதந்திரத்தையும் மக்களாட்சியையும் விரும்பிய ஒன்றாகவும் காணப்பட்டது. இவ்வரசில் சுயதேவை பூர்த்திப் பொருளாதாரம் காணப்பட்டது. கிரேக்க காலத்தில்,

    1. அரசின் தோற்றம்.
    2. அரசின் நோக்கம்.
    3. அரசாட்சி முறைகள்.
    4. அரசுக்கும் பிரசைகளுக்கும் இடையிலான தொடர்பு.
    5. ஆட்சியாளர்களின் பண்புகளும் திறன்களும்.
    6. ஆட்சி செயன்முறைகள்.

என்பன நகர அரசு பற்றிய கற்கையில் இடம் பெற்ற பரந்த விடயங்களாகும். புராதன இந்தியா மற்றும் சீனாவில் அரசியல் என்பது இவ்வர்த்தத்திலேயே பார்க்கப் பட்டதாக கௌடிலியர் மற்றும் கொன்புசியஸ் போன்ற சிந்தனையாளர்களின் நூல்களில் காணப்படுகின்றன. இவ்விரு சிந்தனையாளர்கள் மட்டுமன்றி அரிஸ்டோடிலும் கூட ஆட்சியாளர்களுக்கு அரசாட்சி தொடர்பாக ஆலோசனை வழங்குவதே அரசியல் வல்லுனர்களின் கருமமொன்றாக இருந்தது எனக் கூறப்படுகின்றது.

02. அரசுக்கு வெளியில் பிரசைகளின் அரசியல் பங்குபற்றும் சமூகப் பிரயோகமே அரசியலாகும் என்ற மற்றொரு வரைவிலக்கணமும் காணப்படுகின்றது. பிரசைகளின் அரசியல் பங்குபற்றல் என்பதற்கு அரசியல் என்ற எண்ணக்கருவில் விசேட இடம் வழங்கப்பட்டுள்ளது. பிரசைகளின் செயற்பாடுகள் மற்றும் பங்குபற்றல் இல்லாத அரசியல் ஒன்றை எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு வேரூன்றியுள்ளது. அரசியல் பங்குபற்றல் என்பது 1960ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியிலே பிரபல்யம் பெற்ற ஒன்றாகயிருந்தது. ஆனாலும் ஆட்சி நடவடிக்கைகளில் மக்களின் பங்குபற்றல் என்பது கிரேக்க காலம் வரை பழமை வாய்ந்ததாகும். கிரேக்கத்தில் அப்போது காணப்பட்ட நேரடி ஜனநாயக ஆட்சிமுறையில் பிரசைகளின் நேரடி பங்குபற்றல் காணப்பட்டது. சட்டவாக்கம், நகர் நிருவாகம், நீதித் துறைகள் போன்ற செயற்பாடுகளில் பிரசைகள் சுயாதீனமாக ஈடுபட்டனர். ஆனாலும் பெண்கள், சிறுவர்கள், அடிமைகள் ஆட்சி நடவடிக்கைகளிலிருந்து தூரப்படுத்தப் பட்டிருந்தனர் என்பது முக்கியமானதாகும்.

பொதுவாக பிரசைகளின் அரசியல் பங்குபற்றுதல் என்பது தீர்மானம் மேற்கொள்ளல், கொள்கை உருவாக்கம், கொள்கை அமுலாக்கச் செயல்முறையில் பிரசைகள் நேரடியாக உள்வாங்கப்படுவதைக் குறித்து நிற்கின்றது.

(உ - ம்) :

தேர்தலில் வாக்களித்தல், ஆட்சியாளர்களுக்கு ஆள்வதற்கான அதிகாரத்தை வழங்குதல், அரசியல் கட்சிகளை அமைத்தல், தேர்தல் காலங்களில் பலதரப்பட்ட தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அறிவுரை வழங்குதல், துண்டுப் பிரசுரங்களை வழங்குதல், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களாக இருத்தல், சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளல், அரசியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புதல், இவைதவிர கூட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள், சுயாதீன சங்கங்கள் மூலம் பொதுத் தேவைகளை நிறைவேற்றல் போன்ற நடவடிக்களின் மூலம் அரசியல் செயற்பாடுகளில் மக்கள் ஈடுபடுகின்றனர்.

அரசியலை பற்றி பல்வேறுபட்ட தத்துவஞானிகளும் அரசியல் மேதைகளும் வரைவிலக்கணப் படுத்தியுள்ளனர்.

1. சமூக விஞ்ஞானங்களில் ஒரு பகுதியான அரசியல் அரசின் ஆரம்ப நிலையையும் அரசாங்கத்தின் கோட்பாடுகளையும் ஆராய்கிறது என Paul Janet கூறியுள்ளார்.
2. அரசியலில் ஆரம்பமும் முடிவும் அரசுடன் இணைந்ததாகும் என Dr. Garner கூறுகின்றார்.
3. அரசைப் பற்றிய விஞ்ஞானமே அரசியல் என R.G. கெட்டல் குறிப்பிடுகின்றார்.
4. அரசின் பல கூறுகளைத் தீர ஆராய்வது அரசியல் என சீலி கூறுகிறார்.
5. அரசாங்கத்தின் அதிகார தாபனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் அரசின் செயற்பாடுகளை கற்கும் விஞ்ஞானம் அரசியல் என சாள்ஸ் ஹைமன் கூறுகின்றார்.

6. அரசாங்கத் தீர்மானங்களை எடுக்கும் தாபனங்களைச் சுற்றி இடம்பெறும் நிகழ்வுகளைக் கற்பதே அரசியல் என அல்பிரட் கிறேஸ் கூறுகின்றார்.

இருந்த போதிலும் இன்று அரசறிவியலாக உள்ள கற்கை நெறி அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகள், கொள்கை அமுலாக்கச் செயற்பாடுகள், அரசியல் மோதல்கள், எதிர்ப்பு மற்றும் போராட்டங்கள் சர்வதேச தொடர்புகளும், மோதல்களும், யுத்தம் மற்றும் சமாதானம் போன்ற விடயங்களையும் ஆராய்கின்ற துறை என்பது மறுக்கமுடியாது.

## 02. அரசு மற்றும் அரசாங்கம் ஒரு அரசியல் நிறுவனமாகும் விளக்குக?

எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் அடிப்படை அல்லது மையமான அரசியல் நிறுவனம் அரசும் அரசாங்கமும் ஆகும். சமூகத்தில் காணப்படும் ஏனைய பெரும்பான்மையான அரசியல் நிறுவனங்களை அரசு மற்றும் அரசாங்கமுமே தோற்றுவிக்கின்றன.

(உ-ம்): பாராளுமன்றம், அமைச்சரவை, உயர் நீதிமன்றம், உள்ளுராட்சி மன்றம், ஆயுதப் படைகள், பொலிஸ், சிறைச்சாலை, பாடசாலை, பல்கலைக்கழகம், கூட்டுத்தாபனம், திணைக்களம் போன்றன.

அரசுரம் அரசாங்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டாலும் இவை இரண்டும் ஒன்றல்ல. நவீன ஜனநாயக அரசியல் முறையில் அரசு என்பது ஒப்பீட்டு ரீதியாக நீண்டகாலம் நிலைத்திருக்கும் சமூகத்தில் காணப்படும் அதி முக்கிய அரசியல் நிறுவனமாகும். அரசாங்கம் என்பது அரச செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மக்களால் குறுகிய காலத்திற்குள் செயற்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிறுவனமாகும்.

ஆரம்பகால ஜனநாயக அரசியல் முறையில் அரசு மற்றும் அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் இவ்வாறான வேலைப்பாடுகள் காணப்படவில்லை.

(உ-ம்): அரசாட்சி முறையில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் இல்லாதிருந்தோடு அரசு மற்றும் அரசாங்கத்திற்கிடையில் வேறுபாடும் இருக்கவில்லை. அரசனே அரசாகவும் அரசாங்கமாகவும் இருந்தான்.

அரசியல் நிறுவனமாக அரசு என்ற மனித நிறுவனங்கள் உள்ளன. நவீன அரசு நிச்சயிக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்திலேயே ஒழுங்கமைந்துள்ளது. அரசிற்கு நிச்சயமான தேச எல்லை உண்டு. நிச்சயிக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தினுள் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்துள்ள பிரஜைகள் மீது நமது ஆதிபத்தியம் (உயர்ந்தபட்சம்) மற்றும் அதிகாரம் என்பவற்றை வைத்திருக்கும் உரிமையும் தகுதியும் அரசுக்குண்டு. இந்த அதிகார பலத்தினை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இன்னும் சில நிறுவனங்கள் அரசுக்கு உள்ளன. அரசாங்கம் அதில் ஓர் நிறுவனமாகும்.

அரசியல் நிறுவனமாக அரசுக்கு அடிப்படை சட்ட கட்டமைப்பு உண்டு. அது அரசியலமைப்பாகும். அரசின் இயல்பு கட்டமைப்பு நிறுவன ஒழுங்கமைப்பு போன்றன அரசியல் அமைப்பினாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தமது அதிகாரப் பலத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு கொண்டுள்ள பிரதானமான நிறுவனம் அரசாங்கமாகும். இந்த அரசாங்கம் சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை, ஆயுதப்படைகள் மற்றும் பணியக ஆட்சி என்பன உள்ளன. இந்த எல்லா உப நிறுவனங்களுக்கும் நிச்சயமான சட்டதிட்டங்கள் மனிதவளம் போன்றனவும் காணப்படுகின்றன.

அரசியல் நிறுவனமான அரசாங்கம் அரசின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பிரதானமான முகவர் நிறுவனமாகவே செயற்படுகின்றது. சட்ட உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல், பொதுமக்களுடன் தொடர்புகளைபேணல் மற்றும் ஏனைய வெளிநாட்டு அரசுகளுடன் தொடர்புகளை பேணல் என்பன அரசுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் பிரதான பணிகளாகும். அரசில்லாத அரசாங்கமில்லாத ஒரு சமூகத்தையோ ஒரு நாட்டையோ காணமுடியாது.

அரசு மற்றும் அரசாங்கம் ஒன்றுக்கொன்று வேறுபட்டாலும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிறுவனத் தொகுதியாக எடுக்கும் போது அரசு மற்றும் அரசாங்க நிறுவனங்கள் ஒழுங்கமைந்துள்ள முறையினை நான்கு கருத்தியல்களாக வகைப்படுத்த முடியும்.

1. சட்டவாக்க நிறுவனம் - பாராளுமன்றம், சட்ட சபை, மாகாண சபை.
2. நிறைவேற்று நிறுவனம் - அமைச்சரவை, அமைச்சர்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள்
3. நீதித்துறை நிறுவனம் - உயர்நீதிமன்ற நிறுவனம், மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்ற கட்டமைப்புக்கள்.
4. பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு தொடர்பான நிறுவனம், ஆயுதப்படைகள், பொலிஸ், சிறைச்சாலை

எனவே அரசு மற்றும் அரசாங்கம் என்பது அரசியல் நிறுவனங்களில் முதன்மைப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் முக்கியப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் காணப்படுகின்றது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. எனவேதான் அரசு எஜமான் என்றால் அரசாங்கம் சேவகன் என்பது ஒரு பொருத்தமான கூற்றாகும்.

**03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை பரிசீலிக்குக.**

**(அ) ஒற்றையாட்சி முறையின் பண்புகளும் தற்கால போக்குகளும்**

**(ஆ) சமஷ்டி ஆட்சி முறையின் பண்புகள்**

**(இ) பாதி (அர்த்த) ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள்**

**(அ) ஒற்றையாட்சி முறையின் பண்புகளும் தற்கால போக்குகளும்**

அரசின் சகல இறைமை அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்திடம் செறிந்து இருக்குமாயின் அது ஒற்றையாட்சி முறை எனப்படும். அதாவது, அரசின் சட்டம், நிர்வாகம், நீதி எனும் முத்துறை அதிகாரங்களும் ஒரு மத்திய அரசினால் செயற்படுத் தப்படும் இங்கு எவ்வகையிலும் இறைமை அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படமாட்டாது. அது அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். இதன்படி மத்தியரசுக்கு ஒப்பானதோர் நிறுவனம் அந்நாட்டின் எல்லைகளில் காணப்படமாட்டாது. இங்கு எல்லா அதிகாரங்களையும் ஒரு அரசாங்கம்தான் தன் விருப்பத்திற்கேற்ப நாட்டின் எல்லாப் பாகங்களிலும் தங்கு தடையின்றி செலுத்துகின்றது.

ஒற்றையாட்சி அரசில் இறைமையுள்ள துணை நிறுவனங்களோ, இணை நிறுவனங்களோ கிடையாது. ஆயினும் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக மத்திய அரசின் சில நிர்வாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு சில உள்;ராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படலாம். ஆனால் இந்த நிறுவனங்களுக்கு இறைமை அதிகாரம் கிடையாது, அவைகளை மாற்றவோ, நீக்கவோ, கொடுத்த அதிகாரங்களைத் திரும்பப் பெறவோ, ரத்துச் செய்யவோ, மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. எடுத்துக்காட்டாக,

01. இலங்கையில் செயற்படும் மாகாண சபைகள், உள்;ராட்சி மன்றங்கள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை)
02. பிரித்தானியாவில் செயல்படும் வட்டார சபை, கிராம மாவட்டம், மாவட்ட சபை, கவுண்டிகள், பரோக்கள், லண்டன் மாநகர சபை.
03. பிரான்ஸில் செயறப்ட்டும், கம்யூன்கள், திணைக்களங்கள்.
04. ஜப்பானில் மாவட்ட நிறுவனங்கள், நகராட்சி, Maichi நிறுவனங்கள், கிராமங்களின் மியூரா நிறுவனங்கள், போன்றனவும் செயற்ப்படுகின்றன.

ஒற்றையாட்சி முறையில் ஒரே சட்டமன்றமே காணப்படும். சட்டம் இயற்றும் மேலாண்மை மத்திய அரசிடமே இருக்கும். இது இயற்றும் சட்டமே நாடு பூராகவும் செல்லுபடியாகும். இதே போல ஒற்றையாட்சி முறையில் அதிகாரப் பங்கீடு கிடையாது. பொதுவாக ஒற்றையாட்சி முறை அரசியல் அமைப்புக்கள் எழுதப்படாததாகவோ (பிரித்தானியா), எழுதப்பட்டதாகவோ (பிரான்ஸ், இலங்கை, யப்பான்) நெகிழாததாகவோ, நெகிழக்கூடியதாகவோ (பிரித்தானியா) இருக்கலாம்.

இதேபோல மத்திய அரசின் சட்டமன்றம் இருசபைகளைக் கொண்டிருக்கலாம் (பிரித்தானியா, பிரான்ஸ், யப்பான்) ஒரு சபைகளைக் கொண்டதாகவும் இருக்கலாம் (இலங்கை).

**பண்புகள்**

- வலுவான மத்திய அரசியல் நிறுவனம் அல்லது மத்திய அரசாங்கம் காணப்படுதல். இங்கு மத்திய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாடு முழுவதும் வியாபித்து காணப்படும் (கட்டுப்பாட்டினை, கட்டளையினை பிரயோகிக்கும்)
- இங்கு மத்திய அரசாங்கம் நாட்டின் ஏனைய மட்ட அரசாங்க நிறுவனங்களை (மாகாண, பிரதேச, உள்ளூர்) மீறிச்செல்ல மற்றும் அவற்றின் தலைவிதியை தீர்மானிக்கும் அதிகாரத்தை கொண்டிருக்கும்.
- மத்திய அரசின் சட்டவாக்க அதிகாரத்திற்கு போட்டித்தன்மையான சட்டத்துறையொன்று காணப்படாமை.
- பொதுவாக சமஷ்டி முறையுடன் ஒப்பிடும் போது யாப்பு திருத்த முறைகள் இலகுவானதும் எளிமையானதுமாகக் காணப்படல்.
- ஒரு மத்திய அரசாங்கம் காணப்பட்டபோதும் நிருவாக செயற்றிறனை ஏற்படுத்துவதற்காக பெரும்பாலான ஒற்றையாட்சி அரசுகள் நிருவாக அதிகாரங்களைப் பரவலாக்கியுள்ளமை.
- அரசின் எல்லையில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் அதிகாரத்துவத்தினை தெளிவாகவும் உண்மையாகவும் செயற்படுத்துவதற்கான இயலுமையின் காரணமாக ஒற்றையாட்சி அரசியலமைப்பினுள் அரசியல மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை சிறப்பாக நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புள்ளமை.
- ஒற்றையாட்சி அரசியலமைப்பினை ஓர் இனம் / ஒரு தேசியம் கொண்ட சமூகங்களிலேயே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு தசாப்தங்களில் இருந்து பெரும்பாலான ஒற்றையாட்சி நாடுகள் கீழ் மட்டங்களுக்கு அதிகமான பொறுப்புக்களை வழங்குவதற்கு முயற்சிகளை எடுப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஒற்றையாட்சி நாடுகளில் மத்தியில் இருந்து கீழ் மட்டத்திற்கு அதிகாரத்தை பரவலாக்குதல் பிரதானமான முறைகள் உள்ளன.

**01. அதிகாரத்தைப் பண்முகப்படுத்தல் :**

அதிகாரத்தைப் பண்முகப்படுத்தல் என்பது, மத்திய அரசிடமுள்ள நிருவாக அதிகாரங்களுள் சிலவற்றை பிரதேச நிர்வாக அலகிடமும் கையளித்தலாகும். அதாவது, நிருவாக நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையிலும் பிரதேச ரீதியாக நபர்களை நிருவாக நடவடிக்கைகளில் பங்குகொள்ளச் செய்யும் வகையிலும் அரசாங்கத்தின் நிருவாக விடயங்களுக்காகச் செய்யப்படும் செலவுகளை குறைத்தல் வகையிலும்மத்திய அரசிற்குரிய அதிகாரங்கள் பிரதேச நிருவாக அலகுகளிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அதிகாரத்தைப் பண்முகப்படுத்துகையில் மத்திய அரசு மற்றும் அதன் பல்வேறு நிறுவனங்கள் வாயிலாக திட்டமிடல், முகாமை செய்தல், வளங்களைப் பெறுதல், மற்றும் பங்கிடுதல் முதலிய பொறுப்புக்களை பிரதேச மட்டத்திலான நிருவாக நிறுவனங்களிடம் ஒப்படைத்தல்.

(உ - ம்) : இலங்கையில் பிரதேச மட்டத்திலான நிறுவனங்களான உள்;ராட்சி மன்றங்கள்,அரச அதிகார சபை, கூட்டுத் தாபனங்கள் என்பவற்றிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப் பட்டிருப்பதை காணக் கூடியதாக உள்ளது.

**02. நிருவாக பரவலாக்கல் :**

தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரை கொள்கைகளை நிருவாக ரீதியாக பண்முகப் படுத்தலேயே இது குறித்து நிற்கும்.

(உ - ம்) : இலங்கை, பிரித்தானியா, ஸ்கென்டிநேவியா போன்ற நாடுகள்

இலங்கையில் தேசிய மட்டத்திலிருந்து கிராமிய மட்டம் வரையில் நிருவாக அதிகாரம் பன்முகப் படுத்தப்பட்டுள்ள விதத்தை பின்வருமாறு அறியலாம்.

| | |
|---|---|
| தேசிய மட்டம் → | அமைச்சின் செயலாளர் |
| மாவட்ட மட்டம் → | மாவட்ட செயலாளர் |
| பிரதேச மட்டம் → | பிரதேச செயலாளர் |
| கிராம அலுவலகர் பிரிவு மட்டம் → | கிராம அலுவலகர் |

(உ - ம்) :

ஐக்கிய இராச்சியத்தில் உள்ளூராட்சி அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்ற திட்டங்களை கொள்கைகளை நடைமுறைப் படுத்துகின்றன.

**03. அதிகாரத்தை ஒப்படைத்தல் :**

ஒரு சில சட்டவாக்க அதிகாரம் உட்பட தீர்மானம் எடுக்கும் சுயாதீனத் தன்மையை மத்திய அரசாங்கத்தின் மூலம் கீழ்மட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்கப் படுவதே இதன் பொருளாகும். இலங்கை, பிரான்ஸ், இத்தாலி, பிரித்தானியா மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளின் பிரதேச அரசாங்கங்கள் தொடர்பான உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் அரச முயற்சிகளை மேற்கொள்வதற்கான திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள் என்பவறுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(உ - ம்) : இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்.
இலங்கை துறைமுக அதிகார சபை.

ஐக்கிய இராச்சியத்தினால் 1999ஆம் ஆண்டில் ஸ்கொட்லாந்துக்கும் வேல்ஸ்சுக்கும் அதிகாரத்தை வகைப்படுத்தி பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) சமஷ்டி ஆட்சி முறையின் பண்புகள்**

மத்தியரசின் தலைமையின் கீழ் அதன் அரசியலமைப்புக்குட்பட்ட வகையில் பல சிறிய மாநிலங்கள் தங்களது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் இழந்து விடாத வகையில சில பெரிய நன்மைகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு அதிகார பகிர்வின் அடிப்படையில் இயங்கும் ஒரு வகை ஆட்சி முறையே சமஷ்டி ஆகும். இவ் ஆட்சி முறையில் இணைந்த மத்திய மாநில அரசாங்கங்கள் தமக்கென வரையறுக்கப்பட்டுள்ள நிலப்பரப்புக்குள் ஆதிக்கம் அல்லது இறைமை உடையனவாக விளங்கும்.

சமஷ்டி ஆட்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமெரிக்கா, சுவிச்சர்லாந்து, அவுஸ்திரேலியா, ஆர்ஜென்டினா, ஆஸ்திரியா, பெல்ஜியம், பிரேசில், கனடா, ஜேர்மன், மலேசியா, மெக்சிக்கோ, நைஜீரியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, வெனிசூலா மற்றும் இந்தியா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

**01. இரண்டு மட்டங்களிலான அரசாங்கங்கள் செயற்படுதல் :**

சமஷ்டி ஆட்சியில் இரண்டு அரசாங்கங்களான மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என்ற இரண்டு வகையான அரசாங்கங்கள் செயற்படுவது முக்கியமானதாகும். இந்த இரண்டு அரசாங்கங்களும் சுயாதீனமாக செயற்படுவதோடு யாப்பு ரீதியாக அதிகாரங்களும் பெற்றுள்ளது. இந்த இரு மட்ட அரசாங்கங்களும் ஒன்றின் அதிகாரத்தை மற்றொன்று உடைமையாக்கிக் கொள்ள முடியாது. இந்த அரசாங்கங்கள் தமது எல்லைக்குள் சட்ட ரீதியாக சுதந்திரமானவை ஆகும். ஒன்று மற்றயவற்றுக்கு கீழ்ப்படியாததாகவும் காணப்படும்.

(உ - ம்) :

(i) அமெரிக்க சமஷ்டியில் ஒரு மத்திய அரசும் 50 மாநில அரசுகளும் காணப்படல்.

(ii) கனடாவின் சமஷ்டியில் ஒரு மத்திய அரசும் 10 மாநில அரசுகளும் காணப்படுகிறது.

(iii) சுவிட்சர்லாந்தின் சமஷ்டியில் ஒரு மத்திய அரசும் 26 கன்ரன்களும் காணப்படல்.

**02. திட்டவட்டமும் தெளிவும் கொண்ட அதிகாரப் பங்கீட்டுக்கு இடமளித்த யாப்பாக இருத்தல்.**

சமஷ்டி ஆட்சிமுறையின் மிகச் சிறப்பான அம்சம் மத்திய, மாநில அரசுகளிடையே திருப்திகரமான அதிகாரங்கள் பங்கிடப்பட்டுள்ளமை ஆகும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த

அதிகாரங்களான தேசிய பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, நாணயம் வெளியிடுதல் வெளிநாட்டு வியாபாரம், தபால் தந்தி, செய்தித் தொடர்பு ஆகியவை மத்திய அரசாங்கத்திடமும். கல்வி, உள்;ராட்சி, மின்சாரம், சுகாதாரம், குற்றவியல் சட்டங்கள், சிறு கைத்தொழில், பெருந்தெருக்கள் ஆகிய அதிகாரங்கள் மாநிலங்களிடமும் விடப்படுகின்றன.

எல்லா சமஷ்டி நாடுகளிலும் இந்த அதிகாரப் பங்கீட்டைக் காணலாம். சமஷ்டி என்பது பல அசுகளின் கூட்டாண்மையாக இருப்பதால் அங்கு மத்திய அரசு, மாநில அரசுகள் என்ற இரு அலகுகள் காணப்படும். இவ்விரு அலகுகளிலும் செயற்பாட்டு பிரதேசம் வேறுபட்டதாக இருப்பதால் ஒவ்வொன்றினதும் அதிகார எல்லையைக் குறித்துக் காட்டவும் அவற்றிக்கிடையே மோதல்கள் ஏற்படுவதை தவிர்க்கவும் இந்த அதிகாரப் பங்கீடு அத்தியவசியமான ஒரு பண்பாக கருதப் படுகின்றது. அதிகாரப் பங்கீட்டு முறை நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

01. மத்திய அரசுக்கு சில அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளுக்கு வழங்கப்படுதல்.
    (உ - ம்) : அமெரிக்காவிலும், சுவிட்சர்லாந்திலும், அவுஸ்ரேலியாவிலும் இந்த முறையை காணலாம்.
02. மாநில அரசாங்கங்களுக்கு முதலில் அதிகாரங்களை ஒதுக்கிவிட்டு எஞ்சிய அதிகாரங்களை மத்திய அரசுக்கு ஒதுக்கிவிடல்.
    (உ - ம்) : கனடா
03. மத்திய அரசாங்கத்திற்கான அதிகாரப் பட்டியல் மாநில அரசாங்கத்திற்கான அதிகாரப் பட்டியல், ஒத்தியங்கும் அதிகாரப் பட்டியல் என்று அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படல். இம்முறை இந்தியாவில் காணப்படுகின்றது.

### 03. அரசியலமைப்பு உயர் தன்மையாக இருத்தல் :

சமஷ்டி முறையில் அதிகாரங்கள் யாப்புத்திட்டத்தின் மூலம் பிரிக்கப்படுவதனால் அந்த யாப்பு பிரதான இடத்தைப் பெறுவதுடன் உயர்தன்மை பொருந்தியதாகவும் காணப்பட வேண்டும். சமஷ்டி என்பது சமஷ்டியில் சேரும் அலகுகளுக்கிடையிலான ஒரு உடன்படிக்கையாக இருப்பதனால் சமஷ்டி யாப்பு சமஷ்டி அலகுகளை ஒன்றிணைத்து வைப்பதற்கு உடன்படுகின்ற சகல ஏற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும். அதனாலேயே சமஷ்டியில் அரசியல் யாப்பு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஒரு சமஷ்டி யாப்பு உயர்ந்ததாக இருக்கும் அதேவேளை யாப்பினை மீறுகின்ற எந்த ஒரு சட்டமும் செல்லுபடியாகாது. முழு சமஷ்டி முறையும் யாப்பின் அடிப்படையிலேயே இயங்கும், எனினும் இவ்விடயம் நாட்டுக்கு நாடு வேறுபடலாம்.

### 04. சுதந்திரமாக இயங்கும் நீதித்துறை (உயர்நீதிமன்றம்) காணப்பட்டிருத்தல் வேண்டும்:

சமஷ்டி அரசியலமைப்பில் உள்ள நாடுகளில் நீதித்துறை (உயர் நீதிமன்றம்) மிகவும் அவசியமாகிறது. அதிகாரப் பங்கீடு மூலம் தங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசும் மாநில அரசுகளும் மீறக்கூடாது. இவைகள் தங்கள் அதிகார எல்லைகளைத் தாண்டிச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு சமஷ்டி உயர் நீதிமன்றத்தையே சாரும். ஒன்றின் மீது ஒன்று ஆதிக்கம் கொள்ளாமல் பார்த்து அதிகாரச் சமநிலையைக் கண்காணிக்கிறது உயர் நீதிமன்றம் ஆகும்.

மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே தோன்றும் வழங்குகளையும், மாநிலங்களுக்கும் இடையே தோன்றும் வழக்குகளையும், மாநிலங்களுக்கும் தனி நபர்களுக்குமிடையே உள்ள வழக்குகளையும், மத்திய அரசுக்கும் தனி நபர்களுக்குமிடையே உள்ள வழங்குகளையும் விசாரித்துத் தீர்ப்புக் கூறுவது உயர் நீதிமன்றம் ஆகும்.

**05. எழுதப்பட்ட நெகிழா யாப்பாக இருத்தல் வேண்டும் :**

சமஷ்டி முறையில் மத்திய அரசினதும் மாநில அரசுகளினதும் அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டிருப்பதனாலும் ஒன்று மற்றயதை மிஞ்சியதாக செயற்படக் கூடாது என்று யாப்பில் தெளிவான ஏற்பாடுகள் இடம்பெறுவதால் சமஷ்டி அரசியல்யாப்பு கட்டாயமாக எழுதப்பட்டதாகவும் நெகிழாததாகவும் காணப்பட வேண்டும். இரு வேறுப்பட்ட அரசியல் அலகுகள் இடம்பெறும் பொழுது அவற்றுக்கிடையிலான அதிகாரப் பங்கீடு சம்பந்தமான தெளிவான வரையறைகள் இருக்க வேண்டும் என்பதால் அரயில் யாப்பு கட்டாயமாக எழுதப்பட்டிருக்க வேண்டும். அதன்படி சகல சமஷ்டி முறைகளிலும் அரசியல் யாப்பு எழுத்துருவப்படுத்தப்பட்டுள்ளமை குறிபிடத்தக்கதோர் அம்சமாகும்.

சமஷ்டி முறை இரு வகையான அரசுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை அவர்களுக்குத் தனித்தனி அதிகாரங்களையும் ஒதுக்கி உள்ளது. அதன்படி எந்த ஒரு அரசியல் அலகும் மற்றையதைப் பாதிக்கும் வகையில் தான்தோன்றித் தனமாக நடக்க முற்படக்கூடாது. அதனால் சமஷ்டி முறை நிலவும் நாடுகளின் யாப்பு கட்டாயமாக நெகிழாத தன்மையுடையதாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. அமெரிக்க யாப்பு நெகிழாத் தன்மையுடையதாகும். அங்கு யாப்புத் திருத்ததிற்கென பிரத்தியோக முறைகள் பின்பற்றப்படுகின்றன. மத்திய அரசோ, மாநில அரசுகளோ சுந்திரமான வகையில் யாப்பினைத் திருத்த முடியாது. யாப்புத் திருத்தத்தில் மத்திய அரசும், மாநில அரசுகளும் பங்குபற்ற வேண்டும். இரண்டினதும் ஒத்தாசையும், ஒத்துழைப்புமின்றி யாப்புத் திருத்தங்களை எளிதாக மேற்கொள்ள முடியாது. அதனால்தான் 1787ம் ஆண்டிலிருந்து இன்றுவரை அமெரிக்காவில் 27 திருத்தங்கள் மட்டுமே திருத்தப்பட்டுள்ளது.

06. மத்திய அரசின் சட்டத்துறை இரண்டு சபைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

07. மத்திய அரசின் சட்டத்துறையில் இரண்டாம் மன்றத்தில் மாநிலங்களுக்குச் சமமான உறுப்புரிமை காணப்படுதல் :

08. இரட்டை குடியுரிமை :

**(இ) பாதி (அர்த்த) ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள்**

பல்வேறு அரசியல் அமைப்புக்களின் பண்புகளை உள்ளடக்கி இருக்கும் அரசியல் அமைப்புக்களே கலப்பு முறை அரசியல் அமைப்புக்கள் என அழைக்கப் படுகிறது. முடியாட்சி மற்றும் கூட்டாட்சி என்ற இரண்டு வகையான அரசியல் அமைப்புக் களின் பண்புகள் கலந்த அரசாங்கமாகவோ, ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசியல் அமைப்புக்களின் பண்புகள் கலந்த அரசாங்கமாகவோ காணப்படலாம்.

கலப்பு அரசியல் அமைப்புக்கள் பல வகையில் காணப்பட்டாலும் அவற்றுள் மிகவும் முக்கியமானதும், பிரபல்யமானதுமாக காணப்படுவது பாராளுமன்றம் சார் அரசியல் அமைப்பினதும், ஜனாதிபதி அரசியல் அமைப்பினதும் அடிப்படைப் பண்புகளை உள்ளடக்கிய கலந்த ஓர் அரசாங்க முறையே கலப்பு முறை அரசாங்கம் என பொதுவாக வரையறை செய்யலாம். இதனை பாதி ஜனாதிபதி முறை அரசாங்க முறை எனவும் அழைக்கப்படுவதுண்டு.இந்த கலப்பு முறை அரசாங்கம் பாராளுமன்றத்திற்கு பதில் அளிக்கக்கூடிய பிரதமர் தலைமையிலான அமைச்சரவையினாலும், மக்களின் நேரடி வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியினாலும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதற்கு சிறந்த **உதாரணமாக பிரான்சைக் குறிப்பிடலாம். இதற்கு மேலதிகமாக தற்போது இலங்கை உட்பட பல்கேரியா, லித்துவேனியா, மொசபத்தேனியா, மடகஸ்கார், மாலி, மொசாம்பிக், ரூமேனியா ஆகிய நாடுகளளைக் குறிப்பிடலாம்.**

**01. ஜனாதிபதி மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்படல் :**

(உ - ம்) :

i) பிரான்சிய ஜனாதிபதி 05 வருட பதவிக் காலத்துக்கு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகிறார்.

ii) இலங்கை ஜனாதிபதி அரசியல் அமைப்பின் 19வது திருத்தத்தின் படி 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுகிறார்.

**02. ஜனாதிபதிக்கு குறிப்பிடத்தக்களவு அதிகாரங்கள் காணப்படுகின்றன :**

(உ - ம்) :

i) பிரான்சிய ஜனாதிபதி அரசினதும், அரசாங்கத்தினதும், நிறைவேற்றுத்துறையினதும் தலைவர் ஆவார். ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதம தளபதியுமாவார். முழு அரசாங்க சேவையையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்.

ii) இலங்கையின் ஜனாதிபதி அரசின் தலைவரும், அரசாங்கத்தின் தலைவரும், முப்படைகளின் தலைவரும், அமைச்சரவையின் தலைவரும் ஆவார். அரசியல் அமைப்பின் 19வது திருத்தத்தின்படி பிரதம மந்திரியை நியமிப்பார். ஆனால் பதவி அகற்ற முடியாது.

**03. அதிகாரம் கொண்ட பிரதமர் மற்றும் அமைச்சரவை ஒன்று ஜனாதிபதிக்கு நிகராக காணப்படுதல் :**

ஜனாதிபதி மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுவது போல பிரதமரும் பாராளுமன்றத்திலிருந்து ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார். இவர்கள் இரண்டு பேரும் சமமான அதிகாரங்களைக் கொண்டவர்களாக விளங்குவர். இருந்தாலும் இலங்கை, பிரான்ஸ் போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில் ஜனாதிபதிக்கு சற்று அதிகாரம் கூடுதலாக உள்ளது என விளங்குகின்றது.

**04. பிரதமர், அமைச்சர்கள் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படல் :**

பிரதமர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார். பிரதமரின் சிபாரிசின் பெயரில் அமைச்சர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர்.

(உ - ம்) :

i) பிரான்சில் பிரதமர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார். ஆனால் பதவி நீக்கம் செய்ய

முடியாது. பிரதமரின் பரிந்துரையின் பெயரில் அமைச்சரவையின் அமைச்சர்கள், ஜனாதிபதியினால் நியமிக்கப்படு கின்றனர். அமைச்சர்கள் பதவி ஏற்றதும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலக வேண்டும்.

ii) இலங்கையில் பிரதமர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றார். ஆனால் அரசியல் (1978) அமைப்பின் 19ம் திருத்தத்தின்படி ஜனாதிபதி பிரதமரை பதவி நீக்கம் செய்ய முடியாது. அமைச்சரவையின் அமைச்சர்கள் பிரதமரின் ஆலோசனையின் பெயரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர்கள் பதவி ஏற்றதும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டிய அவசியமில்லை.

**05. பிரதமரும் அமைச்சர்களும் பாராளுமன்றத்தினால் நம்பிக்கை இல்லாப் பிரேரணை மூலம் பதவி நீக்கப்படல்:**

(உ - ம்) :

பிரான்சின் பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையான தேசிய சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி விட்டால் பிரதமரும் அவரது அமைச்சரவையும் பதவி விலக வேண்டும். பிரான்ஸ் நாட்டில் அமைச்சரவை அனேகமாக கூட்டு அமைச்சரவையாகவே அமைகின்றது. இலங்கையிலும் இந்த நிலையே காணப்படுகின்றது.

**06. ஜனாதிபதி குற்றப் பிரேரணை மூலம் பதவி நீக்கப்படுதல் :**

(உ - ம்) :

பிரான்ஸின் ஜனாதிபதி தேசத்துரோக நடவடிக்கைகளுக்காக மட்டுமே விசாரணை செய்யப்பட்டு பதவிநீக்கம் செய்யப்படுவார். உயர் நீதிமன்றத்தில் குற்ற விசாரணை செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் உள்ள இரு சபைகளிலும் அசைக்க முடியாத பெரும்பான்மை ஆதரவுடன் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டால் பதவி நீக்கப்படுவார்.

**07. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியதில்லை :**

(உ - ம்) :

i) பிரான்ஸ் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர் பாராளுமன்ற உறுப்பினர் அல்லர் இவர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றார்.

ii) இலங்கை ஜனாதிபதி அரசியல் அமைப்பின் 19வது திருத்தத்தின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும். ஆனால் இவர் பாராளுமன்ற உறுப்பினர் அல்லர். அதே போல இவர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றார்.

**08. பிரதமரும் அமைச்சர்களும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும் :**

இருந்தாலும் நிறைவேற்றுத்துறை வெற்றி பெறுவதற்கு சட்டத்துறையின் பெரும்பான்மை பெற்ற குழுவுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஒத்துழைப்புசார் நடத்தையொன்று அவசியமாகும். ஜனாதிபதி ஒரு கட்சியிலும் சட்டத்துறையின் பெரும்பான்மை இன்னொரு அரசியல் கட்சியிடமும் காணப்படும் போதே இது விசேடமாக தேவைப்படுகின்றது.

## பகுதி II

**04. இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றத்தில் டொனமூர் அரசியல் யாப்புடன் தொடர்புடைய பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை விளக்குக.**

**(அ) தேசாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்**

**(ஆ) நிர்வாகக் குழு முறையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்**

**(இ) அரசாங்க சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்**

### (அ) தேசாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

டானமூர் அரசியல் திட்டத்தின்படி அரசாங்கத்தின் அச்சாணியாக தேசாதிபதி விளங்கினார். இவர் பிரித்தானிய முடியின் இலங்கைப் பிரதிநிதியாகவும் விளங்கினார். பிரித்தானியாவின் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு கட்டுப்படுபவராகவும் அவருக்குப் பொறுப்புக் கூறக்கூடியவராகவும் விளங்கினார். இவர் பிரித்தானிய முடியினால் நியமிக்கப்படுவார். இவரது பதவிக்காலம் வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. பிரித்தானிய முடி விரும்பும்வரை பதவி வகிக்கக் கூடியவராக இவர் விளங்கினார். 1931க்கு முன்பு தேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த குறிப்பிட்டளவு அதிகாரங்கள் டொனமூர் யாப்பின் கீழ் குறைக்கப்பட்டாலும் தேசாதிபதியே அரசாங்க முறையில் முக்கிய நபராகத் திகழ்ந்தார். அவர் பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருந்தார்.

**1. சடங்கு முறையான மற்றும் நெருக்கடி நிலைகுட்படாத அதிகாரங்கள் :-**

அரசின் இலட்சினையை இடுதல், குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தல், முப்படைகளினதும் பிரதம தளபதியாகச் செயற்படல், வெளிநாட்டு விவகாரங்களைச் செயற்படுத்தல், சமூக மற்றும் விழாச் செயற்பாடுகளில் பங்கு பற்றல் போன்றன இவ் அதிகாரத்தின் கீழ் இடம் பெறுகின்றன.

**2. அரசாங்க சேவையோடு தொடர்பான அதிகாரங்கள் :-**

நாட்டின் சிவில் சேவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பெற்றிருந்தார். அதன்படி பிரித்தானிய மன்னர் பிராணின் ஆலோசனையின் பேரில் அரசாங்க அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி நீக்கம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற அதிகாரங்களை பெற்றிருந்தார். அரசாங்கசபை உறுப்பினர்களின் தலையீட்டிலிருந்து சிவில் சேவையை விடுவித்து பக்கச்சார்பற்ற சேவையைக் கொண்டு நடத்தவும் சிவில் சேவை ஒழுக்கத்தைப் பாதுகாக்கவும் இவ்வதிகாரம் வழங்கப்பட்டது.

**3. நிறைவேற்று அதிகாரங்களும் உறுதிப்படுத்தும் அதிகாரங்கள் :-**

நிறைவேற்றுக் கருமங்களை நடைமுறைப்படுத்தும் முழு அதிகாரமும் தேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அவர் அமைச்சரவையினதும் அரசாங்க காரியதரிசி களினதும் உதவியைப் பெறவேண்டியிருந்தது. அவர் பெற்றிருந்த நிறைவேற்று அதிகாரங்களுள் உறுதிப்படுத்தும் அதிகாரம் முக்கியமா னதாகும். அதன்படி அரசாங்க சபையில் நிறைவேற்றப் பட்டு அவரின் இறுதி அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்களைப் பின்வரும் ஏதேனும் ஒரு வழிமுறையைக் கடைப்பிடிப்பதற்கு உரிமை பெற்றிருந்தார்.

1. அனுமதி வழங்குதல்.
2. முடியின் அங்கீகாரத்துக்கு தரித்து வைத்தல்.
3. செல்லுபடியாகும் தினத்தை 06 மாத காலத்தால் பிற்போடுதல்.
4. மீண்டும் பரிசீலனை செய்யுமாறு குறிப்பிட்டு அரசாங்க சபைக்குத் திருப்பி யனுப்புதல்.
5. 2 / 3 பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும் என்று திருப்பி அனுப்புதல்.
6. அனுமதி வழங்காது இரத்துச் செய்தல், பின்வரும் மசோதாக்கள் மீது இரத்து அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியும்.
   - அரசாங்க சேவையோடு தொடர்பான மசோதாக்கள்.
   - நாட்டின் நிதி நிலையைப் பாதிக்கும் மசோதாக்கள்.
   - வெளிநாட்டு வர்த்தகத்தைப் பாதிக்கும் மசோதாக்கள்.
   - ஏதேனும் ஒரு ஜனக்குழுவுக்கு விசேட சலுகைகளை வழங்கும் மசோதாக்கள்.
   - சிறுபான்மையினரின் பலத்த எதிர்ப்புகளுக்கு உட்படும் மசோதாக்கள்.
   - நீதித்துறையுடன் தொடர்பான மசோதாக்கள்.
   - நாட்டின் பாதுகாப்போடு தொடர்பான மசோதாக்கள்.

**4. விசேட நிலைகளில் சட்டவாக்கம் செய்யும் அதிகாரங்களும் உறுதிப்படுத்தும் அதிகாரங்களும் :-**

இதன் கீழ் பொதுச் சட்டம், சிறந்த ஆட்சி, பொதுஜன நம்பிக்கை என்பவற்றை நிலைநிறுத்த வேண்டும் என்று தேசாதிபதி கருதும் போது தமது விருப்பப்படி சட்டங்களைப் பிறப்பிப்பதற்கு தேசாதிபதி அதிகாரம் பெற்றிருந்ததுடன் அதற்கு அரசாங்க சபையின் அங்கீகாரம் தேவைப்படவில்லை.

**5. அவசரகால நிலைகளில் விசேட அதிகாரங்கள் :-**

அவசர கால நிலை தோன்றும் போது எந்தவொரு இலாகாவினதும் பரிபாலனத்தை தனக்குக் கீழ் கொண்டுவரும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

**6. சட்டத்துறையோடு தொடர்பான அதிகாரங்கள் :-**

1. அரசாங்க சபையின் புதிய தவணைகளை ஆரம்பித்து வைத்தல்.
2. அவசர நிலைகளில் அரசாங்க சபையில் உரைநிகழ்த்துதல்.
3. அரசாங்க சபையைக் கலைத்தல் - தேவைப்படும் என்று கருதும் சகல சந்தர்ப் பங்களில் அல்லது பதவிக்காலம் முடிவுறும் போது அல்லது அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை நிறைவேற்றப் பட்டிருக்கும் போது அரசாங்க சபையை கலைத்து விடலாம்.
4. அரசாங்க சபைக்கான நியமன உறுப்பினர்களை நியமித்தல்

**இலங்கையின் அனுபவங்கள்**

மேற்குறிப்பிட்ட அதிகாரங்களுள் பெரும்பாலானவற்றை தேசாதிபதி பிரயோகிக்கவில்லை. நிதமும் அனுமதி வழங்கக்கூடாத விடயங்கள் மற்றும் தலைப்புக்கள் உள்ள டங்கிய விடயங்களை கவனத்தில் எடுப்பதற்கும் மசோதாக்களுக்கு அனுமதி வழங்குவதனை தாமதப்படுத்துவதற்கும் இவ்வதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டன.

அனுமதி வழங்குவதனை தாமதப்படுத்துவதன் கீழ் தாமதப்படுத்தப்பட்ட சில மசோதாக்களை மட்டும் மீண்டும் திருத்துமாறு வேண்டப்பட்டதன் பின்னர், மீண்டும் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. 1936 கிராம சபைச் சட்டம் இவ்வாறு பின்னர் திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும்.

பிரித்தானிய அரசாங்கத்தின் பரிசீலனைக்காக சில மசோதாக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றுள் 03 மட்டுமே முழுமையாக நிராகரிக்கப்பட்டன. அவை முரண்பாட்டு நிலைமையினைத் தோற்றுவிக்காமல் மந்திரிமார் சபை யினதும் அரசாங்க சபையினதும் உடன்பாட்டோடு இடம்பெற்ற சந்தர்ப்பங்களாகும். எந்தவொரு மசோதாவுக்கும் எதிராக இரத்து அதிகாரம் பிரயோகிக்கப்பட வில்லை. எந்தவொரு செலவுத் தலைப்பையும் தேசாதிபதியின் அதிகாரத்தை பயன்படுத்தி நிறைவேற்றப்படவில்லை. யுத்த காலத்தில் அவசரகால நிலை செய்யப்பட்ட பொழுது, மந்திரமார் ஆலோசனையுடன் தேசாதிபதி தமது அவசரகால அதிகாரங்களை பிரயோகித்தார்.

### (ஆ) நிர்வாகக் குழு முறையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்

டொனமூர் யாப்பின் 34ம் சரத்தின்படி நிர்வாகக்குழு முறை தாபிக்கப்பட்டது. அரசாங்க சபை தனது உறுப்பினர்களிடையே நடத்தும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் 07 நிர்வாகக் குழுக்களை தெரிவுசெய்ய வேண்டும் என்றும் ஒவ்வொரு குழுவும் முடிந்தளவு சமமான எண்ணிக்கையினரைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் டொனமூர் அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்பில் சபாநாயகரும் 3 அரசாங்க காரியதரிசிகளும் கலந்து கொள்ளமாட்டார்கள். அதனால் அந்த நிர்வாகக் குழுவிலும் அங்கத்துவம் பெறவில்லை. எந்தவொரு உறுப்பினரும் ஒன்றுக்கு மேற்பட்ட நிர்வாகக் குழுவில் அங்கத்துவம் பெற முடியாது. இவ்வகையில் அரசாங்க சபையில் 61 அங்கத்தவர் களுள் 3 அரசாங்க காரியதரிசிகளையும் சபாநாயகரையும் தவிர்ந்த எஞ்சிய உறுப்பினர்கள் 7 நிர்வாகக் குழுக்களாக பிரிந்ததோடு ஒவ்வொரு குழுவும் 8 இற்கு மேற்படாத 7 இற்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

1. உள்நாட்டு அலுவல்கள் - 7
2. காணி விவசாயம் - 8
3. உள்ளூராட்சி - 8
4. சுகாரதாரம் - 7
5. தொழில், கைத்தொழில், வர்த்தகம் - 8
6. கல்வி - 7
7. போக்குவரத்து - 8

நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களின் இரகசிய வாக்கின் மூலம் தலைவர் தெரிவு செய்யப்பட்டார். தலைவர் அறிவித்த போது அல்லது நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுள் மூவர் வேண்டி நின்ற போது அதன் செயலாளர் அந்நிறைவேற்றுக் குழுவை கூட்டுவார். நிறைவேற்றுக் குழுவுக்குரிய எந்தப்பொறுப்பையும் நிறைவேற்று வதற்கு அதன் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட மேலதிக குறைந்த பட்சம் 3 உறுப்பினர்களாவது சமூகமளிக்க வேண்டும். ஒரு நிறைவேற்றுக் குழுவிடமுள்ள சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் சமூகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மை வாக்குகளினாலேயே தீர்மானங்களை எடுக்க வேண்டும். நிறைவேற்றுக் குழுவொன்றுக்குச் சமூகமளிப்பதற்கும் அதன் உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்துவதற்கும் பிரதம காரியதரிசிக்கு அதிகாரமுண்டு.

**நிர்வாகக் குழுவின் பணிகள்**

1. நிர்வாகக் குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைகளை மேற்பார்வை செய்தல்.
2. இலாகாக்களின் சில அதிகாரிகளை நியமித்தல் தொடர்பான விதப்புரைகளை வழங்குதல்.
3. சம்பந்தப்பட்ட இலாகாவுக்கு ஒப்படைக்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக கொள்கைகளை வகுத்தல்.
4. இலாகாவுக்குரிய ஏனைய நிறைவேற்று மற்றும் நிருவாக விடயங்களை கவனித்தல்.
5. நிறைவேற்றுத் குழுக்களுக்குரிய இலாகாக்களின் வருடாந்த மதிப்பீடுகளையும் மற்றும் மேலதிக மதிப்பீடுகளையும் தயாரித்தல்.
6. நிறைவேற்றுக் குழுவின் விடயதானத்துடன் தொடர்பான சட்டமுறைகளை சீர்தூக்கிப் பார்த்தல்.

எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அவ்வாறே நிறைவேறியது என்பதை நிருவாகக் குழுக்களின் செயற்பாடுகளிலிருந்து கண்டறியலாம். உதாரணமாக 7/10 பங்கு நிருவாகப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டமையால் எதிர்பார்த்தது போன்று இலங்கையர் நிருவாக விடயங்களில் ஈடுபட்டனர். சுதந்திர இலங்கையின் ஆட்சியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவைப்பட்ட தலைவர்களைப் பயிற்றுவிப்பதிலும் அதன் மூலம் பயன் ஏற்பட்டது. நிர்வாகக் குழுக்களின் தலைவர் பதவியை வகித்த D.S. சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, சேர் ஜோன் கொத்தலாவல, SWRD. பண்டாரநாயக்க போன்றோர் சுதந்திர இலங்கையில் பிரதமர் பதவியை வகித்தமையிலிருந்து நிருவாகக் குழு முறையின் மூலம் ஆட்சி முறை தொடர்பாக எந்தளவு பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர். என்பதை அறியலாம். மேலும் அக்காலத்தில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த தீவிர இடதுசாரி அரசியலை பாராளுமன்ற சனநாயகமான நிலைக்குட்படுத்துவதிலும் நிருவாகக் குழு முறை பாதிப்புச் செலுத்தியது.

சிறுபான்மை ஜனக்குழுக்கள் ஆட்சி முறையில் பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்குவதிலும் நிருவாகக் குழு முறை பணியாற்றியது. தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமனம் பெற்ற சகல உறுப்பினர்களும் ஏதேனும் ஒரு நிர்வாகக் குழுவில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றதன் மூலம் இந்நிலை ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக T.P. ஜாயா, M.C.M. கலீல் என்போர்கள் 1936ம் ஆண்டு தேர்தலின் பின்னர் நிருவாகக்குழு ஆட்சிமுறையில் பங்கேற்று பயிற்சி பெற்றனர். இந்தப் பயிற்சி சுதந்திர இலங்கையில் அவர்கள் அமைச்சர்களாக பதவிவகிப்பதற்கு காரணமாகியது. 1947ம் ஆண்டு அமைச்சரவையில் T.P. ஜயாவும் 1952ம் ஆண்டு அமைச்சரவையில் M.C.M. கலீலும் தொழிலமைச்சர்களாக தெரிவு செய்யப்பட்டமையை குறிப்பிடலாம். மேலும் நிர்வாகக் குழு முறையினால் தனிப்பட்ட மற்றும் பின்வாங்கும் உறுப்பினர்களின் முக்கியத்துவமும் அதிகரித்தது. அரசக் கொள்கைகளைத் தீர்மானித்தல், அவற்றை நடைமுறைப்படுத்தல், சுயாதீனமான முறையில் தமது கருத்துக்களைத் தெரிவித்தல், கட்சிக் கட்டுப்பாட்டுக்குட் படாது சுதந்திரமாகச் செயற்படல் ஆகிய விடயங்கள் ஊடாகத் தனிப்பட்ட உறுப்பினர்களின் முக்கியத்துவம் அதிகரித்தது.

**டொனமூர் அரசியலமைப்பு உருவாக்கிய நிர்வாகக் குழு முறையில் இலங்கைத் தலைவர்கள் நிர்வாக மற்றும் அரசியல் பயிற்சிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகள் இருந்தாலும் கூடியளவு பயிற்சிகளைப் பெற முடியாமற் போய்விட்டது. இதற்கான காரணங்கள்.**

1. நிர்வாகக்குழு முறையின் முக்கியமான அதிகாரங்கள் அரசாங்க காரியதரிசிமார் பொறுப்பிலிருந்தமை.

2. பிரதம காரியதரிசி, வரவு செலவுத் திட்டத்தில் நிர்வாகக் குழுக்களுக்கு போதுமான பணத்தை ஒதுக்கவில்லை.
3. பிரதம காரியதரிசி போதுமான அளவு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யாமை.
4. நீதி பரிபாலனம் தேசாதிபதிக்கு பொறுப்புள்ள சட்டக் காரியதரிசியிடம் இருந்தது.
5. தேசாதிபதியின் ஒதுக்கு அதிகாரங்கள்.

**(இ) அரசாங்க சபையின் அதிகாரங்கள் மற்றும் நிலை**

டொனமூர் யாப்பின் கீழ் ஒரு மன்றச் சட்டசபையே நிறுவப்பட்டது. அது அரசாங்க சபை என்று அழைக்கப்பட்டது. அது 61 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 50 பேர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். 08 பேர் பெயர்குறிக்கப்பட்டு நியமிக்கப் பட்டனர். எஞ்சிய மூவரும் உத்தியோக முறையில் இடம் பெற்ற அரசாங்க காரியதரிசி களாவர்.

**அரசாங்க சபை**

| பதவிவழி உறுப்பினர் (03 பேர்) | நியமன வழி உறுப்பினர்கள் (08 பேர்) | தெரிவு வழி உறுப்பினர்கள் (50 பேர்) |
|---|---|---|
| முடியின் சிபாரிசின் படி தேசாதிபதியினால் நியமனம் | சிறுபான்மை சார்பாக தேசாதிபதியால் நியமிக் கப்பட்டனர் | பிரதேச வாரித் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். |
| 03 அரசாங்க உத்தியோகத்தர் | - ஐரோப்பியர் - 04 | 50 தொகுதிகள் |
| - பிரதம காரியதரிசி | - இந்தியர் - 01 | - மேல் மாகாணம் -14 |
| - நிதிக் காரியதரிசி | - முஸ்லிம் - 01 | - மத்திய மாகாணம் - 8 |
| - சட்டக் காரியதரிசி | - பறங்கியர் - 01 | - தென் மாகாணம் - 7 |
| | - மலாயர் - 01 | - கிழக்கு மாகாணம் - 2 |
| | | - வட மாகாணம் - 4 |
| | | - வடமேல் மாகாணம் - 6 |
| | | - வட மத்திய மாகாணம் - 1 |
| | | - ஊவா மாகாணம் - 3 |
| | | - சம்பிரகமுவ மாகாணம் - 5 |

**1931 தேர்தலில் நியமன அங்கத்தவர்கள்**

1. மேஜர். *J.W.* ஒல்பீல்ட்
2. *Dr.* சொக்மன்
3. *T.I.* விலியேஸ்
4. *M.J.* கேரி
5. *I.X.* பெரேரா
6. *M.K.* சால்டின்
7. சேர் ஸ்ரீவாட்சினிதர் *KC*
8. *E.C.* விலியேஸ்

**1936 தேர்தலில் நியமன அங்கத்தவர்கள்**

1. *M.J.* கேரி
2. *F.A.* கிரிபித்
3. *T.B.* ஜாயா
4. *F.A.* பாவித்
5. *I.X.* பெரேரா
6. *A.R.* அப்துல் ராசீக்
7. *V.G.* விலியேஸ்
8. *G.H.H.* வில்லே

அரசாங்க சபையின் பதவிக்காலம் 05 வருடங்களாகும். உரிய காலத்தில் கலைக்கப்பட்டால் (05 வருடத்தின் முடிவின் கலைக்கப்பட்டால்) ஒரு தேர்தல் நடாத்தப்பட்டு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். பின்வரும் சந்தர்ப்பங்களில் பதவிக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் அரசாங்க சபையைத் தேசாதிபதியால கலைக்க முடியும்.

1. அரச கட்டளையின் 18ம் சரத்தின்படி தேசாதிபதி விரும்பும் ஒரு சந்தர்ப்பத்தில்.
2. அரச கட்டளையின் 69(2)ஆம் சரத்தின்படி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கசபை இரண்டாவது முறையும் நிராகரித்திருக்கும் போது.
3. வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை அரசாங்க சபையில் சமர்ப்பித்து 03 மாத கால முடிவுறுவதற்கு முன்னர் அரசாங்க சபை அதனை நிறைவேற்றாதிருக்கும் போது.
4. அரசாங்க சபை அமைச்சரவைக்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்றி இருக்கும் போது.

**அரசாங்க சபையின் அதிகாரம்**

அரசாங்க சபை (1) நிவேற்று அதிகாரம் (2) சட்டவாக்க அதிகாரம் என்ற இரு வகையான அதிகாரங்களைப் பெற்றிருந்தன. நிறைவேற்றுக் குழுக்களின் விடயப்பரப்பு மற்றும் பணிகள் சார்பாக நிருவாக அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் அரசாங்க சபைக்கு வழங்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரமாகும். அவ்வதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்க சபை நிறைவேற்றுத் தவணைகளை புறம்பாக நடத்த வேண்டும். இலாகா நிருவாகம் தொடர்பாக நிறைவேற்றுக் குழுக்கள் எடுக்கும் தீர்மானங்களை அமைச்சர் அரசாங்க சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்க சபை அவற்றை பரிசீலிக்க வேண்டும். அரசாங்க சபை அவற்றைப் பரிசீலனை செய்த பின்னர்.

1. ஒன்றில் அதனை ஏற்றுக் கொள்ள முடியும்.
2. அல்லது நிராகரிக்க முடியும்.
3. அல்லது மீண்டும் பரிசீலனை செய்யுமாறு சம்மந்தப்பட்ட நிறைவேற்றுக் குழுக்களுக்குத் திருப்பி அனுப்ப முடியும்.

எவ்வாறாயினும் சில சந்தர்ப்பங்களில் மட்டுமே அரசாங்க சபை நிறைவேற்றுப் பணிகளுக்காகக் கூடியது. அரச கட்டளையின் 72ஆம் சரத்துப்படி அரசாங்க சபை சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்றிருந்தது. அதன்படி நாட்டின் சமாதானத்தையும் ஒழுக்கத்தையும் நல்லாட்சியையும் பேணுவதற்கு சட்டவாக்கம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றி ருந்தது. இதன்படி சட்ட ரீதியாக அரசாங்க சபை பரவலான அதிகாரத்தைப் பெற்றிருந் தாலும் நடைமுறையில் அவ்வாறு இடம்பெறவில்லை. சட்டவாக்கத்தில் அரசாங்க சபை இறைமை அதிகாரத்தை பெறவில்லை. ஏனெனில் தேசாதிபதி சட்டங்களுக்கு சம்மதமளித்து கையொப்பமிடல், அவசரகால நிலைமைகளில் சட்டவாக்க அதிகாரத்தினை தேசாதிபதி தானே எடுத்துக் கொள்ளுதல், தேசாதிபதி அரசாங்க சபையின் சம்மதத்துடன் தானே சட்டங்களை இயற்றக்கூடியதாயிருத்தல், டொனமூர் அரசியல் திட்டத்திற்கு எதிராக சட்டமியற்ற முடியாதிருத்தல், பிரித்தானிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டமியற்ற முடியாதிருத்தல், இன மத சமூகங்களை பாதிக்கின்ற சட்டங்களை இயற்ற முடியாதிருத்தல் என்பன அரசாங்க சபையின் சட்டவாக்க அதிகாரத்துக்கு தடையாக இருந்ததனால் அரசாங்க சபை இறைமையற்றது.

கோட்பாட்டு ரீதியாக இந்நிலை காணப்பட்டாலும் நடைமுறையில் அரசாங்க சபை மீதான அவ்வரையறைகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தன என்று கூற முடியாது. யாப்பு வரையறைகள் நடைமுறைப்படுத்தப் படாமையினால் அரசாங்க சபை தனது அதிகாரங்களை சுதந்திரமாக பயன்படுத்தியது. டொனமூர் காலத்தின் இறுதிப் பகுதியில் அரசாங்க சபை ஒரு டொமீனியன் அந்தஸ்த்தைப் பெற்ற ஒரு நாட்டின் பாராளுமன்றின் செயற்பாட்டுக்கு ஒத்த வகையில் செயற்பட்டது.

**05. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை 1978 ஆம் ஆண்டு யாப்போடு தொடர்புபடுத்தி ஆராய்க.**

**(அ) ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை**

**(ஆ) 18ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் நிலை**

**(இ) ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றும் வழிமுறை**

**(அ) ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறை**

நவீன ஜனநாயக அரசாங்க முறைகளில் நிறைவேற்றுத் துறையை தெரிவு செய்வதில் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பாராளுமன்ற அரசாங்க முறைகளில் நிறைவேற்றுத் துறையான பிரதமர் உள்ளிட்ட மந்திரிசபை அரசின் தலைவரால் சட்டத்துறையிலிருந்து நியமிக்கப்படுகிறது. ஜனாதிபதி அரசாங்க முறைகளில் பிரதான நிறைவேற்றாளரான ஜனாதிபதி மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ மக்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகிறார். ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி மறைமுகமாக மக்களால் தேர்தல் கல்லூரி மூலம் நான்கு வருடத்திற்கு ஒரு முறை தெரிவுசெய்யப்படுகின்றார்.

மூல யாப்பின் உறுப்புரை 30(2) இன்படி இலங்கை குடியரசு ஜனாதிபதி மக்களால் நேரடியாக விகிதாசார தனிமாற்று வாக்குமுறை மூலம் தெரிவு செய்யப் படுவார். அவரது பதவிக்காலம் ஆறு வருடங்களாகும். ஆனால் 19ம் திருத்தம் அப்பதவிக்காலத்தை ஐந்து வருடங்களாக குறைத்துள்ளது.

மூல யாப்பின் உறுப்புரை 31(02) இன்படி ஜனாதிபதி பதவிக்கு இருமுறை தெரிவு செய்யப்பட்ட எவரும் பின்னர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடியாது எனக் குறிப்பிட்ட போதிலும் இந்த வரையறை 18ம் திருத்தத்தில் இல்லாதொழிக்கப்பட்டது. 18ம் திருத்தத்தின் படி எப்பிரஜையும் எத்தனை தடைவையும் ஜனாதிபதி பதவியை வகிக்கலாம். ஆனால் 19ம் திருத்தச் சட்டம் இவ்வேற்பாட்டை இல்லாதொழித்து ஜனாதிபதியானவர் 02 தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்ற வரையறையை மீண்டும் விதித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

01. 35 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் (19ம் திருத்தம்).
02. வாக்காளராக இருப்பதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்தல்.
03. மக்களால் இரு தடவைகள் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்படாதவராக இருத்தல்.
04. குற்றப் பிரேரணையின் மூலம் பதவி அகற்றப்படாதவராக இருத்தல்.
05. பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவராக இல்லாதிருத்தல்.

வாக்காளர்கள் ஜனாதிபதித் தேர்தலிலே பின்வரும் வழிமுறையில் வாக்களிக்க வேண்டும்.

(அ) ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் போட்டியிடும் போது வாக்காளர்கள் தமது அடிப்படை வாக்கிற்கு மேலதிகமாக இரண்டாவது விருப்பையும் தெரிவிக்கலாம்.

(ஆ) மூன்று வோட்பாளர்களுக்கு மேல் போட்டியிடும் போது வாக்காளர் தமது அடிப்படை வாக்கிற்கு மேலதிகமாக இரண்டாம் மூன்றாம் விருப்புக்களையும் தெரிவிக்கலாம்.

ஒரு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியாளரைத் தெரிவு செய்தல் என்பது ஒரு சிக்கலான கருமமாகும். சிலவேளை வாக்குக் கணிப்புகளைப் பல தடவைகள் மேற்கொள்ள வேண்டியேற்படும்.

01. முதற் கணிப்பின் போது செல்லுபடியான மொத்த வாக்குகளில் அரைவாசிக்கு (50%) மேல் வாக்குகளைப் பெற்றவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். இது அறுதிப் பெரும்பான்மை முறை என்று அழைக்கப்படுகின்றது.

02. எனினும் முதற் கணிப்பில் எவரும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிட்டால் இரண்டாவது கணிப்பு மேற்கொள்ளப்படும். அங்கு விருப்பு வாக்குகள் எண்ணப் படுவதற்காக அதி கூடுதலான வாக்குகளைப் பெற்ற முதலாவது மற்றும் இரண்டாம் வேட்பாளர்களைத் தவிர ஏனைய வேட்பாளர்கள் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு அவர்களின் வாக்குப் பத்திரத்தில் இடம்பெறும் இரண்டாவது விருப்பு, போட்டியில் தொடர்ந்து தரித்திருக்கும் முதலிரு வேட்பாளர்களுள் எவருக்கு வழங்கப்பட்டிருக்குமோ அவ்வாக்கு அவருக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்பட்டு அவரின் முதல்விருப்பு வாக்குகளின் தொகையோடு சேர்க்கப்படும்.

03. இரண்டாவது கணிப்பினிலும் வெற்றியாளரைத் தெரிவு செய்ய முடியாது போயின் மூன்றாவது விருப்பும் எண்ணப்படும். அச்சந்தர்ப்பத்தில் இரண்டாவது விருப்பு எண்ணப்பட்ட வாக்குப் பத்திரங்களிலுள்ள மூன்றாவது விருப்புக்கள் தரித்திருக்கும் வேட்பாளர்களுள் எவருக்கு வழங்கப்பட்டிருக்குமோ அது அவரின் முன்னைய வாக்குகளின் தொகையோடு சேர்க்கப்படும். அவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்ட வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ள வேட்பாளர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படும்.

04. தொடர்ந்து போட்டியில் தரித்துள்ள இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றிருப்பின் திருவுளச் சீட்டின் மூலம் மேலதிகமாக ஒரு வாக்கினைப் பெற்றுக்கொடுத்து வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார்.

இலங்கையில் 1982, 1988, 1994, 1999, 2005, 2010, 2015, 2019 ஆண்டுகளில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான விகிதாசாரதனிமாற்று வாக்கு முறை அடிப்படையிலான தேர்தல்கள் நடந்துள்ளன. இந்த 08 தேர்தல்களின் போதும், அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் அறுதியான பெரும்பான்மை முதலாம் சுற்றின் போதே வெற்றியாளருக்கு கிடைத்திருந்தது. ஆதலால் விருப்பு வாக்கின் மீது எந்தவொரு வேட்பாளரும் தங்கியிருக்கவும், இல்லை அது இதுவரை கணிப்பிடப்படவும் இல்லை. இதனை பின்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது.

| ஆண்டு | வேட்பாளர்கள் | மொத்த வாக்குகள் | சதவீதம் | கட்சி |
|---|---|---|---|---|
| 1982 | திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன | 3,450,811 | 52.91% | UNP |
| 1988 | திரு. ரணசிங்க பிரேமதாஸ | 2,569,199 | 50.43% | UNP |
| 1994 | திருமதி. சந்திரிக்கா குமாரதுங்க | 4,709,205 | 62.28% | PA |
| 1999 | திருமதி. சந்திரிக்கா குமாரதுங்க | 4,312,157 | 51.12% | PA |
| 2005 | திரு. மஹிந்த ராஜபக்ஷ | 4,847,152 | 50.29% | UPFA |
| 2010 | திரு. மஹிந்த ராஜபக்ஷ | 6,015,934 | 57.88% | UPFA |
| 2015 | திரு. மைத்திரிபால சிறிசேன | 6,217,162 | 51.28% | NDF |
| 2019 | திரு. கோட்டாபய ராஜபக்ஷ | 6,924,255 | 52.25% | SLPP |

## இம்முறையில் காணப்படும் அனுகூலங்கள்

01. இது எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறைமையோடு (Single Member Lurality - SMP) ஒப்பிடும் போது குறைந்தளவிலேயே வாக்குகள் வீணாக்கப்படுகின்றது.
02. வெற்றி பெற்ற வேட்பாளர் குறைந்தது வாக்காளரின் 50% தினரின் உதவியை பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதால் சமூகத்தின் விரிவான பரப்பின் எண்ணங்களும், கருத்தியல்களும் இறுதிப் பெறுபேற்றில் செல்வாக்குச் செலுத்த முடிதல்.
03. வெற்றிபெற்ற அபேட்சகர் குறைந்தது 50% இனைப் பெற்றாலும் கூட தனிகட்சிப் பெரும்பான்மை அரசாங்கமொன்றை ஏற்படுத்துவதில்லை.

## ஜனாதிபதித் தேர்தலில் உள்ள குறைபாடுகள்

01. ஜனாதிபதிக்கான தேர்தலில் போட்டியிடும் உரிமை அனைத்துப் பிரஜைகளுக்கும் கொடுக்கப்பட வில்லை. அரசியல் சமத்துவம் என்ற ஜனநாயகப் பண்பு இங்கு பேணப்படவில்லை.
02. ஆட்சித் திறனுள்ள மக்களாதரவு பெற்ற ஒருவர் மூன்றாம் முறை ஜனாதிபதியாக நாட்டை வழிநடத்தும் வாய்ப்பும் மறுக்கப்பட்டிருக்கும்.
03. இம் முறை சிறிய கட்சிகளுக்கு இருக்கின்ற இடம் பகிரப்படுவதன் காரணமாக மேலும் பாரிய கட்சிகளுக்குப் பாதகமான நிலைமை ஒன்றை ஏற்படுத்தலாம்.
04. வெற்றிபெற வேண்டிய வேட்பாளர் வாக்காளரின் முதலாம் விரிப்பில் மட்டுமன்றி மேலதிக வாக்குகளை மீண்டும் பகிரப்படுவதன் மூலமும் தெரிவு செய்ய முடியுமாக இருத்தல்.

# 2019.11.16ம் திகதி நடைபெற்ற 8வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள்

| பெயர்கள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| 1. கோட்டாபய ராஜபக்ஷ | 6,924,255 | 52.25 |
| 2. சஜித் பிரேமதாஸ | 5,564,239 | 41.99 |
| 3. அநுரகுமார திஸாநாயக்க | 418,553 | 3.16 |
| 4. மஹேஸ் சேனநாயக்க | 49,655 | |
| 5. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் | 38,814 | |
| 6. ஆரியவன்ச திஸாநாயக்க | 34,537 | |
| 7. அஜந்த பெரேரா | 27,572 | |
| 8. ரொஹான் பல்லேவத்த | 25,173 | |
| 9. எஸ். அமரசிங்ஹ | 15,285 | |
| 10. மில்ரோய் பெர்ணான்டோ | 13,641 | |
| 11. எம்.கே. சிவாஜிலிங்கம் | 12,256 | |
| 12. சீலரத்ன தேரர் | 11,879 | |
| 13. அஜந்த டீ சொய்சா | 11,705 | |
| 14. அநுருத்த பொல்கம்பல | 10,219 | |
| 15. நாமல் ராஜபக்ஷ | 9,497 | |
| 16. கெட்டகொட ஜயந்த | 9,467 | |
| 17. துமிந்த நாகமுவ | 8,219 | |
| 18. புஞ்ஞானந்த தேரர் | 7,611 | |
| 19. சுப்பரமணியம் குணரத்னம் | 7,333 | 2.60 |
| 20. ஏ.எஸ்.பி. லியனகே | 6,447 | |
| 21. பியசிரி விஜயநாயக்க | 4,636 | |
| 22. அநுர டி சொய்சா | 4,218 | |
| 23. ரஜீவ் விஜேசிங்க | 4,146 | |
| 24. மொஹமது இலியாஸ் | 3,987 | |
| 25. சிறிதுங்க ஜயசூரிய | 3,944 | |
| 26. சரத் கீர்த்திரத்ன | 3,599 | |
| 27. சரத் மனமேனந்திரா | 3,380 | |
| 28. பன்னி விஜேவர்தன | 3,014 | |
| 29. அசோக வடிகமானகவ | 2,924 | |
| 30. ஏ.எச்.எம். அலவி | 2,903 | |
| 31. சமன் பெரேரா | 2,368 | |
| 32. பி.எம். எதிரிசிங்ஹ | 3,139 | |
| 33. சமரவீத வீரவன்னி | 2,067 | |
| 34. பத்தேகமகே நந்தமித்ர | 1,841 | |
| 35. கோரளகே சமனசிறி | 976 | |
| **அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்** | **13,387,951** | **83.72** |
| **செல்லுபடியான மொத்த வாக்குகள்** | **13,252,499** | **98.99** |
| **நிராகரிக்கப்பட்ட வாக்குகள்** | **135,452** | **1.01** |
| **பதியப்பட்ட மொத்த வாக்குகள்** | **15,992,096** | |

இந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ 52.25% வாக்குகளைப் பெற்று 7வது நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதோடு 2019.11.18 இல் பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமானமும் செய்துகொண்டார். இத்தேர்தலில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, நுவரேலியா போன்ற மாவட்டங்களில் சஜீத் பிரேமதாஸ வெற்றியீட்டியுள்ளார். மற்றைய எல்லா மாவட்டங்களிலும் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

## (ஆ) 18ஆம் மற்றும் 19ஆம் திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் நிலை

**அறிமுகம்**

1978 அரசியல் யாப்பு ஜனாதிபதி பதவியைச் சுற்றி அதிகாரங்களை கேந்திரப்படுத்தியுள்ளது. அதனால் ஜனாதிபதி யாப்பு ரீதியான சர்வாதிகாரியாக மாறக்கூடியவராக தென்படுகிறார். அரசியல் யாப்பின் 18ம் திருத்தம் அந்த யாப்பு ரீதியான சர்வாதிகாரத்துவத்துக்கு மேலும் உரமூட்டியது. ஆனால் 19ம் திருத்தச் சட்டம் ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்தி அப்பதவியின் சர்வாதிகாரத் தன்மையை கீழ்ப்படுத்தியுள்ளது.

1978 யாப்பின் மீது 2010 செப்டெம்பர் 07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட 18ஆம் திருத்தத்தின் மூலம் மூல யாப்பில் இருந்த ஜனாதிபதி நிலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. மூல யாப்பின் உறுப்புரை 30 (1) இல் குறிப்பிட்டிருந்தது போன்றே தொடர்ந்தும் ஜனாதிபதி அரசின் தலைவராகவும் நிறைவேற்றுத் துறையின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் ஆயுதப் படையின் தளபதியாகவும் இருந்தார்.

18 ஆம் திருத்தத்தின் கீழ் ஜனாதிபதிப் பதவியில் மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றம் என்னவெனில் பதவி வகிக்கக்கூடிய இரண்டு தவணைகள் என்ற வரையறை நீக்கப்பட்டமையாகும். அதன்படி ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு தகுதி பெற்ற எப்பிரஜையும் எத்தனை தடவையும் அப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட முடியும். மேலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்கவேண்டும்.

அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கு மூல யாப்பின் மூலம் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரத்தை கட்டுப்படுத்தும் வகையில் 17 ஆம் திருத்தம் நடவடிக்கை எடுத்தது. அத்திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவை 18 ஆம் திருத்தத்தின் கீழ் இல்லாதொழிக்கப்பட்டு அவ்விடத்தில் பாராளுமன்றப் பேரவை தாபிக்கப்பட்டது. அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கான ஆட்களை நியமிக்கும்பொழுது ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கவே பாராளுமன்றப் பேரவை தாபிக்கப்பட்டது. அதன்படி அரசாங்கத்தின் உயர் பதவிகளுக்கான ஆட்களை நியமிக்கும் பூரண அதிகாரம் மீண்டும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

2015 ஏப்ரல் 28 இல் நிறைவேற்றப்பட்ட 19 ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் ஜனாதிபதி வகித்த நிலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. மூல யாப்பின் 30 (01) உறுப்புரையில் குறிப்பிட்டது போன்றே அவரது நிலை தொடர்ந்தும் இடம்பெற்றது. மூல யாப்பின் உறுப்புரை 30 (02) இன்படி குடியரசின் ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுவார்.அவரது பதவிக்காலம் 6 வருடங்களாகும். 19ஆம் திருத்தம் அப்பதவிக் காலத்தை 05 ஆகக் குறைத்துள்ளது.

மூல யாப்பின் உறுப்புரை 31 (02) இன்படி ஜனாதிபதிப் பதவிக்கு இருமுறை தெரிவுசெய்யப்பட்ட எவரும் பின்னர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட முடியாது. இந்த வரையறை 18ஆம் திருத்தத்தில் இல்லாதொழிக்கப்பட்டது. 18ம் திருத்தத்தின் படி எப்பிரஜையும் எத்தனை தடவையும் ஜனாதிபதி பதவியை வகிக்கலாம். ஆனால் 19ஆம் திருத்தச்சட்டம் இவ்வேற்பாட்டை இல்லாதொழித்து பிரஜை ஒருவர் 2 தடவைகளுக்கு மேல் பதவிவகிக்க முடியாது என்ற வரையறையை மீண்டும் விதித்துள்ளது.

**ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்**

மூல யாப்பின் 33ஆம் 34ஆம் உறுப்புரைகள் ஜனாதிபதியின் அதிகாரங்களையும் பணிகளையும் குறிப்பிடுகின்றன. 19ஆம் திருத்தத்தில் மூல யாப்பின் உறுப்புரை 33 ஐ முழுமையாக அகற்றிவிட்டு புதிய உறுப்புரையை சேர்த்துள்ளது. அதன்படி உறுப்புரை 33 (01) ஜனாதிபதியின் பணிகளாவன,

அ. அரசியல் யாப்பினை பின்பற்றி பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ஆ. தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் விருத்தி செய்தல்.

இ. அரசியல் அமைப்பு பேரவை மற்றும் அத்தியாயம் VII அ வில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாட்டை எளிதாக்குதல்.

ஈ. தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலையும் மக்கள் தீர்ப்புக்களையும் நடத்துவதற்கு பொருத்தமான சூழலை உருவாக்கி உறுதிப்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட பணிகள் மூல யாப்பின் மூலம் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

19 ஆம் திருத்தத்தின் கீழ் உறுப்புரை 32 (03) இன் படி ஜனாதிபதி தமது பதவிக்குரிய அதிகாரத்தின் பேரில் 3 மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்றுக்கு சமூகமளிக்க வேண்டும். இது 18 ஆம் திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு மாற்றமாகும். இவ்வேட்பாடு மூல யாப்பில் இடம்பெறவில்லை.

19 ஆம் திருத்த சட்டத்தின் உறுப்புரை 33 (02) இன் படி ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்களும் பணிகளும் மூல உறுப்புரை 33 இல் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 19ஆம் திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 33 (02) ஓடு சேர்க்கப்பட்டிருந்த (உ) என்ற பந்தியில் ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்கும் அதிகாரம் மூல யாப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

மூல யாப்பின் படி பிரதம நீதியரசர் மற்றும் உயர்நீதிமன்றின் ஏனைய நீதியரசர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றின் தலைவர் மற்றும் அதன் ஏனைய நீதியரசர்கள், நீதி சேவை ஆணைக்குழுவின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், ஒம்புட்ஸ்மன், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகிய பதவிக்காக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவ்வதிகாரம் 19ஆம் திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 41 ஈ (01) ஏற்பாட்டின் பிரகாரம் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்படவில்லை. இவ்வுறுப்புரையில் குறிப்பிடப்படுவதன் படி ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவைக்கு முன்வைக்கும் சிபாரிசினை அப்பேரவை அனுமதித்தால் அன்றி அப்பதவிகளுக்கான ஆட்களை ஜனாதிபதி நியமிக்கமுடியாது. இவ்வாறு உயர் பதவிகளுக்கான ஆட்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி பெற்றிருந்த அதிகாரம் தடைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மூல யாப்பின் VIII ஆம் அத்தியாயம் முழுமையாக அகற்றப்பட்டு புதிய அத்தியாயம் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. 19ஆம் திருத்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய அத்தியாயத்தின் ஏற்பாடுகளுள் மூல யாப்பில் இடம்பெறாத திருத்தப்பட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு

மூல யாப்பின் ஏற்பாடுகளின் படி அமைச்சரவையை நியமிக்கும் போதும் அமைச்சர்களையும் அமைச்சரவை சாராத அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமிக்கும் பொழுதும்

அவர்களின் எண்ணிக்கையில் வரையறைகள் விதிக்கப்படவில்லை. ஆனால் 19ஆம் திருத்தத்தின் 46 (01) என்ற ஏற்பாடு அது தொடர்பான வரையறைகளை விதித்துள்ளது. அதன் படி 46 (1 அ) அமைச்சரவையின் மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை 30ஐ விஞ்சக்கூடாது.
(ஆ) அமைச்சரவையல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 40 ஐ விஞ்சக்கூடாது.
எனினும் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் போது மேற்குறிப்பிட்ட அமைச்சர்களின் எண்ணிக்கையை பாராளுமன்றமே தீர்மானிக்கும் என்று 19ஆம் திருத்தத்தின் உறுப்புரை 46 (04) குறிப்பிடுகின்றது.

மூல யாப்பின் உறுப்புரை 47 இன் படி அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு இருந்த தற்துணிவு அதிகாரம் 19ஆம் திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 46 (03) இனால் அகற்றப்பட்டுள்ளது. அதன்படி பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே ஜனாதிபதி அமைச்சர்களை நீக்கமுடியும்.

மூல யாப்பின் உறுப்புரை 47 இன் பிரகாரம் ஜனாதிபதி தன் விருப்பப்படி பிரதமரை பதவி நீக்கமுடிந்தது. புதிய திருத்தத்தின் உறுப்புரை 46 (2) இன்படி தமது கையெழுத்தை இட்டு ஜனாதிபதிக்கு அனுப்பும் ஒரு கடிதத்தின் மூலம் பதவி விலகினால் அல்லது பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தொடர்ந்து இல்லாதொழிந்தால் அன்றே அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் எந்தளவு காலம் பதவிவகிக்க முடியுமோ அக்காலம் வரை பிரதமர் தமது பதவியை வகிப்பார். அதன்படி ஜனாதிபதியின் சுய விருப்பின் பேரில் பிரதமரை பதவிநீக்கம் செய்வதற்கு ஜனாதிபதிக்கிருந்த அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் படி பிரதமமந்திரி அமைச்சரவை தொடர்பாக இதுவரை காலமும் ஜனாதிபதி அனுபவித்த அதிகாரங்கள் நீக்கப்பட்டிருப்பதோடு அதன் மூலம் பிரதமரின் அதிகாரம் விரிவாக்கப்பட்டுள்ளது.

மூலயாப்பின் உறுப்புரை 70 (01) இன்படி ஒரு பொதுத்தேர்தல் முடிவுற்று ஒரு வருட காலம் சென்றதன் பின்னர் பாராளுமன்றைக் கலைப்பதற்கான தற்துணிவு அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றிருந்தார். 19 ஆம் திருத்தம் அவ்வதிகாரத்தை இல்லாதொழித்திருப்பதோடு பாராளுமன்றின் பதவிக்காலத்தின் $4\ 1/2$ வருடங்களின் பின்னரே அதனை ஜனாதிபதியால் கலைக்க முடியும். இதன் மூலம் பாராளுமன்றின் தன்னிச்சையான தன்மை மேல் எழலாம். மேலும் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் தொடர்ந்தும் மோதல் நிலைகள் ஏற்படவும் அதன் காரணமாகலாம்.

மூல யாப்பின் உறுப்புரை 35 (02) இன்படி பாராளுமன்றினால் நிராகரிக்கப்படும் அரசியல் யாப்பு சட்டம் அல்லாத வேறும் சட்டம் ஒன்றை மக்கள் தீர்ப்புக்கு விட்டு மக்களின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தது. 19ஆம் திருத்தச் சட்டம் அவ்வதிகாரத்தை அகற்றியுள்ளது.

மூல யாப்பின் உறுப்புரை 92 (அ) வின் படி ஒரு ஜனாதிபதி வேட்பாளரின் வயது 30 ஆக விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் 19ஆம் திருத்தச்சட்டம் அதனை 35ஆக அதிகரித்துள்ளது. 19ஆம் திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 35 (01) இன் படி ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் யாப்பின் உறுப்புரை 126 இன் படி அடிப்படை உரிமை மீறல் வழக்கினை தாக்கல் செய்யமுடியும்.

**முடிவுரை**

மூல யாப்பையும் 18ஆம் 19ஆம் திருத்தங்களையும் ஒப்பிடும் போது ஜனாதிபதியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை என்பன தொடர்பான பலமாற்றங்கள் மேற்கொள்ளப்படாத அதேவேளை சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதியின் நிலையில் எவ்வித மாற்றமும் அறிமுகம் செய்யப்படாவிட்டாலும் 18ஆம் திருத்தச் சட்டம் ஜனாதிபதியின் சர்வதிகாரத்துவத்தை உறுதிப்படுத்தி இருப்பதோடு 19ஆம் திருத்தச்சட்டம் ஜனாதிபதியின் அதிகாரங்கள், பணிகள் மீது வரையறைகளை விதித்துள்ளதையும் காணமுடிகிறது.

## (இ) ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றும் வழிமுறை

பாராளுமன்ற அரச முறைமைகளில் நிறைவேற்றுத்துறையை அதன் பதவிக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவி நீக்குவதற்கு பின்பற்றப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற வழிமுறை உள்ளது போல ஜனாதிபதி அரசாங்க முறையில் ஜனாதிபதி பதவியை எளிமையாக அகற்ற முடியாது. அதற்குப் குற்றப் பிரேரணை என்ற சிக்கலான ஓர் வழிமுறை பின்பற்றப்படுகின்றது. அரசறிவியலில் குற்றப் பிரேரணை என்பது ஒரு ஜனாதிபதி அரசாங்க முறைமையில் தண்டனை வழங்கும் இறுதி வழிமுறையாகும் என்று அழைக்கப்படுகின்றது. இலங்கையில் ஐந்து வருட நிலையான ஒரு பதவிக் காலத்துக்கு ஒரு தேர்தல் மூலம் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை அவரின் பதவிக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவியகற்றுவதற்கு குற்றப் பிரேரணை முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- 1978 ஆம் ஆண்டு யாப்பின் 38(2) ஆம் உறுப்புரையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள குற்றப் பிரேரணை முறை பல கட்டங்களைக் கொண்ட ஒரு சிக்கலான செயன்முறையாகும்.

**கட்டம் : 01**

குற்றப் பிரேரணை தயாரிக்கப்படுதலும் சபாநாயகரிடம் கையளிக்கப்படுதலும்.

- ஜனாதிபதிக்கு எதிரான ஒரு குற்றப் பிரேரணை பின்வரும் விடயங்களுள் ஒன்றோ அல்லது பலதோ குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
  1. மனப் பலவீனம் அல்லது உடற் பலவீனம் காரணமாக தனது பதவிக்குரிய பணிகளை புரிய முடியாதிருத்தல்.
  2. அரசியலமைப்பினை வேண்டுமென்றே மீறிய குற்றம்.
  3. தேச துரோகம் புரிந்த குற்றம்.
  4. இலஞ்சம் பெற்ற குற்றம்.
  5. தனது பதவிக்குரிய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தமையை உள்ளடக்கிய துர்நடத்தைக்கான அல்லது ஊழலுக்கான குற்றம்.
  6. ஒழுக்கக் கோட்பாட்டை உட்படுத்தும் ஏதேனும் சட்டத்தின் மீதான தவறு.

  மேற்குறிப்பிட்டவற்றில் ஒன்றோ அல்லது பலதோ அடங்கிய ஒரு குற்றப் பிரேரணையை எவரேனும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் சபாநாயகரிடம் ஒப்படைக்க முடியும்.

அவ்வாறான ஒரு பிரேரணையில் பாராளுமன்ற உறுப்பினர்களுள் $^{2}/_{3}$ பகுதியினர் அதில் கையொப்பமிட்டிருந்தால். சபாநாயகர் அக்குற்றப் பிரேரணையை ஏற்க வேண்டும். ஆனால் கையொப்பமிட்டோரின் எண்ணிக்கை அரைவாசியினராயின் (113) அப்பிரேரணையை ஏற்க வேண்டுமா? இல்லையா என்பது சபாநாயகரின் தற்துணிவு அதிகாரத் திற்குட்பட்டதாகும்.

**கட்டம் : 02**

சபாநாயகர் அப்பிரேரணையை ஏற்றுக் கொண்டால் அதனை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்து அதற்கு என ஒதுக்கப்படும் ஒரு தினத்தில் குறிப்பிட்ட குற்றப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு சமூகமளிக்காத உறுப்பினர்கள் உள்ளிட்ட மொத்த உறுப்பினர்களில் $^{2}/_{3}$ பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறை வேற்றப்பட வேண்டும்.

பின்னர் அக்குற்றச்சாட்டுக்களை பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் உயர்நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்துவார். உயர் நீதிமன்றம் முறையாக விசாரணை செய்ததன் பின்னர் தன் தீர்மானத்தை அதற்கான காரணங்களுடன் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட வேண்டும். அவ் விசாரணையின் போது ஜனாதிபதி தாமாக அல்லது ஒரு சட்டத்தரணி மூலம் வழக்குரைப்பதற்கு உரித்துடையவராவார்.

**கட்டம் : 03**

குற்றப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மன மற்றும் உடற் பலவீனம் காரணமாக தமது பதவிக்குரிய பணிகளை ஆற்ற முடியாதவராகவுள்ளார் அல்லது குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு குற்றத்தை ஜனாதிபதி புரிந்துள்ளார் என்பது பற்றி உயர் நீதிமன்றம் அறிக்கை சமர்ப்பிக்கும் போது அப்பிரேரணை மீண்டும் பாராளு மன்றத்தில் மொத்த உறுப்பினர்களுள் $^{2}/_{3}$ பெரும்பான்மைக்கு குறையாதேரால் அப்பிரேரணை நிறைவேற்றப் பட்டதன் பின்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தினால் பதவிவிலக்கப்படுவார்.

குற்றப் பிரேரணை என்பது அதிவிசேட பெரும்பான்மை தேவைப்படுத்தப்படும் ஒரு நீண்டதும் சிக்கலானதுமான செயன்முறையாகும். அது பாராளுமன்றின் விசேட பெரும்பான்மையையும் உயர் நீதிமன்றின் தீர்மானத்தையும் தேவைப்படுத்தும் ஒரு கடினமான வழிமுறையாக உள்ளது. ஆகவே பதவியிலிருக்கும் ஒரு ஜனாதிபதியை நடைமுறை ரீதியாகப் பதவியிலிருந்து அகற்றுதல் மிகவும் கடினமாகும். அது எந்தளவு கடினமானதெனின் மேற்குறிப்பிட்ட 05 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அவ்வழிமுறையை இப்போது நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பது சந்தேகத்துக்கு உரியதாகும். எனவே சட்டத்தை மீறும், குற்றங்களைப் புரியும், மனப்பலவீனம் பொருந்திய மூடத்தனமான ஒரு ஜனாதிபதியைக் கூட நாம் நீண்ட காலம் சகித்துக் கொண்டிருக்க நேரிடும். (உ - ம்) : 2018.10.26 இற்குப் பின்னர் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன யாப்பை மீறியும் தன்னிச்சையாக செயற்பட்டதைக் குறிப்பிடலாம்.

**இலங்கையின் அனுபவம்**

1991ம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாஸாவுக்கு ஒரு குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போது முழு நாடும் ஒரு அராஜக நிலைக்கு தள்ளப்படும் நிலை ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டப்பட்டது.

**குறைபாடுகள்**

- ஜனாதிபதியால் அமைக்கக்கூடிய உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை ஆராய்வது முறையானது அல்ல என்று கூறப்பட்டிருக்கின்றது.
- ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கும், பாராளுமன்றத்தை அமைப்பதற்கும், தனித்தனியாக தேர்தல்கள் நடத்தப்படுவதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றம் அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை கொண்டு வருவது முறையானது அல்ல என்றும் கூறப்படுகிறது.

**06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை ஆராய்க.**

**(அ) சோல்பரி யாப்பின் கீழும் 1972 யாப்பின் கீழும் நீதித்துறையின் சுதந்திரம்**

**(ஆ) சிறுபான்மைக்கான காப்பீட்டு ஏற்பாடுகள்**

**(இ) 1948 யாப்பின் நாம நிர்வாகியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை**

**(அ) சோல்பரி யாப்பின் கீழும் 1972 யாப்பின் கீழும் நீதித்துறையின் சுதந்திரம்**

**அறிமுகம்**

சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு பல சட்ட ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. எனினும் 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட நீதித்துறையானது சட்டத்துறைக்கு கீழ்ப்படுத்தப்பட்டது.

சோல்பரி அரசாங்க முறையின் ஒரு பிரதான பண்பு சுதந்திரமான ஒரு நீதித்துறை தாபிக்கப்பட்டமை ஆகும். அதன்படி நீதியகதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்படவில்லை. சோல்பரி யாப்பின் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு விசேட ஏற்பாடுகள் அறிமுகம் செய்யப் பட்டிருந்தன. அதனை யாப்பின் 52 - 56 வரையுள்ள உறுப்புரைகளில் காணலாம். அவை பின்வருமாறு

**உறுப்புரை 52**

1. உயர் நீதிமன்றின் நீதியரசர்களும் ஏனைய நீதியரசர்களும் குற்றவியல் ஆணையாளர்களும் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.
2. உயர் நீதிமன்றின் சகல நீதியரசர்களும் நன்னடத்தை உடையவர்களாக இருக்கும் வரை பதவி வகிப்பர். பாராளுமன்றின் இரு மன்றங்களிலும் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் மூலம் மகா தேசாதிபதியினால் அன்றி வேறு எவராலும் அவர்களைப் பதவி நீக்கம் செய்யமுடியாது.
3. உயர் நீதிமன்றின் நீதியரசர்களின் இளைப்பாறும் வயது 62 ஆகும். எனின் 62 வயதைப் பூர்த்திசெய்ததன் பின்னரும் அவர்களது சேவைக் காலத்தை மேலும் 12 மாதங்களுக்கு மகா தேசாதிபதியால் நீடிக்கமுடியும்.

4. உயர் நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளம் பாராளுமன்றினால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.
5. நீதியரசர்களின் சம்பளத்தை அவர்களின் பதவிக்காலத்தின் போது குறைக்க முடியாது.

**உறுப்புரை 53 - நீதிச்சேவை ஆணைக்குழு**

1. பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்றின் ஒரு நீதியரசரையும் இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரையும் கொண்ட நீதி சேவை ஆணைக்குழு ஒன்று இருக்கும். பிரதம நீதியரசர் பதவி ரீதியாக அதன் தலைவராக இருப்பதோடு ஏனைய 2 உறுப்பினர்களும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.
2. ஒரு பாராளுமன்ற உறுப்பினரை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கலாகாது.
3. ஆணைக்குழுவின் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.
4. முன்வைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட காரணத்தின் படி ஆணைக்குழுவின் எந்தவொரு உறுப்பினரையும் மகா தேசாதிபதியால் பதவிநீக்கம் செய்யமுடியும்.
5. ஆணைக்குழுவின் உறுப்புரிமையில் தற்காலிகமாக வெற்றிடம் ஏற்பட்டால் தகுதி வாய்ந்த பிறிதொருவர் தற்காலிகமாக அதன் உறுப்பினராக தேசாதிபதியினால் நியமிக்கப்படுவார்.
6. ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் சம்பளம் பாராளுமன்றினால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படும். அச்சம்பளத்தை சேவைக்காலத்தின் போது குறைக்க முடியாது.

உறுப்புரை 54 ஆணைக்குழு ஒரு செயலாளரைக் கொண்டிருக்கும்.

**உறுப்புரை 55 ஆணைக்குழுவின் வகிபங்கு**

1. நீதித்துறை அதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல், பதவி விலக்குதல் மற்றும் அவர்களின் ஒழுக்க கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல்.
2. மகா தேசாதிபதியிடம் தமது கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் ஓர் ஆவணத்தின் மூலம் எந்தவொரு நீதித்துறை அதிகாரியும் தமது பதவியிலிருந்து இராஜினாமா செய்யமுடியும்.
3. அரசாங்க வர்த்தமானியில் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டு சம்பள அதிகரிப்பு நிகழாத இடமாற்றங்கள் தவிர்ந்த ஏனைய சகல இடமாற்றங்களையும் அனுமதித்தல் அல்லது அக்கட்டளையின் வரையறைகளுக்கு உட்பட்டு எவரேனும் ஓர் அதிகாரியை பதில் கடமை புரிவதற்காக நியமிப்பதற்கு ஆணைக்குழு செயலாளருக்கு அதிகாரம் அளிக்கமுடியும்.
4. இவ்வுறுப்புரையில் நியமனம் என்பது பதில் கடமையாற்றல் அல்லது தற்காலிக நியமனம் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நீதித்துறை அதிகாரி என்பவரால் சகல நீதித்துறை பதவிகளை வகிப்பவர்களாயினும் உயர் நீதிமன்ற நீதியரசர்களும் குற்றவியல் ஆணையாளர்களும் அதில் உள்ளடங்கமாட்டார்கள்.

**உறுப்புரை 56 - நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தலையிடுதல் தண்டனைக்குரிய குற்றமாதல்.**

சோல்பரி யாப்பின் மூலம் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் விதிக்கப் பட்டிருந்தாலும் நடைமுறையில் நீதித்துறையின் சுதந்திரம் முறையாக உறுதிப்படுத்தப்பட்டதா? என்பதனை பரிசீலிக்கவேண்டும். விசேடமாக பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையின் பாதிப்புக்கு நீதித்துறை உட்பட்டதா? என்பதை பரிசீலித்தல் முக்கியமானதாகும். உயர் நீதிமன்றின் பிரதம

நீதியரசரையும் ஏனைய நீதி அரசர்களையும் நியமிக்கும் பொழுது மகா தேசாதிபதி பிரதமரின் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டதனால் அரசியல் ரீதியாக தம்மோடு நெருங்கிய நீதியரசர்களை உயர் நீதிமன்றத்துக்கு நியமித்துக் கொள்வதற்கான வாய்ப்பை பிரதமர் பெற்றிருந்தார். உயர் நீதிமன்ற மரபின் படி பிரதம நீதியரசர் பதவிக்கு ஒரு சிரேஷ்ட நீதியரசரையே நியமிப்பார். 62 வயதை பூர்த்தி செய்யும் ஒரு நீதியரசரின் சேவைக்காலம் மேலும் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டால் அவரது சிரேஷ்டத்துவத்தை உறுதிப்படுத்தி அவரை பிரதம நீதியரசராக நியமிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். மகா தேசாதிபதியாக பதில் கடமை புரிதல் பிரதம நீதியரசரின் ஒரு பணியாக இருந்தமை அப்பதவி அரசியல் தன்மை பொருந்தியதாக மாறுவதற்கு காரணமாக அமைந்தது. பொதுவாக ஒரு நீதியரசரின் சேவைக்காலம் பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே நீடிக்கப்பட்டது. இவ்வாறு உயர் நீதிமன்றின் நீதியரசர்களை நியமிப்பதன் ஊடாக உயர் நீதிமன்றின் மீது மறைமுகமான முறையில் பிரதமரால் பாதிப்புச் செலுத்த முடிந்தது. மேலும் பிரதம நீதியரசர் பதவி ரீதியாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக இடம்பெற்றமையாலும் அதன் ஏனைய உறுப்பினர்கள் இருவரும் பிரதமரின் அரசியல் பாதிப்பின் அடிப்படையில் மகா தேசாதிபதியால் நியமிக்கப் பட்டமையாலும் நீதி சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் மறைமுகமான முறையில் பிரதமரால் பாதிப்புச் செலுத்த முடிந்தது. இவ்வாறு சோல்பரி யாப்பில் நடைமுறை ரீதியாக நீதித்துறை சுதந்திரம் யதார்த்தபூர்வமாக்கப்படவில்லை.

1972 அரசாங்க முறையின் ஒரு பண்பு அதிகாரம் தேசிய அரசுப் பேரவையினூடாக மேற்கொள்ளப் பட்டமையாகும். அதனால் நீதித்துறை ஒரு சுயாதீன துறையாக இருக்காததோடு அது தேசிய அரசுப் பேரவைக்கு கீழ்ப்பட்ட ஒன்றாக இருந்தது. இலங்கையின் உயர் நீதிமன்றின் தீர்ப்புகளுக்கு எதிராக பிரித்தானிய கோமறைக் கழகத்திற்கு மேல்முறையீடு செய்வதற்கு இருந்த அதிகாரம் நீக்கப்பட்டு 1971 இல் பாராளுமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்டத்தை நிறைவேற்றியது. அதன்படி இலங்கையின் உயர் மேன்முறையீட்டு நீதிமன்றமாக மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் தாபிக்கப்பட்டது. 1972 அரசியல் யாப்பு இலங்கையில் இரண்டு உயர் நீதித்துறை நிறுவனங்களைத் தாபித்தது. அவை உயர்நீதிமன்றமும் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றமும் ஆகும். அங்கு மேன்முறையீட்டு மேல் நீதிமன்றமே மேலான நீதிமன்றமாகத் தாபிக்கப்பட்டது. ஆனால் 1973இல் தாபிக்கப்பட்ட நீதி நிர்வாகச் சட்டத்தின் மூலம் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் பெற்றிருந்த அதிகாரங்கள் உயர் நீதிமன்றுக்கு ஒப்படைக்கப்பட்டது.

**உறுப்புரை 122**

1. மேல்நிலை நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உரியதாகும்.
2. நீதியரசர்கள் நன்னடத்தை உடையவர்களாக இருக்கும் வரை பதவி வகிப்பர். தேசிய அரசுப் பேரவை நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தின் படி ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டால் அன்றி எந்த நீதியரசரையும் பதவி நீக்கம் செய்யமுடியாது.
3. உயர் நீதிமன்ற நீதியரசர்களின் இளைப்பாறும் வயது 63 ஆகும்.
4. உயர் நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளம் தேசிய அரசுப் பேரவையினால் விதிக்கப்பட்டு திரட்டு நிதியின் மீது பொறுப்பாக்கப்பட்டிருக்கும்.
5. நீதியரசர்களின் சம்பளத்தை அவர்களது பதவிக்காலத்தின் போது குறைத்தல் ஆகாது.

**உறுப்புரை 124 - 131**

கீழ்நிலை நீதிமன்றங்களின் அதிகாரிகளையும் அட்டவணைப்படுத்தப்பட்ட நீதி அதிகாரிகளையும் பதவியில் சேர்த்துக்கொள்ளுதல், இடமாற்றம் செய்தல், பதவிநீக்கம் செய்தல், ஒழுக்கக் கட்டுப்பாடு போன்றன பற்றிய முழு அதிகாரமும் அமைச்சரவைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வதிகாரிகளின் நியமனம் இடமாற்றம் தொடர்பாக அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குவதற்காக 5 உறுப்பினர் களைக் கொண்ட நீதிச்சேவை ஆலோசனை சபை ஒன்றும் ஒழுக்கக்கட்டுப்பாடுகள் தொடர்பாக அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குவதற்கு 3 உறுப்பினர்களைக் கொண்ட நீதிச்சேவை ஒழுக்காற்று சபை ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

1972 யாப்பின் படி மேல்நிலை நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கும் செயன்முறையானது சோல்பரி யாப்பினதை பெரும்பாலும் ஒத்திருந்தது. எனினும் சோல்பரி அரசாங்க முறையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களின் சேவைக்காலத்தை மேலும் ஒரு வருடத்தினால் நீடிப்பதற்கு மகா தேசாதிபதி பெற்றிருந்த அதிகாரத்தை 1972 யாப்பின் கீழ் ஜனாதிபதி பெற்றுக்கொள்ளவில்லை. மேலும் கீழ் நீதிமன்ற அதிகாரிகளின் நியமனங்கள் இடமாற்றங்கள் பதவி நீக்கம் ஒழுக்க கட்டுப்பாடு என்பன தொடர்பாக சோல்பரி யாப்பினில் இருந்த நிலையை விட 1972 யாப்பின் கீழ் தெளிவான வேறுபாடு மேற்கொள்ளப்பட்டது. அதாவது 1972 யாப்பின் கீழ் அவ்விடயங்கள் முழுமையாக அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்பட்டமையால் நீதித்துறையானது நேரடியாகவே அரசியல் நிறைவேற்றுப் பகுதிக்குக் கீழ்ப்பட்டிருந்தது. அதன் காரணமாக நீதித்துறைச் சேவையின் சுதந்திரம் முழுமையாக கீழ்ப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) சிறுபான்மைக்கான காப்பீட்டு ஏற்பாடுகள்**

சோல்பரி யாப்பு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான காப்பீடுகளை புகுத்துவதில் கவனம் செலுத்தியது. பெரும்பான்மையினரின் ஆட்சியை நடைமுறைப்படுத்தும் ஜனநாயக ஆட்சி முறையின் வெற்றி நாட்டின் சிறுபான்மையினர் ஆட்சியானது தனது உரிமைகளைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை நிலவும் போதே ஏற்படும். இந்த தாராளவாதக் கருத்து சோல்பரி ஆணைக்குழுவினதும் கருத்தாக அமைந்தது. மறுபுறம் தமது முன்மொழிவுகளைச் சிறுபான்மைத் தலைவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் மேற்கொண்டும், வலதுசாரித் தலைவர்களுக் கிடையில் ஓர் உடன்பாட்டினை ஏற்படுத்தும் அரசியல் நோக்கினையும் ஆணைக்குழு கொண்டிருந்தது.

சிறுபான்மை ஜனக்குழுக்கள் தமக்கு நியாயமற்ற தன்மைகள் ஏற்படுமென்று கருதுவார்களாயின் அவர்களின் சந்தேகத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்த பட்சம் அவர்களின் சந்தேகம் இல்லாதொழியும் வரை யாப்புப் பாதுகாப்பு மேற்கொள்ளப் பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம் என்று குறிப்பிட்டு சோல்பரி ஆணைக்குழு தமது யாப்பில் சிறுபான்மைப் பாதுகாப்பு ஏற்பாடுகளை அறிமுகம் செய்தனர் அவையாவன,

**1. அரசியல் யாப்பின் உறுப்புரை 29(2)ம் சரத்து**

அரச கட்டளையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நாட்டின் சமாதானம் மற்றும் நல்லாட்சி தொடர்பாக சட்டவாக்கம் செய்வதற்குப் பாராளுமன்றுக்கு அதிகாரம் உண்டு என இவ்வுறுப்புரை குறிப்பிடுவதோடு அச்சட்டவாக்கத்திற்கு வரையறைகளை விதித்தல் இவ்வேற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

(அ) ஒரு சமயத்தைப் பின்பற்றுவதற்கான உரிமையை தடை செய்யவோ வரையறுக்கவோ கூடாது.

(ஆ) ஏதேனும் ஒரு இனத்தவரோ, சமயத்தவரோ பிறிதொரு இனத்தவரின் அல்லது சமயத்தவரின் கீழ்ப்படுதலுக்கோ, தடைகளுக்கோ வரையறைகளுக்கோ உட்படுத்தப்படக் கூடாது.

(இ) ஏதேனும் ஒரு இனத்தவருக்கோ சமயத்தவருக்கோ பிறிதொரு இனத்துவருக்கோ, சமயத்தவருக்கோ வழங்கப்படாத சலுகைகளை அல்லது நன்மைகளை வழங்கக்கூடாது.

(ஈ) ஒரு சமயத் தாபனத்தின் யாப்பை அத்தாபனத்தின் ஆளுநர் சபையின் விருப்பமின்றி மாற்றக்கூடாது. ஆனால் ஒரு சமயத் தாபனம் சட்ட ரீதியாக இருப்பின் அத்தா பனத்தின் ஆளுநர் சபையின் வேண்டுகோளின் பேரிலன்றி எந்தவொரு மாற்றத்தையும் செய்யக் கூடாது.

இந்த ஏற்பாட்டின் சிறப்பம்சம் என்னவெனில் மேற்குறிப்பிட்ட நிலைகளை மீறி ஆக்கப்படும் சட்டங்கள் எதுவாயினும் அவ்வுரிமை மீறலின் அளவுக்கு அவை செல்லுபடி யற்றதாகும் என்று குறிப்பிட்டு சட்டவாக்கம் தொடர்பான நீதிப்புனராய்வு அதிகாரத் திற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருத்தலாகும்.

அரசியல் யாப்பை திருத்துவதற்கான ஒரு சட்ட மூலம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் 2/3 பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட முடியும் என்று குறிப்பிட்டாலும், பாராளு மன்றம் தனது சட்டவாக்கத்தினை 29(2)ம் உறுப்புரைக்கு உட்பட்டே மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதனால் 29(2)ம் உறுப்புரையை திருத்த முடியாத ஒரு விசேட ஏற்பாடாகும் என்று பிற்காலத்தில் பிரித்தானிய கோமறைக் கழகம் குறிப்பிட்டது. அதன்படி 29ஆம் உறுப்புரை தனிமனித மற்றும் சிறுபான்மை ஜனக்குழுக்களின் உரிமை களைப் பாதுகாக்கும் பலம் வாய்ந்த ஏற்பாடாக அமைந்தது.

**2. செனட் சபை**

இது 30 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. 15பேர் மக்கள் பிரதிநிதிகள் சபையால் தெரிவு செய்யப்பட்டனர். எஞ்சிய 15 பேரும் மகாதேசாபதியால் நியமிக்கப்பட்டனர். செனட்சபை நிறுவப்பட்டதன் ஒரு நோக்கம் பொதுத் தேர்தலில் போதிய பிரதிநிதித் துவத்தைப் பெற்றுக் கொள்ளாத சிறுபான்மையினருக்கும் சமூகக்குழுக்களுக்கும் பிரதி நிதித்துவத்தைப் பெற்றுக் கொடுத்தலாகும். பிறிதொரு நோக்கம் மக்கள் பிரதிநிதிகள் சபை அவசர அவசரமாகவும் போதிய பரிசீலனை இன்றியும் நிறைவேற்றும் சட்டங்களை மீள் பரிசீலனை செய்தல். இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் சபையின் மீது ஒரு தடையாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் எதிர்பார்த்தது போல் செனட் சபை சிறுபான்மையினர்களுக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

**3. பல அங்கத்துவர் தேர்தல் தொகுதி முறை**

யாப்பின் 40(4) சரத்தின்படி ஒரு மாகாணத்தில் ஏதேனும் ஒரு பிரதேசத்தில் இன, சமய அல்லது வேறு சமூகப் பண்புகளைக் கொண்டு ஒன்றாகச் செயற்படும் ஆனால் அப்பிரதேசத்தில் ஏனைய குடிபதியாளர்களுள் அதிகாரமானவர்களிலிருந்து அப்பண்புகளுள் ஒன்றினாலோ அதற்கு மேற்பட்ட

வற்றினாலோ வேறுபடுகின்ற வகையில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையினர் ஒன்றி ணைந்து வாழ்கின்றார்கள் என்று தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு கருதினால், அந்தச் சனக்குழுவின் உரிமைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய வகையில் அந்த மாகாணத் தைப் பிரதேசங்களாகப் பிரிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் நோக்கம் ஒரு தேர்தலில் சிறுபான்மை இனக் குழுக்கள் பிரதிநிதித்துவம் பெறமுடியாத நிலை காணப்படும் பிரதேசங்களுக்கு பல அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்குவதன் மூலம் அவர்களுக்குப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதாகும்.

இவ்வகையில் கொழும்பு மத்தி 03 அங்கத்தவர் தேர்தல் தொகுதியாகவும் பலாங்கொடை, பதுளை, அக்குறணை, மட்டக்களப்பு, மூதூர் போன்ற தொகுதிகள் இரட்டை அங்கத்துவ தொகுதிகளாக உருவாக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் இவை போதியளவு பாதுகாப்பானதாக இருந்தது என கூற முடியாது. அதன்படி

1. 1947 - 1970 வரை கொழும்பு மத்தி மூ அங்கத்துவ தேர்தல் தொகுதியாக இருந்தது. இத் தொகுதியிலிருந்து எந்தவொரு தமிழரும் தெரிவு செய்யப்பட வில்லை.
2. பலாங்கொடை தேர்தல் தொகுதி அங்கு வாழும் சிங்கள இந்திய வம்சவாழி மக்க ளுக்காக இரட்டை அங்கத்துவ தொகுதியாக உருவாக்கப்பட்டது. ஆனால் இந்திய வம்சாவழி மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதனால் 1952ம் ஆண்டு தேர்தலில் இரு அங்கத்தவரும் சிங்கள பிரதிநிதிகளாகவே தெரிவு செய்யப்பட்டனர்.
3. 1960 - 1970 வரை கொழும்பு தெற்கு தொகுதியில் இருந்து எதிர்பாரத்த தழிழ் உறுப்பினர் தெரிவு செய்யப்படவில்லை.
4. 1965ம் ஆண்டு தேர்தலில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியிலிருந்து இரு முஸ்லிம் உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டனர். *MEH.* முஹம்மத் அலி, *AL.* அப்துல் மஜீத் என்பவர்களாகும்.
5. 1970ம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இருந்து இரு தமிழ் உறுப்பினர்களே தெரிவு செய்யப்பட்டனர்.
   (உ - ம்) : செல்லையா ராஜதுரை, இராஜன் செல்வநாயகம்

### 4. ஆறு நியமன அங்கத்துவ முறை

அரசியல் யாப்பின் உறுப்புரை 11(2) இன்படி பொதுத் தேர்தலின் பின்னர் நாட்டின் ஒரு முக்கியமான ஜனக்குழுவுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. என்று மகாதேசாதிபதி கருதுவாராயின் மக்கள் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் ஆறு பேருக்கு மேற்படாத எண்ணிக்கையினரை நியமிக்கமுடியும்.

இந்த ஏற்பாட்டின் மூலம் ஒரு பொதுத் தேர்தலில் போதுமான பிரதிநிதித் துவத்தைப் பெற்றுக் கொள்ளாத சிறுபான்மையினர் சார்பாக நியமன முறையின் மூலம் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுக்க முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வகையில் *Dr. M.P.* ரஹ்மான் (1956, 1960 ஜுலை) *T.B.* ஜாயா (1960 மார்ச்), *S.I.* ஜபர்ஜி (1960 மார்ச்), பத்யுத்தீன் ம.்.மூத் (1960 ஜுலை, 1970), சேர் ராசிக் பரீட் (1965), *M.* இஸ்ஸதீன் முஹம்மட் (1965), *A.* அஸீஸ் (1970), *M.C.* சுப்பிரமணியம் (1970), செல்லையா குமாரசூரியர்

(1970), *S.* தொண்டமான் (1960 ஜுலை) போன்றவர்கள் மக்கள் பிரதிநிதிகள் சபையின் நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப் பட்டவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

நடைமுறையில் 06 நியமன அங்கத்தவமும் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பானதாக அமையவில்லை. ஆரம்பத்தில் இந்நியமன உறுப்பினர்கள் சிறுபான்மை இனவத்தவர்களிலிருந்து நியமிக்கப்பட்டாலும் பிற்காலத்தில் அரசியலமைப்பை மீறி பெரும்பான்மையான இனத்தவர்களும் இதற்கு நியமிக்கப்பட்டனர்.

இதைவிட சிறுபான்மை இனத்தவர் நியமிக்கப்பட்டாலும் அவர்களில் பெரும் பான்மையனவர்கள் தம்மை தெரிவு செய்த பிரதமருக்கும், பிரதமர் சார்ந்த அரசியல் கட்சிக்கும் விசுவாசமாக இருக்க தலைப்பட்டார்களே தவிர தாம் சார்ந்த இனத்திற்கு விசுவாசமாக இருக்க முற்படவில்லை. உதாரணமாக, 1970ம் ஆண்டு நியமன உறுப்பினர்களாக சிறுபான்மை இனத்திலி ருந்து *ஆ.ஊ.* சுப்பிரமணியம், செல்லையா குமாரசூரியர், பதுயுதீன் மௌமூத் என்பவர்கள் நியமிக்கப்பட்டனர். 1972ம் ஆண்டு அரசியல் திட்டம் சிறுபான்மை யினரின் நலன்களை பேணாத ஒன்றாக உருவாக்கப்பட்டபோதும் அதனை அவர்கள் ஆதரித்தனர்.

**5. நீதிச்சேவை ஆணைக்குழு**

நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்கில் தாபிக்கப்பட்ட இவ் ஆணைக் குழு 3 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பிரதம நீதியரசர் உத்தியோக முறையில் அதன் தலைவராக இருந்தார். மற்றைய இருவரும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். அவர்களைக் காரணமின்றி பதவி நீக்கம் செய்ய முடியாது.

யாப்பின் 56 சரத்துப்படி அவ்வாணைக்குழுவின் செயற்பாடுகளில் தலையிடுதல் குற்றமாகும். ஜனநாயக ஆட்சி முறைக்கு நீதிச் சுதந்திரம் அவசியமாயினும் இலங்கை போன்ற ஒரு பல்லினச் சமூகத்தைக் கொண்ட ஒரு நாட்டின் சிறுபான்மை ஜனக் குழுவுக்கு பாதுகாப்பளிப்பதற்கு இது அத்தியாவசியமானதாகும்.

**6. அரசாங்க சேவை ஆணைக்குழு**

அரசாங்க சேவையை பக்கச் சார்பற்ற சுதந்திரமான தாபனமாக கொண்டு நடத்தும் நோக்கில் இவ்வாணைக்குழு தாபிக்கப்பட்டது. இது 3 உறுப்பினர்களைக் கொண்டி ருந்தது. அவர்கள் பிரதமரின் சிபாரிசின் பெயரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப் பட்டனர். காரணமின்றி அவர்களைப் பதவிநீக்கம் செய்ய முடியாது யாப்பில் குறிப் பிடப்பட்டாலும் ஒரு சிறுபான்மை உறுப்பினரை இதற்கு நியமிக்கும் மரபு பின்பற்றப் பட்டது. ஆகையால் குழுவின் செயற்பாடுகளில் தலையிடுதல் குற்றமாகும். இவ்வா ணைக்குழுவும் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பாக அமைந்தது என்று அறிஞர்கள் கூறினர்.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்ட யாப்பின் ஏற்பாடுகள் எதிர்பார்த்தது போன்று நடைமுறைப் படுத்தப்படவில்லை. 1948ல் பிரஜா உரிமை மற்றும் வாக்குரிமைச் சட்டம் 1956 சிங்கள அரச கரும மொழிகள் சட்டம் என்பவற்றின் போது சிறுபான்மையினர் நீதித்துறையின் தயவை நாடினாலும் நீதித்துறை உரிமைகளைப் பாதுகாக்கும் துறையாக செயற்படுவதை விட சட்ட மூலங்களின் சட்ட ரீதியான தன்மையினை பரீட்சித்துப் பார்க்கும்

நீதிமன்ற மாகவே செயற்பட்டமையினால் எதிர்பார்த்த தலையீடு நீதிமன்றத்திலிருந்து இடம் பெறவில்லை. அதனால் உறுப்புரை 29 இனை சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு என்று ஏற்றுக் கொள்வதனை சிறுபான்மைத் தலைவர்கள் கைவிட்டதுடன் அவர்கள் பிரிவினைவாத அரசியலுக்குத் தள்ளப்பட்டனர்.

ஏனைய ஏற்பாடுகளின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் ஓரளவு நிறைவேறினாலும் நியமன உறுப்பினர்களும் செனட் சபையின் சிறுபான்மை உறுப்பினர்களும் எதிர்பார்த்தது போன்று முழுமையாகச் செயற்படவில்லை. அதிகாரத்தில் இருந்த கட்சி ஆதரவாளர் களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதற்காகவே அவ்வேற்பாடுகள் அதிகமாகப் பயன்படுத் தப்பட்டன. அதிகாரத்தில் இருக்கும் அரசியல் குழுவினர் தமது அதிகாரத்தை உறுதிப் படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தியமையால் சிறுபான்மையினரை பிரதான அரசியல் பிரிவாகத்தில் இணைத்து வைத்துக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை. அதனால் சோல்பரி யாப்பில் சிறுபான்மையினருக்கான பாதுகாப்புகள் வீழ்ச்சியுள்ள ஓர் எதிர்பார்க் கையாக மாறியது எனலாம்.

## (இ) 1948 யாப்பின் நாம நிர்வாகியின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நிலை

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் பிரித்தானிய இராணியே இலங்கையின் நாம நிர்வாகியாக இருந்தார். அவர் இலங்கையில் குடியிருக்காமை, இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான தூரம் போன்ற காரணங்களால் அவருக்குரிய அதிகாரங்களையும் பணிகளையும் புரிவதற்கு ஒரு மகாதேசாதிபதிப் பதவி உருவாக்கப்பட்டிருந்தது. மகாதேசாதிபதிப் பதவி முடியின் பிரதிநிதியாகும். அதனால் மகாதேசாதிபதி தமது அதிகாரங்களையும் பணிகளையும் சோல்பரி அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கேற்பவும் பிரித்தானிய நாம நிர்வாகி பின்பற்றிய மரபுகளுக் கேற்பவும் புரியவேண்டியவராக இருந்தார்.

மகாதேசாதிபதி இலங்கைப் பிரதமரின் சிபாரிசின் பேரில் பிரித்தானிய மகா இராணியால் நியமிக்கப்பட்டார். இப் பதவிக்கு நிச்சயமான ஒரு பதவிக்காலம் விதிக்கப்படவில்லை. பதவியிலிருப்ப வரை மீண்டும் நியமிப்பதா அல்லது பிறிதொருவரை நியமிப்பதா என்பதை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை சீர்தூக்கிப் பார்க்கும் பழக்கம் பின்பற்றப்பட்டது.

மகாதேசாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் சோல்பரி அரசியலமைப்பின் குறிப்பிடப் பட்டிருந்தன. அவரின் அதிகாரங்கள் பிரித்தானிய மகா இராணியின் அதிகாரங்களை விட குறைந்த பரப்புக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசியலமைப்பின் மூலம் நாம நிர்வாகிக்கு வழங்கப்பட்டிருந்த பணிகளுள் சிலவற்றை பிரித்தானிய மகா இராணியோ அல்லது இலங்கை மகாதேசாதிபதியோ ஆகிய இருவருள் ஒருவரால் புரிய முடிந்ததுடன் ஏனைய பணிகளை பிரித்தானிய மகா இராணியாலேயே ஆற்றமுடிந்தது. மகா இராணியாலேயே புரிய வேண்டியவற்றை இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில் அவராலேயே புரிய வேண்டியிருந்தது. மகாதேசாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பணிகளை அவர் பிரித்தானிய மகா இராணி ஐக்கிய இராச்சியத்தில் அதற்குச் சமமான அதிகாரங்களையும், பணிகளையும் நடைமுறைப்படுத்தும் போது பின்பற்றப்படும் அரசியலமைப்பு மரபுகளுக்கு இயன்றளவு இசைவான வகையிலேயே புரிய வேண்டியிருந்தார். இதன் பொருள் சாதாரண நிலைகளில் பிரதமரின் ஆலோசனைப்படி செயற்பட வேண்டும் என்பதாகும்.

மகாதேசாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, நிர்வாகப் பகுதி என்பவற்றோடு தொடர்பானவையாகும்.

**சட்டத்துறை சார்ந்த அதிகாரங்களும் பணிகளும்**

பிரதமரின் ஆலோசனையுடன் பாராளுமன்றைக் கூட்டல், ஒத்திவைத்தல், கலைத்தல் ஆகிய அதிகாரங்கள் அவருக்கிருந்தன. பாராளுமன்றினைக் கலைப்பதில் பிரதமரிடம் ஆலோசனை செய்யவேண்டுமாயினும் ஒரு மாற்று அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்புள்ள ஒரு கட்சி அல்லது ஒரு குழு பாராளுமன்றினில் காணப்படுமாயின் பாராளுமன்றைக் கலைப்பது சம்பந்தமான பிரதமரின் கோரிக்கையை மகாதேசாதிபதியால் நிராகரிக்க முடிந்தது. மக்கள் பிரதிநிதிகள் சபை முதலாவதாகக் கூடிய தினத்திலிருந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியானவுடன் மகாதேசாதிபதி அச்சபையைக் கலைக்கவேண்டும். அவ்வாறு கலைக்கப்பட்டதன் பின்னர் ஏதேனும் ஒரு வகையில் நாட்டில் அவசரகாலநிலை தோன்றியுள்ளது என்று மகாதேசாதிபதி கருதுவாராயின் கலைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை மீண்டும் கூடுவதற்கான அதிகாரம் மகாதேசாதிபதிக்கு இருந்தது.

அரசியலமைப்பின் படி மகா இராணியின் சார்பில் மசோதாக்களை அங்கீகரித்தார். பாராளுமன்றின் புதிய தவணையின் ஆரம்பத்தின் போது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். செனட் சபையின் 15 உறுப்பினர்களை நியமிப்பதற்கும், வெற்றிடம் ஏற்பட்டால் அதனை நிரப்புவதற்கும் மகாதேசாதிபதிக்கு அதிகாரமிருந்தது. பொதுத் தேர்தலின் போது முக்கியமான நலன்கள் மக்கள் பிரதிநிதிகள் சபையில் போதியளவு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் அந்நலன்கள் சார்பில் ஆறு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமும் அவருக்கிருந்தது. இந்த நியமனங்களின் போது அவர் பிரதமரின் ஆலோசனையைப் பின்பற்றவேண்டும்.

**நிறைவேற்றுத்துறை சார்ந்த அதிகாரங்களும் பணிகளும்**

பிரதமரை நியமித்தல் மகாதேசாதிபதியின் பணியாகும். அங்கு அவர் பிரித்தானிய அரசியல் மரபுகளைப் பின்பற்றவேண்டியவராக இருந்தார். அதாவது பாராளுமன்றில் பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியின் தலைவராகப் பிரதமராக நியமிக்கவேண்டும் என்பதாகும். மேலும் ஏனைய கெபினட் அமைச்சர்களையும், துணை அமைச்சர்களையும் நியமித்தல் அவரது பணியாகும். இவர்களின் பெயர்களைப் பிரதமரே குறிப்பிடுவார். எனினும் இந்நியமனங்களை அவரே கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும் என்பதில்லை. மகா இராணி இலங்கைக்கு வருகைதரும் போது அவரே தனிப்பட்ட முறையில் இப் பொறுப்பினை நிறைவேற்ற முடியும். இதிலிருந்து நிறைவேற்றுக் கருமங்களின் போது மகாதேசாதிபதி சுயாதீனமான முறையில் செயற்படமுடியாது எனத் தெளிவாகியது. மகா இராணி பிறப்பிக்கும் ஒரு கட்டளையின் மூலம் மகாதேசாதிபதியின் அபிலாசைகளைக் கீழ்ப்படுத்த முடியும். இதன்படி மகாதேசாதிபதி மகா இராணியின் பிரதிநிதி மட்டுமே ஆவார்.

**நீதித்துறை சார்ந்த அதிகாரங்களும் பணிகளும்**

பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்றின் ஏனைய நீதியரசர்களையும் குற்றவியல் நீதியாணையாளர் களையும் நியமிக்கும், நீக்கும் பணிகள் மகாதேசாதிபதிக்குரியதாகும். இது தொடர்பாக பிரதமரின் ஆலோசனை அவசியமாகும். உயர் நீதிமன்றின் ஒரு நீதியரசரொருவர் 62 வயது பூர்த்தியாகும் போது பிரதமரின் ஆலோசனையின்பேரில் ஒரு வருடத்துக்கு மேற்படாத காலப்பகுதிக்கு அவரது

சேவையை நீடிப்பதற்கு மகாதேசாதிபதிக்கு அதிகாரமிருந்தது. எவ்வாறாயினும் பாராளுமன்றின் இரு மன்றுகளினதும் ஒன்றிணைந்த ஒரு வேண்டுகோளை அவருக்கு விடுத்தால் மட்டுமே நீதியரசர்களை அவரால் பதவி நீக்கம் செய்யமுடிந்தது. நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு உத்தியோக ரீதியாக நியமனம் பெறும் பிரதம நீதியரசரைத் தவிர்ந்த அதன் ஏனைய உறுப்பினர்களையும் பிரதமரின் ஆலோசனையுடன் மகாதேசாதிபதியே நியமித்தார்.

**நிர்வாகம் சார்ந்த பணிகள்**

பிரதமரின் ஆலோசனையுடன் அமைச்சுக்களின் நிரந்தரச் செயலாளர்கள், பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பிரதம கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஏனைய உயர் பதவிகள் போன்றவற்றுக்கான ஆட்களை மகாதேசாதிபதியே நியமித்தார். மேலும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களையும் மகாதேசாதிபதியே நியமித்தார்.

**ஏனைய பணிகள்**

பிரித்தானிய மகா இராணியைப் போன்று மகாதேசாதிபதியும் ஆட்சிக் கருமங்கள் தொடர்பாகப் பிரதமருக்கு மதியுரை வழங்குவதற்கும் ஊக்குவிப்பதற்குமான அதிகாரம் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வதிகாரத்தை மகாதேசாதிபதியுடன் ஒத்துழைப்பாகச் செயற்படும் பிரதமரே பிரயோகிக்க வேண்டியிருந்தது. தன்னிச்சையான பிரதமர்கள் மத்தியில் மகாதேசாதிபதி மதியுரை வழங்குகின்ற ஊக்குவிக்கின்ற பணிகளைக் கைவிட வேண்டியநிலை ஏற்பட்டது. சோல்பரி அரசியலமைப்பின் ஏற்பாட்டின் படி மகாதேசாதிபதி செய்த, செய்யாதுவிட்ட கருமங்கள் தொடர்பாக அவருக்கெதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரமுடியாது.

சமய விழாக்களில் பங்குபற்றித் தலைமை தாங்கினார். விளையாட்டு விழாக்களுக்குச் சமூகமளித்து விளையாட்டு வீரர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். கௌரவப் பட்டங்களை வழங்கினார். இவை பெரும்பாலும் சடங்கு முறையான பணிகளாகும்.

மகாதேசாதிபதி பிரதமரின் ஆலோசனையின்படி செயற்பட வேண்டும் என்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டாலும் நடைமுறையில் இந்நிலை அவ்வாறே செயற்படவில்லை. பல சந்தர்ப்பங்களில் மகாதேசாதிபதிகள் அரசியலமைப்பின் மூலம் தமக்களிக்கப்பட்டிருந்த அதிகாரங்களைத் தாண்டிச் சென்று செயற்பட்டார்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**மகா தேசாதிபதி பற்றிய இலங்கையின் அனுபவங்கள்**

- 1948 - 1972 காலப்பகுதியில் நால்வர் மகாதேசாதிபதி பதவியை வகித்தனர். கபினட் அரசாங்க முறையினில் நாம நிறைவேற்றாளர் பக்கச்சார்பற்றவராக செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் இலங்கையில் அவ்வாறு நிகழவில்லை. உதாரணமாக மகாதேசாதிபதி பதவியை வகித்த இரண்டாமவரான சோல்பரி பிரபு 1951 இல் பிரதமரை நியமித்தமை மூன்றாவது மகாதேசாதிபதியான சேர் ஒலிவர் குணதிலக 1958 அவசர காலநிலையை பிரகடனப்படுத்தியமை. 1960 மார்ச் பொதுத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்தை நியமித்தமை மற்றும் 1962 புரட்சி சதி ஆகிய சந்தர்ப்பங்களில் செயற்பட்ட விதமும் அரசியல் கருத்து மோதல்களுக்கு உட்பட்டது.

♦ அவ்வாறாயினும் ஏனைய சந்தர்ப்பங்களில் மகா தேசாதிபதிகள் தமது பதவிக்குரிய பணிகளை எதிர்பார்த்தது போன்று பக்கச்சார்பின்றி நிறைவேற்றினர். குறிப்பாக 1964 - 1972 காலப்பகுதியில் அப்பதவியை வகித்த வில்லியம் கொபல்லாவ அப்பதவியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பக்கச் சார்பற்ற தன்மையை பேணி செயற்பட்டார்.

கபினட் முறை ஒன்றின் நாம நிறைவேற்றாளர் கௌரவமான பதவியாயினும் சோல்பரி யாப்பின் கீழிருந்த மகா தேசாதிபதி நியமிக்கப்பட்ட விதம், பதவி நீக்கம் செய்யப்பட்ட முறை அவருக்குரிய அதிகாரங்கள், பணிகள் என்பவற்றின் அடிப்படையில் அவரை ஒரு தேசிய தலைவராக அன்றி வெளிநாட்டு அரசாங்க மொன்றின் பிரதிநிதியாகவே கருதமுடிந்தது.

**07. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சீர்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.**

**(அ) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

**(ஆ) மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்**

**(இ) அரசாங்கத்தின் தலைவர் என்றவகையில் ஜனாதிபதியின் வகிபங்கு**

**(ஈ) தற்போதைய யாப்பின் கீழ் ஒப்பங்கோடல்**

**(அ) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

உயர் நீதிமன்றம் இலங்கையில் மேலானதும் முடிவானதுமான நீதி மன்றமாகும். இது பிரதம நீதியரசரையும் ஆறு பேருக்கு குறையாத பத்து பேருக்கு மேற்படாத நீதியரசர்களைக் கொண்டது. இவர்கள் அனைவரும் யாப்பின் 19ம் திருத்தத்தின்படி அரசியல் அமைப்பு பேரவையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்.

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 65 ஆகும். இவர்களின் சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு திரட்டு நிதியின் மீது பொறுப்பாக்கப்பட்டுள்ளது.பிரதம நீதியரசர் உட்பட ஏனைய நீதியரசர்களை பதவிநீக்க வேண்டுமாயின் பாராளுமன்ற உறுப்பினர்களின் $^{1}/_{3}$ பங்கினர் கையொப்பமிட்ட ஒரு குற்றப் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதன் மூலம் பதவியிலிருந்து நீக்கலாம்.
(உ - ம் ) : 2012ம் ஆண்டு பிரதம நீதியரசராக இருந்த ஸ்ரீராணி பண்டாரநாயக்க பாராளுமன்றில் $^{2}/_{3}$ பெரும்பான்மையுடன் நீக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.

**01. அரசியலமைப்பு கருமங்கள் தொடர்பான நியாயாதிக்கம்.**

அரசியலமைப்புத் தொடர்பான அதிகாரத்தின்படி பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்ட மசோதாக்களின் யாப்புறு தன்மையை பரிசீலணைசெய்யும் நீதி முன் புணராய்வு அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது. சாதாரண ஒரு சட்ட மசோதா பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுவதற்கு 14 நாட்களுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். அந்த மசோதாவின் யாப்புறு தன்மையை பரிசீலணை செய்வதற்காக உயர் நீதிமன்றத்திடம் ஜனாதிபதியோ அல்லது நாட்டின் எப்பிரசையோ ஒரு மணுவை சமர்ப்பிக்க முடியும். அம்மணுவில்

1. யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளோடு அல்லது யாப்பின் வேறு ஏதேனும் ஓர் ஏற்பாட்டோடு அந்த மசோதா அல்லது மசோதாவின் ஓர் ஏற்பாடு உடன்பாடானதாக காணப்படுவதில்லை என்றும்.
2. பாராளுமன்றின் ஓர் விசேட பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அல்லது,
3. மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பில் மக்களினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் கோரலாம்.

இந்த மனு தொடர்பாக உயர்நீதிமன்றின் தீர்ப்பானது அம்மனு முன்வைக்கப்பட்டு மூன்று கிழமைக்குள் தெரிவிக்கப்பட வேண்டும். உயர் நீதிமன்றின் தீர்ப்பு வழங்கப்படும் வரை அந்த மசோதா தொடர்பாக பாராளுமன்றம் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளக்கூடாது.

உயர் நீதிமன்றின் தீர்ப்பானது சம்பந்தப்பட்ட மசோதா யாப்புக்கு உட்பட்டது என்றும் அல்லது யாப்புடன் முரண்படுகிறது எனத் தீர்ப்பு வழங்கலாம். யாப்புக்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்கினால் அதற்கான காரணத்தைக் குறிப்பிடுவதுடன் அச் சட்டமூலம் விசேட பொரும்பான்மையோ அல்லது விசேட பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் சட்டமாக்கப்பட வேண்டும் என பணிக்கலாம்.

**02. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அதிகாரம்.**

**03. மேன்முறையீட்டுக்கான இறுதி நியாயாதிக்கம்.**

**04. அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம்.**

**05.** 38ம் சரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களின் கீழ் ஜனாதிபதிக்கு எதிராக பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் குற்றப் பிரேரணையை விசாரணை செய்யும் அதிகாரத்தை உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது. பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் தனது உறுப்புரிமையை இழக்கும் போது அவர் உயர் நீதிமன்றத்தில் நியாயம் கோரலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதன் செல்லுபடியாகும் தன்மையை உயர் நீதிமன்றமே தீர்மானிக்கும்.

**06. தேர்தல் ஆட்சேபனை மனுக்களும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் மக்கள் தீர்ப்பு தேர்தல் மனுக்கள் தொடர்பான நியாயதிக்கம்.**

**07. பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பிலான நியாயாதிக்கம்.**

**08. அரசியல் யாப்பின் 19வது திருத்தத்தின்படி பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கு எதிரான ஒழுக்க விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தையும் உயர் நீதிமன்றம் பெற்றுள்ளது.**

**09. விதிகளை தயாரிக்கும் நீதி அதிகாரம்.**

### (ஆ) மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்

- மாகாண சபையின் நிறைவேற்றுக் கருமங்களின் மூலாதாரம் ஆளுநர் ஆவார். அதன்படி ஆளுநர் மாகாண நிறைவேற்றுத் துறையின் தலைவராவார்.
- ஆளுநர் மாகாண சபையிலுள்ள ஜனாதிபதியின் பிரதிநிதியாவார். இவர் 05 வருட காலத்துக்கு ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். ஜனாதிபதியின் விருப்பம் இருக்கும் வரை அப்பதவியில் தரிப்பார். ஜனாதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பும் ஒரு கடிதத்தின் மூலம் அவர் பதவி விலகலாம். (உ - ம்) 03.06.2019 ஆம் திகதி, மேல் மாகாண ஆளுநர் ஆஸாத்சாலியும், கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும் இராஜினாமா செய்ததைக் குறிப்பிடலாம்.

- ஆளுநர்
    1. யாப்பை வேண்டுமென்றே மீறியுள்ளமை.
    2. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து துர்நடத்தைக்கும் ஊழல் குற்றத்திற்கு ஆளாகியுள்ளமை.
    3. இலஞ்சக் குற்றம் அல்லது ஒழுக்கக்கேடு என்ற குற்றத்துக்கு உள்ளாகியமை. பேன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்குமாறு மாகாண சபையின் மொத்த உறுப்பினர்களுள் $^{2}/_{3}$ பகுதியினர் ஜனாதிபதியை வேண்ட முடியும்.

**ஆளுநருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு**

1. மாகாண சபையோடு தொடர்பான பணிகள் :-
    - மாகாண சபையைக் கூட்டல், ஒத்திவைத்தல், கலைத்தல்.
    - மாகாண சபையில் பிரசன்னமாகி உரைநிகழ்த்துதல் அல்லது செய்திகளை அனுப்புதல்.

**2. நியதிச் சட்டங்கள் மற்றும் கொள்கை உருவாக்கம் தொடர்பான பணிகள் :-**

- நியதிச் சட்டங்களை ஆக்குதல் பற்றி மாகாண சபைக்குச் செய்திகளை அனுப்புதல்.
- நியதிச் சட்டங்களை ஆக்குதல் பற்றி முதலமைச்சரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- நியதிச் சட்டங்களுக்கு அனுமதி வழங்கல்.
- நியதிச் சட்டங்களை மீள் பரிசீலிக்குமாறு திருப்பி அனுப்புதல்.
- இரண்டாவது முறையாகவும் நிறைவேற்றப்பட்ட நியதிச் சட்டங்களை தேவைப்படின் உயர் நீதிமன்றின் பரிசீலனைக்கு உட்படுத்தும் நோக்கில் ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்காக தடுத்து வைத்தல்.

**3. மாகாண அமைச்சரவையோடு தொடர்பான பணிகள் :-**

- மாகாண முதலமைச்சரையும் ஏனைய அமைச்சர்களையும் நியமித்தல்.
- அமைச்சரவையின் தீர்மானங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுதல்.
- அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் முன்வைக்கும் ஆலோசனைகளை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தல்.

**4. நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்.**

- ஆளுநர் மாகாண அமைச்சர்கள் மற்றும் மாகாண பகிரங்க அலுவலர்கள் ஊடாக நிறைவேற்று அதிகாரத்தை நிறைவேற்றுகிறார்.

**5. மாகாண நிதி முகாமைத்துவம்**

- மாகாணத்தின் நிதியை முகாமைத்துவப்படுத்துவதற்குப் பொருத்தமான சட்டங்களை உருவாக்குதல்.
- அவசர நிதிகளைக்கொண்டு நடத்துவதற்கும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் சட்டங்களை உருவாக்குதல்.
- மாகாண நிதிக்கணக்காய்வு பற்றி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை யைப் பெற்றுக் கொள்ளுதலும் அதை அமைச்சரவையிடம் சமர்ப்பித்தலும்.

**6. மாகாண பகிரங்க சேவை**

- மாகாண பகிரங்க சேவையை கட்டுப்படுத்தல், மாகாண பகிரங்க அலுவலர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல்.
- மாகாண பகிரங்க சேவை தொடர்பான சகல விடயங்கள் பற்றியும் தேவையான தீர்மானங்களை எடுத்தல்.
- மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.

**மாகாண ஆளுநரின் செயற்பாடுகள் மூன்று தன்மைகளைப் பெறுகின்றன.**

**1. ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் செயற்படுதல் :-**

- ஆளுநர் தமது நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதியின் பெயரிலேயே மேற்கொள்ள வேண்டும்.
- ஜனாதிபதியின் வழிநடத்தல்களின் கீழேயே தமது தற்துணிவு அதிகாரத்தை நடைமுறைப் படுத்தவேண்டும்.
- தேசிய நெருக்கடிகளின் போது ஆளுநர் ஜனாதிபதியின் வழிநடத்தலின் கீழேயே செயற்பட வேண்டும்.

**2. மாகாணத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் :-**

- ஆளுநர் மாகாண சபை செயற்படும் விதம் பற்றி மிகப் பரிசீலனையுடன் இருத்தல் வேண்டும்.
- காலத்திற்குப் பொருத்தமானதும் பொருள் மிக்கதுமான தீர்மானங்கள் மாகாண சபையால் எடுக்கப்படுகின்றனவா என்பதில் அவர் மிகவும் பரிசீலனையுடன் இருத்தல் வேண்டும்.
- மாகாணத்தின் பணச் செலவுகள் நிதிச்சட்டங்களுக்கு ஏற்பமேற்கொள்ளப் படுகின்றனவா என்பதில் கவனம் செலுத்தல் வேண்டும்.

**3.** நிதிச்சட்டங்களிலும், கட்டளைச் சட்டங்களிலும் இடம்பெறும் சட்ட ஏற்பாடுகளின் பாதுகாவலர் என்ற வகையில் மாகாண சபையின் செயற்பாடுகள் யாப்புக்கும், ஏனைய சட்டங்களுக்கும் ஏற்புடையனவாக மேற்கொள்ளப் படுகின்றனவா என்று பரிசீலனையுடன் இருத்தல் வேண்டும் இது தொடர்பாக அவர்

- மாகாண சபை நிறைவேற்றும் நியதிச் சட்டங்கள் அரசியல் யாப்புக்கு இயை பானவையா
- மாகாண சபை தேசிய கொள்கைகளுக்கு இசைவானவையாகச் செயற்படு கின்றதா
- மாகாண பகிரங் சேவை உரிய சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுகின்றதா என்று பரிசீலனையுடன் செயற்படுதல் ஆளுநரின் பொறுப்பாகும்.

## (இ) அரசாங்கத்தின் தலைவர் என்றவகையில் ஜனாதிபதியின் வகிபங்கு

01. அரச கொள்கையைத் தீர்மானித்தல்.
02. 19வது திருத்தத்தின்படி பாதுகாப்பு, மகாவலி, சுற்றாடல் போன்ற அமைச்சுக்களை தனக்குக் கீழ் வைத்திருத்தல் ஆனால் மூல யாப்பில் ஜனாதிபதி தான் விரும்புகின்ற எந்த அமைச்சையும் வைத்திருக்க முடியும்.

03. யாப்பின் 19வது திருதத்தின் படி சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பாராளுமன்ற செயலாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், ஒம்புட்ஸ்மன் போன்றோரின் பெயர்களை ஜனாதிபதி அரசியல் அமைப்பு பேரவைக்கு முன்வைக்கும் சிபாரிசினை அரசியல் அமைப்பு பேரவை அதற்கு அங்கீகாரம் வழங்குகின்ற போது ஜனாதிபதி அவர்களை நியமிப்பார்.

04. அரசியல் யாப்பின் 19வது திருத்தத்தின் படி சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர் அதன் உறுப்பினர்கள் என்போரை அரசியல் அமைப்புப் பேரவையின் விதந்துரையின் படி நியமிப்பார்.

05. யாப்பின் 19வது திருத்தத்திற்கு அமைவாக 33(2)(உ) வின் படி உயர்தொழிலில் பிரபல்யம் அடைந்தவர்களாகவும்,உயர் நடத்தையையும் உயர் தொழிலில் நேர்மையையும் பேணி வந்துள்ளவர்களாகவும் இருக்கின்ற சட்டத்தரணிகளை ஜனாதிபதி வழக்கறிஞர்களாக நியமிப்பார். ஆனால் இந்த அதிகாரம் மூலயாப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

06. யாப்பின் 19வது திருத்தத்திற்கு அமைவாக ஜனாதிபதி அரசியல் அமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் பேரில் பதில் பொலிஸ்மா அதிபர், பதில் சட்டமா அதிபர், பதில் கணக்காய்வாளர் நாயகம் போன்றோரை நியமிப்பார்.

## (ஈ) தற்போதைய யாப்பின் கீழ் ஒப்பங்கோடல்

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் மக்கள் கருத்துக்கணிப்பு முறை முதலாவதாக இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 12 ஆம் அத்தியாயத்தின் 83ஆம் உறுப்புரைக்கமைய அரசியலமைப்பில் 1,2,3,6,7,8,9,10,11,30(2) மற்றும் 62(2) உறுப்புரைகளை திருத்துதல் அல்லது நீக்குதலும் மாற்றீடு செய்தலும் தொடர்பாக பாராளுமன்றத்தில் வருகை தராத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த அங்கத்தவர்களில் $^2/_3$ பங்கினர் அங்கீகரிப்பதோடு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களின் அங்கீகாரமும் அவசியமானதாகும். இவ் உறுப்புரைகளில் உள்ளடக்கப்பட்ட விதிமுறைகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி பின்வரும் சந்தர்ப்பங்களில் மக்கள் தீர்ப்புக்கு ஏற்பாடு செய்யலாம்.

1. அமைச்சரவை மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டுமென சான்றுரை அல்லது சிபாரிசு அளித்துள்ள விடயங்கள்.
2. உயர் நீதிமன்றம் மக்கள் தீர்ப்புக்கு விடப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ள விடயம்.
3. பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சட்டமூலம் நாட்டு நலனுக்கு அவசியமானது என ஜனாதிபதி கருதும்பட்சத்தில், இவ்விடயம் அரசியலமைப்பில் 19ம் திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளது.
4. ஜனாதிபதியின் அபிப்பிராயப்படி தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என அவர் கருதும் விடயங்கள். மக்கள் தீர்ப்பு ஒவ்வொன்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடத்தப்படல் வேண்டும். தேர்தல் ஆணையாளர் மக்கள் தீர்ப்பு முடிவு பற்றி ஜனாதிபதிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

மக்கள் தீர்ப்புக்கென மக்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயம் மக்கள் தீர்ப்பின் போது அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் பெரும்பான்மை வாக்கு களால் அங்கீகரிக்கப்படின் அது மக்களினால் அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படும். ஆனால் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை வாக்காளர் இடாப்பில் பதியப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையில் $^2/_3$ பங்கிற்கு

குறைவாக காணப்படின் அத்தகைய விடயம் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்ட மொத்த வாக்காளர்களில் $^{1}/_{3}$ பங்கினரால் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே மக்களினால் அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

ஒப்பங்கோடல் ''ஆம்'' , ''இல்லை'' என்ற அடிப்படையிலேயே வாக்கெடுப்பு சீட்டு அமைந்திருக்கும் இவை ஒவ்வொன்றுக்கும் சின்னங்களும் ஒதுக்கப்படலாம். வாக்கெடுப்பின் போது மக்கள் குறித்த விடயத்தினை ஆதரித்தால் ''ஆம்'' என்ற சின்னத்திற்கும், நிராகரித்தால் ''இல்லை'' என்ற சின்னத்திற்கும் வாக்களிக்க வேண்டும்.

**மக்கள் தீர்ப்பு பற்றிய இலங்கையின் அனுபவம்.**

1983 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பதவிக்காலத்தை பொதுத் தேர்தலின்றி மேலும் 06 ஆண்டுகள் நீடிப்பதற்காக அப்போதைய ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒப்பங்கோடல் ஒன்றை நடத்த தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டார். பாராளுமன்றத் தேர்தல் இன்றி பதவிக்காலத்தை நீடிக்க விரும்பும் வாக்காளர்கள் ''இலாம்பு'' எனும் சின்னத்திற்கும், மீண்டும் பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என விரும்பும் வாக்காளர்கள் ''குடம்'' இற்கும் வாக்களிக்குமாறு கோரப்பட்டனர்.

இந்த மக்கள் தீர்ப்புத் தேர்தலில் பாராளுமன்றத் தேர்தல் இல்லாமல் பதவிக் காலத்தை நீடிக்க 31,41,223 (54.66%) வாக்குகளும் பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதற்கு 26,05,983 (45.34%) வாக்குகளும் கிடைத்தன. இதன்படி பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை தேர்தலன்றி நீடிக்க பெரும்பான்மை வாக்கு கிடைத்ததனால் பாராளுமன்றம் தேர்தலின்றி 06 வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்தப்பட்ட ஒப்பங்கோடல் நாம் பெற்றுக் கொண்ட ஒரு மோசமான அனுபவமாகும். அந்த ஒப்பங்கோடலின் போது அரச அதிகாரம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான உரிமையின் மீது தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இவ் ஒப்பங்கோடல் வன்முறைச் சம்பவம் ஒன்றில் நடத்தப்பட்டமையால் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் அளவு குறைந்தது. அவ் ஒப்பங்கோடலின் மூலம் நடைபெறவிருந்த பொதுத் தேர்தல் பிற்போடப் பட்டதால் 1977 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் உறுப்பினர்களே தொடர்ந்தும் இருந்தனர் என்பது நோக்கத்தக்கது.

## பகுதி III

**08. பின்வருவனவற்றில் இரண்டினை பரிசீலிக்குக.**

**(அ) இந்திய சமஷ்டியில் அதிகாரப் பகிர்வு முறைமை**

**(ஆ) ஐக்கிய அமெரிக்க சமஷ்டியில் அதிகாரப்பகிர்வு முறைமை**

**(இ) சுவிட்சர்லாந்தின் அதிகாரப்பகிர்வு முறைமை**

**(அ) இந்திய சமஷ்டியில் அதிகாரப் பகிர்வு முறைமை**

இந்திய அரசியல் யாப்பு ஒரு கூட்டாட்சி அரசியல் யாப்பாகும். 29 மாநிலங்களையும் 07 யூனியன் பிரதேசங்களும் இக்கூட்டாட்சியில் உள்ளன. உலகின் சிறந்த கூட்டாட்சி எனக் கூறப்படுகின்ற

அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்றவற்றின் சில பண்புகளும் இந்திய அரசியலமைப்பில் காணப்படுகின்றன. ஆனால் அதிகாரப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் வேறு சில விடயங்களிலும் கூட்டாட்சிக்கு எதிரான பண்புகளும் காணப்படுகின்றன. வலுவான மத்திய அரசாங்கம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும் என்ற அடிப்படையிலேயே கூட்டாட்சிக்கு எதிரான பண்புகள் அதிகளவில் சேர்க்கப் பட்டுள்ளன. இதனால் இந்திய கூட்டாட்சிக்கு ஒரு அரைகுறை கூட்டாட்சி எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்திய அரசியல் யாப்பின் மூலம் 3 அதிகாரப் பட்டியல்களின் கீழ் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையில் அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி,

மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் - 97 விடயங்கள்
(தற்போது அவ்விடயங்கள் 100 வரை அதிகரித்துள்ளன.)
மாநில அரசாங்கத்தின் அதிகாரங்கள் - 66 விடயங்கள்
(தற்போது அவ்விடயங்கள் 61 வரை குறைந்துள்ளன.)
ஒத்தியங்கும் அதிகாரங்கள் - 47 விடயங்கள்
(தற்போது அவ்விடயங்கள் 52 வரை அதிகரித்துள்ளன.)

மேற்குறிப்பிட்ட 3 அதிகாரப் பட்டியல்களுக்கு மேலதிகமாக யாப்பின் மூலமும் மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## இந்திய மத்திய அரசின் அதிகாரப் பட்டியல் (97)

பாதுகாப்பு, நிதி, அணுசக்தி, சர்வதேச உறவு, ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைகள், குடியுரிமை, புகையிரதம், கப்பல் போக்குவரத்து, தபால் தந்தி, நாணய வெளியீடு, வெளிநாட்டு கடன்கள், சனத்தொகை கணக்கெடுப்பு, வருமானவரி, ஏற்றுமதி வரி, தொடர்பாடல், கம்பனிகளைப் பதிவு செய்தல், வங்கி மற்றும் காப்புறுதி, சுரங்கத் தொழில், தேசிய பல்கலைக்கழகங்கள், சுகாதாரம் மற்றும் நிறுவனத் தொடர்புகள், நிதி மற்றும் வரி சம்பந்தமான ஏற்பாடுகள், வெளிநாட்டு உடன்படிக்கைகள்.

## இந்திய மாநிலங்களின் அதிகாரப் பட்டியல் (66)

பொலிஸ், சிறைச்சாலைகள், உள்ளூராட்சி, பொதுச் சுகாதாரம், நூல் நிலையங்கள், விவசாயம், திரைப்பட அரங்கு, மாநிலங்களின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணல், நீர்ப்பாசனம், மாநிலக் கல்வி, சூதாட்டம், நிலவரி, மின்சார வரி, மதுவிலக்கு, மாநிலங்களின் பெருந்தெருக்கள், மாநிலங்களின் வர்த்தகம், தொழில்வரி.

## ஒத்தியங்கு அதிகாரங்கள் (47)

தடுப்புக்காவல், திருமணம், விவாகரத்து, நீதிமன்றங்களின் மேல் அவதூறு, சமூகப் பொருளாதாரத் திட்டங்கள், காடுகள், தொழிலாளர் சங்கம், கல்வி, சமூக நலப் பாதுகாப்பு, தொழிலாளர் நலன், மருந்துகள், தொழிலாளர் பிரச்சினைகள், வர்த்தக ஏகபோக உரிமை, அத்தியவசியப் பொருட்கள் நிருவாகம்.

எனவே இந்திய சமஷ்டியில் அதிகாரப் பங்கீடு என்பது ஏனைய நாடுகளை விட சற்று வித்தியாசமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது.

## (ஆ) ஐக்கிய அமெரிக்க சமஷ்டியில் அதிகாரப்பகிர்வு முறைமை

ஒரு சமஷ்டியின் முக்கியகூறு மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத் திற்குமிடையே காணப்படும் அதிகாரப் பங்கீட்டு முறையாகும். இந்த அதிகாரப் பங்கீட்டு முறை சிறப்பான முறையில் அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சமஷ்டியில் ஐம்பது மாநிலங்கள் இடம் பெறுகின்றன. சில குறிப்பிட்ட அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கும் சில குறிப்பிட்ட அதிகாரங்கள் மாநில அரசாங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் (Tresidual Powers) மாநிலங்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க சமஷ்டியின் சிறப்பு அம்சமாகும்.

### அமெரிக்க மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள்

அமெரிக்க அரசியலமைப்பின் முதலாவது அத்தியாயத்தின் எட்டாவது பிரிவில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. இந்த பிரிவு மிக நீளமாக இருப்பதுடன் மிக முக்கியமானதாகயிருப்பதால் தேசிய இயந்திரத்தின் பொறியென இப்பிரிவு கருதப்படுகின்றது. இப்பிரிவில் மத்திய அரசுக்கு 18 அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. மாநிலங்களுக்கிடையிலான வர்த்தகத்தை நிருவகித்தல்.
2. வெளிநாடு அல்லது சர்வதேச தீவிரவாத ஆக்கிரமிப்புக்களில் நாட்டையும் அரசாங்கத்தையும் பாதுகாத்தல்.
3. போர் புரிவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருத்தல் (தேசிய பாதுகாப்பு).
4. வெளிநாட்டுத் தொடர்பு பற்றிய அதிகாரம். (வெளிநாட்டு விவகாரம்).
5. மாநிலங்களுக்கு உரித்தான விமான நிலையங்களை கைப்பற்றிக் கொள்வதற்கான அதிகாரம்.
6. சர்வதேச ரீதியிலான வர்த்தகத்தை தீர்மானித்தல். (வெளிநாட்டு வர்த்தகம்).
7. மாநிலங்களுக்கு வரையறுக்கப்படாத சகல வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்ளல்.
8. வரி அறவிடவும் செலவு செய்யவும் அதிகாரமுண்டு.
9. ஏற்றுமதி இறக்குமதி வரி விதிப்பு.
10. வெளிநாடுகளுடன் ஒப்பந்த உடன்படிக்கைகளை செய்தல்.
11. தேசிய பொருளாதார அபிவிருத்தி.
12. குடிவரவும் குடியகல்வும்.
13. சர்வதேச துறைமுகங்கள்.
14. சர்வதேச விமான நிலையங்கள்.
15. நாணயம் வெளியிடுதல்.
16. கடன் வாங்குதலும், கொடுத்தலும் (வெளிநாடுகளுடன்).
17. லொத்தர் சீட்டு, வானொலி, தொலைக்காட்சி, மின்னஞ்சல், இணையம், தபால் சேவை, பெருந்தெருக்கள் உட்பட பரந்த பரப்பிலான அதிகாரங்கள் உண்டு.
18. கூட்டாட்சி நீதிமன்றங்களை நிறுவுதல்.
19. குடியுரிமையை வழங்குதல்.

### அமெரிக்க மாநில அரசுகளின் அதிகாரங்கள்

அமெரிக்க அரசியலமைப்பின் மூலம் மத்திய அரசிற்கு குறித்து ஒதுக்கப்படாத சகல அதிகாரங்களும் மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

1. உள்ளூராட்சி மன்றங்களை தாபித்தல்.
2. குடியுரிமையுடன் தொடர்புடைய பாதுகாப்பு (பொலிஸ் நடவடிக்கை).
3. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி (பாடசாலைகள்).
4. சுகாதாரமும் உடல் நலமும்.
5. வீடமைப்பு.
6. உள்நாட்டு வர்த்தகம்.
7. நீர்ப்பாசனம்.
8. மீன்பிடி
9. உல்லாசப் பயணம்.
10. கைத்தொழில்.
11. சுரங்கத்தொழில்.
12. சாதாரண சிவில் குற்றவியல் சட்டங்களை இயற்றுதல்.

### ஒத்தியங்கும் அதிகாரங்கள்

1. வரி விதிப்பு, சேகரிப்பு மற்றும் அளவீடு.
2. அரசுக்கு நிதியினைப் பெற்றுக் கொள்ளல், செலவு செய்தல்.
3. புதிய அரசாங்கத்தின் தன்மைக்கு ஏற்ப நீதிமன்றங்களை நிறுவுதல்.
4. சட்டங்களை விதித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
5. சிவில் உரிமைகளை பாதுகாத்தல்.
6. தேர்தல் நடாத்துதல்.
7. சுகாதாரம், பாதுகாப்பு, நலன்புரி

### (இ) சுவிட்சர்லாந்தின் அதிகாரப்பகிர்வு முறைமை

உலகிலுள்ள கூட்டாட்சிகளும் சிறப்பு வாய்ந்த கூட்டாட்சியாக சுவிட்சர்லாந்து விளங்குகின்றது. சுவிஸ் புது மாதிரியான அரசியல் முறைமையும் பலமான சமஷ்டி ஆட்சி முறைமையும் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. 1291ம் ஆண்டின் 3 மாநிலங்களை (கன்ரன்கள்) கொண்டு தோன்றிய சுவிஸ் கூட்டாட்சியில் இன்று 26 மாநிலங்கள் (கன்ரன்கள்) காணப்படுகின்றன. சமஷ்டி கூட்டாண்மையால் மத்திய அரசாங்கம் இதில் பிரதானமானதாகும்.

ஏனைய சமஷ்டி நாடுகளின் அரசாங்கங்களைப் போன்று சுவிஸ் கூட்டாட்சியிலும் சமஷ்டி ஒன்றுக்குரிய அடிப்படை பண்புகள் வேறுசில சிறப்புக்களும் சேர்ந்து இணையப் பெற்றுள்ளன.

அதிகாரப் பங்கீட்டைப் பொறுத்தவரையில் சுவிட்சர்லாந்து அரசியலமைப்பு அமெரிக்க அரசியலமைப்பை பெரிதும் ஒத்திருக்கின்றது. மத்திய அரசு சில அதிகாரங்களை எடுத்துவிட்டு எஞ்சியதை மாநிலங்களுக்கு விடப்பட்டுள்ளது.

**மத்திய அரசின் அதிகாரங்கள்**

i. வெளிநாட்டு விவகாரம்.
ii. யுத்தத்தையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தல்.
iii. பாதுகாப்பும் இராணுவ நடவடிக்கையும்.
iv. தொடர்பாடல், தபால், புகையிரதம், தொலைபேசி, தந்திப் போக்குவரத்து
v. நிதி விவகாரம்
vi. அளவை நிறுவை
vii. சுங்க நடவடிக்கைகள்
viii. வியாபாரமும் கடன்களுக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகளும்.
ix. வெளியீட்டு உரிமை, உரித்துரிமை
x. வெடிமருந்துகள், மதுபானம் தொடர்பான தனியுரிமை அதிகாரங்கள்
xi. மக்கள் சுகாதாரம்
xii. கடல்மார்க்கப் போக்குவரத்து

**மாநில அரசின் அதிகாரங்கள்**

i. கல்வி உயர் கல்வி விவகாரம்
ii. பத்திரிகை நிர்வாகம்
iii. பெருந் தெருக்கள்
iv. கைத்தொழில்
v. குடிவரவு
vi. தொற்று நோய்த் தடுப்பு
vii. வங்கி நடவடிக்கைகள்

**09. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை விளக்குக.**

**(அ) பாசிசவாதம்**

**(ஆ) அரசியல் கட்சிகளின் பணிகள்**

**(இ) காலணித்துவ அரசு**

**(ஈ) அரசுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள்**

**(அ) பாசிசவாதம்**

பாசிச வாத அரசியல் கருத்தியல் 20ம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் தோற்றம் பெற்றதாகும். பாசிச வாதம் அடிப்படையில் ஒரு கருத்தியலாக ஏற்றுக் கொள்ளப்படாத போதிலும் நடைமுறை ரீதியான அரசியல் நடத்தைகளை கொண்டிருந்த தனால் அரசியல் கருத்தியலாக ஆராயப்படுகின்றது. இது 1ம் மற்றும் 2ம் உலக மகா யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஓர் தத்துவமாகவும், அரசியல் இயக்கமாகவும் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது. பாசிசம் என்ற சொல் பாஸஸ் எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். பாசிசவாதமானது இத்தாலி நாட்டின் பெனிட்டோ முசோலினி தலைமைத்துவத்தில் தோற்றம் பெற்ற சர்வாதிகார இயக்கத்தை குறிப்பிட பயன்படுத்தப்பட்டதாகும்.

பாசிசத்தின் அடிப்படைக் கொள்கை அரசு தான் எல்லை, அரசுக்காக தான் தனி மனிதன் காணப்படுகின்றான் என்பதாகும். அதாவது, அது எவராலும் எதிர்க்கப்பட முடியாதது. ஒவ்வொன்றும் அரசுக்காகவே, அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய முடியாது, மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஒழுங்கு செய்யவும் கட்டுப்படுத்தவும் வலிமை பெற்றது அரசு எனக் குறிப்பிடுகின்றது. மேலும் பொருளாதார விடயங்களை தீர்மானித்தல் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம் அரசிடமே உள்ளது. அரசின் அடிப்படை வன்முறை, மக்களாட்சி ஓர் மூடத்தன்மையான, ஊழல் நிறைந்த, நடைமுறைக்கு ஒத்துவராத ஆட்சி முறை பாராளுமன்றங்கள் வெறும் பேச்சுவார்த்தை கூடங்கள் என பாசிசம் குறிப்பிடுகின்றது.

## பாஷிசத்தின் பண்புகள்

**01. அரசியல் அனைத்தாண்மை வாதம் (Totalrianism) :**

சர்வாதிகார ஆட்சி முறை ஒன்றை கட்டெழுப்புவதே பாசிசவாதத்தின் பிரதான பண்பாக காணப்படுகின்றது. அதனை கட்டியெழுப்ப அனைத்தாண்மை வாதம் எனும் எண்ணக்கருவை அடையாளப்படுத்தியது. அனைத்தாண்மை என்பது அரசு அடிப்படையிலேயே சர்வாதிகார மானதும் சர்வாதிகார ஆட்சி கட்டமைப்பின் மூலம் முழு சமூகம், அரசியல் முறைமையை தனது முழுமையன கட்டுப்பாட்டிற்கும், ஆதிக்கத்திற்கும் உட்படுத்திக் கொள்வதாகும்.

**02. அரசுக்கு அடிபணிதல் (Cult of the State) :**

அரசின் அதிகாரத்தை முழு சமூகம், பிரஜைகள் எதுவித நிபந்தனைகள் மற்றும் கேள்விகளின்றி ஏற்றுக் கொள்வதாகும், அதன் அதிகாரத்துக்கு தனது சுய விருப்பின்படி அடிபணிவதாகும். அரசானது முழு இனம், சமூகத்தினது உயர்வு, கௌரவம் மற்றும் விதி ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும். அரசுக்காகவே மக்களே அன்றி மக்களுக்காக அரசு அல்ல என்பது இதன் விளக்கமாகும்.

**03. தனியார் சுதந்திரம் இல்லை :**

தாராண்மை வாதம் தனிநபர் சுதந்திரத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. ஆனால் பாசிச வாதம் தனிநபர் சுதந்திரத்தை முற்றாக மறுப்பதாகும். பாசிச வாதத்தில் தனியார் சுதந்திரம் என்பது அரசு, இனம், தலைவனுக்கு நிபந்தனையின்றி காட்டும் அடிபணிவை பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

**04. தீவிர வர்க்க வாதம் / இன வாதம் :**

ஜேர்மனிய நாசிச வாதத்தின் மூலம் வளர்க்கப்பட்ட இப் பண்பின் மூலம் ஜேர்மன் இனம் உலகில் உயர்ந்த இனம் என வெளிப்படுத்தப்படுவதாகும். ஜேர்மன் இனம் ஆசிய இனம் என்பதால் இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டமையை குறிப்பிடலாம்.

**05. தீவிர இராணுவ வாதம் :**

ஜேர்மனியரே உலகின் உயர்ந்த இனம் என்பதால் முழு உலகமும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர 2ம் உலக மகா யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஜேர்மனியர்கள் முற்பட்டமை.

இவை தவிர பாசிச வாதத்தின் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

06. வன்முறையும் தீவிரவாதத் தன்மையும்.
07. உலக சமாதானத்தை நிராகரித்தல்.
08. சர்வதேச சட்டம், சர்வதேச அமைப்புக்களை நிராகரித்தல்.
09. தனிக் கட்சி முறையின் கீழ் சர்வாதிகார ஆட்சி இடம்பெறல்.
10. பாராளுமன்ற ஜனநாயகத்தை எதிர்த்தல்.

## பாசிசத்தின் நிறைகள்

01. சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டமை.
02. பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டமை.
03. இராணுவம் வலிமை பெற்றமை.
04. உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தமை.
05. புதியதொரு அரசியல் கருத்தியலை அறிமுகம் செய்தமை.
06. முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இத்தாலியும் ஜேர்மனியும் வலிமையான நாடுகளாக மாறியமை.
07. தேசிய வாதம் வளர்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை.
08. மக்கள் அனைவரையும் நாட்டுப் பற்றாளர்களாக்க முடிந்தமை.
09. ஒழுக்க ரீதியிலான கட்டுப்பாடு கொண்டு வர முடிந்தமை.

### (ஆ) அரசியல் கட்சிகளின் பணிகள்

**1. சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று திரட்டுதல்.**

அரசியல் சமூகத்தில் சிதறிக் காணப்படும் சிக்கல் நிறைந்த பொது விருப்பங்களை ஒன்று திரட்டி முறையாக ஒழுங்கமைத்தல் அரசியல் கட்சிகளின் பிரதான பணியாகும். மனிதர்கள் அரசியல் சமுதாயப்படுத்தலுக்கு உட்பட்டிருக்கும் அளவின் அடிப்படையில் அவ்வாறு வெளியிடப்படும் கருத்துக்களின் உண்மை, பொய் தர்க்க ரீதியான தன்மை என்பன தங்கியுள்ளன. எவ்வாறாயினும் சகல மனிதரும் எந்த வொரு அரசியல் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக தனிப்பட்ட கருத்துக்களை வகிப்பர். அதன்படி அரசியல் முறையில் எச் சந்தர்ப்பத்திலும் ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தனிக்கருத்து நிலவமாட்டாது. எண்ணிறைந்த பல்வேறு கருத்துக்களினையே காணலாம். ஆனால் அவை அனைத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு பொதுக்கருத்தை உருவாக்க வேண்டும். மறு வார்த்தையில் கூறின் வேற்றுமையில் ஒற்றுமையினை ஏற்படுத்த வேண்டும்.

அவ்வாறின்றி ஜனநாயக அரசியல் முறையினைக் கொண்டு நடத்த முடியாது. அவ்வாறாயின் ஒரு பொதுக்கருத்தினை எவ்வாறு உருவாக்கலாம் என்ற வினா இங்கு எழுகின்றது. ஜனநாயக முறையில் இப்பணியை நிறைவேற்றுவதற்குள்ள ஒரே கருவி அரசியல் கட்சிகள் ஆகும்.

அரசியல் கட்சிகள் சிதறிக் காணப்படும் பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று திரட்டி அவற்றை ஒழுங்குபடுத்தி சரியான முறையில் தர்க்க ரீதியான கொள்கைகள் என்ற வகையில் மக்களுக்கு சமர்ப்பிக்கின்றன. தனது கருத்து சமமானவையாக அல்லது அதனை நெருங்கிய வகையில் உள்ள அரசியல் கட்சிகளுடைய கொள்கைகளுடன் மக்கள் ஒன்றிணைவதனை நாம் காண்கின்றோம். அவ்வாறு அரசியல் கட்சிகள் சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தினை ஒன்று திரட்டுகின்றன. அவ்வாறு ஒன்று திரட்டப்பட்ட மக்களின் கருத்துக்களின் அடிப்படையிலேயே அரச கொள்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

**2. வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுதல்.**

ஒரு குறிப்பிட்ட பிரச்சினை தொடர்பாக மாற்றுத் தீர்வுகள் முன்வைக்கப் பட்டிருக்கும் போது அவற்றுள் எது சரியானது என்பதனை தெரிவு செய்வதற்கு அரசியல் கட்சிகள் வாக்காளர்களுக்கு வழி காட்டுகின்றன. நாட்டின் முக்கியமான அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகள் பற்றி வாக்காளர்களுக்கு தகவல்களினை வழங்கி அவர்களை அரசியல் ரீதியாக விழிப்புணர்வுடன் இருக்கச் செய்கின்றது. அதிகாரத்தில் அமர்ந்துள்ள கட்சி இதனை செய்கின்றது. அவை நன்மையா தீமையா என்பது பற்றி மக்களுக்கு அறிவூட்டுகின்றன. மக்களை அறிவூட்டுவதற்காக அரசியல் கட்சிகள் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், சுவரொட்டிகள், விளரம்பரங்கள், பத்திரிகைச் செய்திகள், ஆய்வுப் பாட நெறிகள், துண்டுப் பிரசுரங்கள், புதினத்தாள்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, எதிர்ப்பு இயக்கங்கள் போன்றவற்றினையும் பயன்படுத்துகின்றன.

**3. சமூக அதிகாரத்தை ஆணை அதிகாரமாக மாற்றுதல்.**

மக்களையும் அரசாங்கத்தையும் தொடர்புபடுத்தல் அல்லது மக்கள் அதிகாரத்தை அரசாங்க அதிகாரமாக மாற்றுதலை அரசியல் கட்சிகளே மேற்கொள்கின்றன. ஜனநாயகத்தின் கீழ் அரசியல் அதிகாரத்தின் இறுதி உரித்தாளர் பொது மக்களாவர. ஆனால் மக்களின் அவ்வதிகாரம் ஆணையதிகாரமாக அல்லாதிருப்பதோடு அரசியல் கட்சிகளே அவற்றை அரசாங்கத்தை நோக்கி எடுத்துச்சென்று ஆணையதிகாரமாக மாற்றுகின்றன.

**4. மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல்.**

அரசாங்கமோ வேறு நிறுவனங்களோ அல்லது சமூக மனிதர்களோ உரிமைகளையும் சுதந்திரங்களையும் மீறும் போது அவற்றை பாதுகாப்பதில் தலையிட்டு மக்களை ஒழுங்குபடுத்தி அதிகம் பாதிப்பினை செலுத்தும் வகிபங்கினை எதிர்க்கட்சிகள் மேற்கொள்கின்றன. ஜனநாயக அரசியல் முறைமையில் அரசியல் கட்சிகள் மக்களின் பாதுகாவலர்களாகச் செயற்படுகின்றனர்.

**5. அரசியல் தலைவர்களைப் பயிற்றுவித்தல்.**

தேசிய மட்டத்திலான அரசியல் தலைவர்களையும் அரசியல் வாதிகளையும் பயிற்றுவித்து உருவாக்கும் செயற்பாடு அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளப் படுகின்றன. அரசியல் கட்சிகளின் கீழ் மட்டத்திலிருந்து தலைமைத்துவம் வரை பயணிக்கும் போது பெற்றுக்கொள்ளும் அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்தி தேசிய மட்டத்திலான தலைவர்களாக மாறும் வாய்ப்பு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது.

**6. பிரதிநிதித்துவம்.**

சட்டத்துறைக்கு அல்லது பாராளுமன்றத்திற்கு பிரதிநிதித்துவத்தை சரியாக வழங்குவது அரசியல் கட்சியின் முக்கிய பணியாகும். தற்கால மறைமுக ஜனநாயக முறைகளில் மக்கள் தமது பிரதிநிதித்துவ அரசியல் கட்சியூடாகவே தெரிவு செய்கின்றனர். அரசியல் கட்சி இல்லாவிட்டால் மக்களின் பிரதிநிதித்துவத்தை சரியாக அளவிட முடியாது. எனவே பாராளுமன்றத்திற்கும் ஜனநாயக மக்கள் குரல் ஒலிப்பிற்கும், ஜனநாயகம் மேல் ஓங்குவதற்கும் பிரதிநிதித்துவம் அவசியமாகும். இந்த பிரதிநிதித்துவத்தை நுட்பமாக தெரிவு செய்வதற்கு அரசியல் கட்சிகள் அவசியமாகும்.

**7. அரசாங்கத்தை அமைத்தல்.**

அரசியல் கட்சிகள் தங்கள் திட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்து வாக்காளர்களின் முன் சமர்ப்பித்து ஆதரவு திரட்டுகின்றன. தங்கள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து தேர்தலில் போட்டியிடுகின்றன. தேர்தலில் பெரும்பான்மைத் தொகுதிகளில் வெற்றி பெற்று அரசியல் கட்சி அரசாங்கத்தை அமைக்கிறது.

**8. மக்களை பொது வாழ்வில் ஈடுபடுத்துகின்றது.**

பொது வாழ்விலும், அரசாங்கத்திலும் மக்கள் ஈடுபாடு உடையவர்களாக இருப்பதற்கு அரசியல் கட்சிகளே காரணமாகின்றது. அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளை விளக்கும் போதும், வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்கும் போதும் மக்கள் பொது வாழ்விலும் ஈடுபாடுடையவர் களாக மாறுகின்றார்கள். தாங்கள் வாழும் பகுதியின் வளர்ச்சியிலும், ஆட்சி முறையிலும் ஆர்வத்துடன் பங்கு கொள்கின்றார்கள்.

**9. அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது.**

அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்புச் சங்கிலியாக அமைகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கட்சியைச் சார்ந்தவர் களாகவும் மக்களின் பிரதிநிதிகளாகவும் அமைகின்றனர். கட்சிகளின் வழியாகவே அரசாங்கக் கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவு திரட்டப்படுகிறது. இவ்வாறு கட்சிகள் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பை ஏற்படுத்துகின்றன.

**10. அரசாங்க நிறுவனங்களிடையே சுமுகமான உறவை ஏற்படுத்துகிறது.**

பாராளுமன்றமும், நிர்வாகத் துறையும் சுமுகமாகச் செயற்படுவதற்கு அரசியல் கட்சிகளே காரணம். பாராளுமன்ற முறையில் சட்ட மன்றத்தில் பெரும்பான்மை உடையவர்களே நிர்வாகத் துறையினராக அமைந்து நிர்வாகத் துறைக்கும் சட்டத் துறைக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்துகின்றனர். மேலும் பாராளுமன்றத்தின் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் இடையே ஏற்படும் பூசல்களும் கட்சி முறை இருப்பதால் தவிர்க்கப்படுகின்றது.

**11. கருத்துத் தரகராகச் செயற்படுதல்.**

அரசியல் கட்சிகள் பல்வேறு பிரச்சினைகளைத் தெரிவு செய்து அவற்றில் கவனம் செலுத்தி கருத்துக் தரகராகச் செயற்படுகின்றன.

**12. சமூக நலப் பணிகள்.**

அரசியல் கட்சிகள் சமூக நலப் பணிகளையும் மேற்கொள்கின்றன. அவை அரசியல் சாராப் பணிகள் என அழைக்கப்படுகின்றன. பஞ்சம், வரட்சி, தொற்று நோய், யுத்தங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் அவதியுறும் மக்களுக்கு நிவாரண சேவைகளை மேற்கொள்கின்றன. அவை எழுத்தறிவின்மை, தீண்டாமை, அறிவீனம், பிணி போன்ற சமூகத் தீங்குகளை ஒழிப்பதற்காகப் பாடுபடுகின்றன.

## (இ) காலணித்துவ அரசு

பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், போர்த்துக்கல், ஸ்பானியா போன்ற ஐரோப்பிய காலனித்துவ அதிகாரங்களுக்கு அல்லது ஆக்கிரமிப்புக்கு நேரடியாக கீழ்நிலைப்படுத்தப் பட்டிருந்த ஐரோப்பா அல்லாத நாடுகளில் விருத்தியடைந்த அரச மாதிரியே காலனித்துவ அரசு எனப்படும். இந்த அரசு வரலாற்று ரீதியாக 16ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தது.

உதாரணமாக 16ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இலங்கை 1505 இல் போர்துக்கீசர் காலனித்துவ ஆட்சியின் கீழேயும் 1602 இல் ஒல்லாந்தர் காலனித்துவ ஆட்சியின் கீழும் இருந்த, 1815ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு 1948ம் ஆண்டுவரை காலனித்துவ அரசாகவே இருந்தது.

இதைத் தவிர எகிப்து (1922ம் ஆண்டுக்கு முன்னர்) கானா (1957க்கு முன்னர்), தன்சானியா, கென்யா (1963 முன்னர்), ரொடீசியா (1966 முன்னர்), நைஜீரியா (1960 முன்னர்) இந்தியா (1947 முன்), பாகிஸ்தான் (1947 இற்கு முன்னர்), கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள் பிரித்தானிய ஆட்சியின் கீழும் அல்ஜீரியா (1962 முன்னர்) பிரான்ஸ் ஆதிக்கத் திற்கு கீழேயும் காங்கோ (1963 முன்னர்) பெல்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழேயும் அங்கோலா (1975 முன்னர்), முஸாம்பிக் (1975 முன்னர்) போத்துக்கல் ஆதிக்கத்திற்கு கீழும் காலனித்துவ அரசுகளாக இருந்துள்ளன.

## காலனித்துவ அரசின் பண்புகள்

1. காலணனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் அனைத்து வர்க்கங்களையும் உள்ளடக்கிய முழு சமூகத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
2. காலனித்துவ அரசு குடியேற்ற வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளினால் தீர்மானிக்கப் படுவதில்லை. அந்நிய நாடொன்றின் ஆளும் வர்க்கம் குடியேற்ற மக்களோடு கொள்ளும் உறவின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.
3. காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் எந்த வர்க்கத்தையும் தனது ஆட்சியின் பங்காளர்களாக கொண்டிருப்பதில்லை.
4. காலனித்துவ ஆட்சி உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தனக்கு சார்பாக உபயோகித்துக் கொள்ளும்.
5. காலனித்துவ உயர் குழாமினரான நிலபிரபுத்துவ வர்க்கமும், முதலாளித்துவ வர்க்கமும் காலனித்துவத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் சந்தர்ப்பமும் உண்டு.

(உ - ம்) : போலந்து, எகிப்து போன்ற நாடுகளில் காலனித்துவ எதிர்ப்பு போராட்டத்திற்கு நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளித்துவத்தினர் ஆதரவு வழங்கிமை.

6. காலனித்துவ அரசு குடியேற்ற வர்க்கங்களுக்கிடையில் ஐக்கியம், இணக்கப்பாடு ஏற்படுவதைத் தவிர்த்தல்.
7. காலனித்துவ அரசு பொது நிருவாகம், பொலிஸ், இராணுவம், நீதி மன்றம், சிறைச்சாலை போன்ற ஒடுக்குமுறை அரசு இயந்திரங்களை கொண்டு அடக்கு முறையை பிரயோகித்தல்.
8. காலனித்துவ அரசுக்கு எதிராக பல தேசிய இயக்கங்கள் தோற்றம் பெற்று கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

   (உ - ம்) : இலங்கையில் கலால் இயக்கம், தேசிய காங்கிரஸ், இடது சாரி இயக்கம், தொழிலாளர் சங்கம் என்பவற்றைக் குறிப்படலாம். இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரஸ்

## (ஈ) அரசுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

நடைமுறையில் அரசும் அரசாங்கமும் ஒன்றுக்கொன்று பதிலீடாகப் பயன்படுத்தப் படுவதுண்டு, இங்கிலாந்தின் ஸ்டுவார்ட் மன்னன், பிரான்சில் 14ம் லூயி ஆகியோர் அரசாங்கத்திற்கும் அரசிற்கும் இடையே எவ்வித வேறுபாட்டினையும் காணவில்லை. 19ம் நூற்றாண்டில் ஜோன் லொக் என்பவரே முதன் முதலாக அரசினையும் அரசாங்கத் தினையும் வேறுபடுத்துவதற்கான முயற்சியினை எடுத்திருந்தார். இதன்படி அரசும் அரசாங்கமும் வேறுபடும் விதத்தினைப் பின்வருமாறு காணலாம்.

**1. அமைப்பு :**

அரசு என்பது ஆள்புலம், மக்கள் கூட்டம், அரசாங்கம் மற்றும் இறைமை ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டதாகும். ஆனால் அரசாங்கம் என்பது அவ்வரசின் ஒரு பகுதி மட்டுமே ஆகும்.

**2. அதிகாரம் :**

அரசுக்கு இறைமை அதிகாரம் உண்டு. அரசாங்கத்திற்கு அவ்வதிகாரம் இல்லை. அரசு ஒப்படைக்கும் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தினையே அரசாங்கம் பெறுகின்றது.

**3. நிரந்தரத்துவம் :**

அரசு என்பது நிரந்தரமான என்றும் தொடரும் அமைப்பாகும். ஆனால் அரசாங்கமானது தற்காலிகத் தன்மையுடையதாகும். அரசினை காலத்திற்குக் காலம் மாற்றியமைக்க முடிவதில்லை. ஆனால் அரசாங்கத்தினை மக்கள் காலத்திற்குக் காலம் மாற்றியமைக்க முடியும்.

**4. தன்மை :**

அரசு என்பது கருத்தை ஒட்டியதாகும். அதாவது எண்ணக்கரு ரீதியானதாகும். அது புலனுணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாகும். அது ஒரு இலட்சிய மாதிரியாகும். ஆனால் அரசாங்கம் காட்சிப் பொருள் சார்ந்த ஒரு திட அமைப்பாகும். அது நடைமுறைச் செயற்பாட்டுடைய உயிருள்ள நிறுவனமாகும்.

**5. உறுப்புரிமை :**

ஒரு அரசில் வாழும் சகலரும் அவ்வரசின் உறுப்பினர்களாவர். ஆனால் அவர்களுள் ஒரு பகுதியினர் மட்டுமே அரசாங்கத்தின் உறுப்பினர்களாவர்.

**6. ஆள்புலம் :**

அரசின் இருப்புக்கு நிச்சயிக்கப்பட்ட ஆள்புலம் இன்றியமை யாததாகும். ஆனால் அரசின் ஆள்புலத்திற்கு வெளியேயும் அரசாங்கம் இருப்புக் கொள்ள முடியும்.

**7. கிளர்ச்சி :**

அரசுக்கு எதிராக கிளர்ச்சி அல்லது புரட்சிகளை மேற்கொள்ள முடியாது. ஆனால் அராசங்கத்திற்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ முடியும். கிளர்ச்சிகள், புரட்சிகள் மூலம் உலகில் பல அரசாங் கங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

**8. பிரதிநிதித்துவம் :**

அரசு முழுச் சமூகத்தினையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது. ஆனால் அரசாங்கமானது குடிகளின் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் நிறுவனமாகும்.

**9. மாற்றம் :**

அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படும் போது வன்செயல் ஏற்படாது. உயிர் இழப்பு ஏற்படாது, இரத்தம் சிந்தாது, விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழ மாட்டாது. இதற்கு பல உதாரணங்களைக் காட்டலாம். அமெரிக்கா, இங்கிலாந்து, இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் அரசாங்கம் மாறிய போது ஏற்பட்ட நிலைமைகளைக் கூறலாம். எனவே அமைதியான வழியில் அம்மாற்றம் ஏற்படும். ஆனால் அரசு மாறும் போது அல்லது புதிய அரசு உருவாகும் போது எதிர்மாறான செயல்கள் ஏற்படுகின்றன. பல உயிர்கள் இழக்கப்படும். இரத்தம் சிந்தப்படும், எல்லையில்லாத் தொல்லைகள் ஏற்படும்.

உதாரணமாக : 1947ம் ஆண்டில் பாகிஸ்தான், இந்தியா சுதந்திரம் அடைந்த நிலையைக் குறிப்பிடலாம்.

**10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப் பரிசீலிக்குக.**

**(அ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நோக்கங்களும் மூலக்கொள்கைகளும்.**

**(ஆ) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தின் நோக்கங்களும் மூலக் கொள்கைகளும்.**

**(இ) மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் வகிபங்கு.**

**(ஈ) சர்வதேச அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு.**

## (அ) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நோக்கங்களும் மூலக்கொள்கைகளும்.

**நோக்கங்கள்**

1. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துதல்.
2. மக்களின் சுய தீர்மானம் எடுப்பு மற்றும் சமமான உரிமைகள் பற்றிய மூலக்கொள்கைகளை மதித்து தேசங்களுக்கிடையில் நட்புறவினை விருத்தி செய்தல்.
3. சர்வதேச சமூக, பொருளாதார, கலாசார மற்றும் மானிடப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் விருத்தி செய்வதற்கும் சர்வதேச ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்தல்.
4. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை விருத்தி செய்வதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை ஒன்றுதிரட்டி அவற்றுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்தும் நிலையமாகச் செயற்படுதல்.

**உறுப்பரசுகள் தொடர்பான மூலக் கொள்கைகள்**

1. சகல அரசுகளும் இறைமையில் சமமானவையாகும்.
2. உறுப்பரசுகள் சாசனத்தின் மூலம் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடப்பாடுகளை நல்ல எண்ணத்துடன் நிறைவேற்ற வேண்டும்.
3. சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் நியாயத்திற்கும் பங்கம் ஏற்படாதவாறு உறுப்பரசுகள் தமக்கிடையிலான நெருக்கடிகளை சமாதான வழிமுறைகளில் தீர்த்துக்கொள்ளுதல்.
4. தேசங்களுக்கிடையில் உறவுகளை கொண்டு நடத்தும் போது பிறிதொரு அரசுக்கு எதிராக அச்சுறுத்தல்களையும் அதிகார பிரயோகத்தையும் மேற்கொள்வதிலிருந்து உறுப்பரசுகள் தவிர்ந்திருக்க வேண்டும்.
5. ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு ஏற்ப எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் சகல அரசுகளும் முழு ஆதரவையும் நல்குவதோடு ஐ.நா. நிறுவனம் அரசுகளுக்கு எதிராக தடைகளை விதிக்கும் போது அவ்வாறான அரசுகளுக்கு உறுப்பு நாடுகள் எவ்வித உதவியையும் வழங்கக்கூடாது.
6. சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பேணும் நோக்கில் ஐ.நா. தாபனம் மேற்குறிப்பிட்ட மூலக்கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும் போது தாபனத்தின் உறுப்பரசுகள் அல்லாத அரசுகளும் ஆதரவு நல்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
7. ஐ.நா. நிறுவனம் அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்ற அதிகாரத்தை சாசனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளவில்லை.

## (ஆ) பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கத்தின் நோக்கங்களும் மூலக் கொள்கைகளும்.

**அறிமுகம்**

1985 செப்டெம்பர் 08 ஆம் திகதி டாக்கா பிரகடனத்தை அல்லது சார்க் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு இது நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் இது 7 உறுப்பரசுகளைக் கொண்டு அமைந்திருந்தது. தற்பொழுது ஆப்கானிஸ்தன் என்ற நாடும் சேர்க்கப்பட்டுள்ளமையால் உறுப்பரசுகளின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளன. அதன்படி சார்க் நிறுவனம் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆப்கானிஸ்தான் என்ற 8 அரசுகளை உட்கொண்டுள்ளது.

**நோக்கங்கள்**

1. தென்னாசிய மக்களின் பொதுநலனையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல்.
2. பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்தியை வேகப்படுத்துதல், சமூக முன்னேற்றத்தை விருத்தி செய்தல், பிராந்திய மக்களின் திறன்களை விருத்தி செய்து சுய அபிமானத்தோடு வாழ்வதற்கு வாய்ப்பளித்தல்.
3. தென்னாசிய அரசுகளின் கூட்டு இருப்பை பலப்படுத்துதல்.
4. பரஸ்பரம், நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வின் ஊடாக ஒவ்வொருவரினதும் பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளுதல்.
5. பொருளாதார சமூக, கலாசார, தொழில்நுட்ப, விஞ்ஞான துறைகளில் ஒத்துழைப்பையும் உதவி ஒத்தாசைகளையும் விருத்தி செய்தல்.
6. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளோடு ஒத்துழைப்பை பயன்படுத்துதல்.
7. நிறுவனத்தின் உறுப்பரசுகளை பாதிக்கும் பொது விடயங்கள் பற்றி சர்வதேச நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் செயற்படுவதனை பலப்படுத்தல்.
8. ஒத்த நோக்கங்களைக் கொண்ட ஏனைய சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் ஒத்துழைப்பினை விருத்தி செய்தல்.

**மூலக்கொள்கைகள்**

1. இறைமையில் சமத்துவம், ஆள்புல ஒருமைப்பாடு, அரசியற் சுதந்திரம், உள்ளக விவகாரங்களில் தலையிடாமை, பரஸ்பரம், உதவியொத்தாசை ஆகிய மூலக் கொள்கைகளின் அடிப்படையில் உறுப்பரசுகள் செயற்படுதல்.
2. நிறுவனத்தின் தீர்மானங்கள் ஏகமனதாக மேற்கொள்ளப்படுதல்.
3. இரு தரப்பு மற்றும் நெருக்கடிமிக்க விடயங்களை நிறுவனத்தில் கலந்துரையாடாமை.

## (இ) மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் வகிபங்கு.

**அறிமுகம்**

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பொதுச்சபை 2006 மார்ச் 15ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவை தாபித்தது. 1946 இல் தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு இருந்த இடத்தில் இப்புதியப் பேரவை தாபிக்கப்பட்டமையினால் அவ்வாணைக்குழு செயற்பாடு இழந்தது. இப்பேரவை பொதுச்சபையின் ஒரு துணை நிறுவனமாக செயற்படுகின்றது.

**உள்ளடக்கம்**

மனித உரிமைகள் ஆணைக்குழு (அ) அந்தந்த அரசுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதில் தனது கவனத்தை செலுத்தி அவற்றுக்குப் பரிகாரம் காணுதல் (ஆ) மனித உரிமைகளைப் பாதுகாத்து விருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களை கொண்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையானது பொதுச்சபையினது உறுப்பரசுகளில் இருந்து தெரிவு செய்து நியமிக்கம் 47 உறுப்பினர்களை கொண்டமைந்துள்ளது. உறுப்பினர்கள் பிராந்திய அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர். அதன்படி ஆபிரிக்காவுக்கு 13, ஆசியாவுக்கு 13, கிழக்கு

ஐரோப்பாவுக்கு 06, லத்தீன் அமெரிக்க, கரிபியன் பிராந்தியத்துக்கு 8 மேற்கு ஐரோப்பிய மற்றும் ஏனைய பிராந்தியங்களுக்கு 7 என்ற வகையில் தெரிவு செய்யப்படுகின்றனர். உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 வருடங்களாகும். பொதுச்சபையின் 2/3 பெரும்பான்மையினரின் அங்கீகாரத்துடன் உறுப்பினர்களை நீக்கமுடியும்.

பேரவை ஒவ்வொரு வருடமும் மார்ச், ஜுன், செப்டெம்பர் ஆகிய மாதங்களில் கூட்டங்களை நடத்துகின்றது.

**மனித உரிமை பேரவையின் அதிகாரங்கள்**

மனித உரிமைகள் பேரவை பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

1. சிபாரிசுகளை முன்வைத்தல்.
2. நியதிகளை பொருத்துதல்.
3. இணக்கப்பாட்டினை ஏற்படுத்துதல்.
4. சட்ட நுணுக்க அல்லது முறைப்படியான அதிகாரம்

**1. சிபாரிசுகளை முன்வைத்தல்.**

மனித உரிமைகள் பேரவையானது குறிப்பிட்ட நாடுகள் அல்லது கருப்பொருள் சார்ந்த (உதாரணம் : பெண்களுக்கு எதிரான பராபட்சம்) மற்றும் கீழ்த்தரமானதும் முறையானதுமான வன்முறைகள் தொடர்பாக தனது நிலையினை வெளிப்படுத்துதல்.

**2. நியதிகளைப் பொருத்துதல்.**

மனித உரிமை பேரவையானது அரசுகளின் கடப்பாடுகள் மற்றும் ஈடுபாடுகளுக்கான அடிப்படைகள் என பொருந்துகின்ற நியதிகளை ஏற்றுக்கொள்வதோடு மனித உரிமைகள் தரப்பில் சர்வதேச தரங்களை தாபித்தல்.

**3. இணக்கப்பாட்டினை ஏற்படுத்துதல்.**

மனித உரிமைகள் பேரவையானது நம்பகத் தன்மைக் கொண்ட மேற்பார்வையாளர் என்ற வகிபங்கினை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது. உதாரணமாக : மனித உரிமைகளுடன் அரசுகள் பொருந்துகின்றமையை பேரவை மேற்பார்வை செய்கிறது. இது தவிர ஐக்கிய நாடுகள் உருப்பமையத்தின் சிபார்சுகள் மற்றும் கண்காணிப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது. இத்தகையதொரு நிலையில் பேரவையானது விசேட பிரதிநிதியின் வருகையை சிபார்சு செய்தல் குறிப்பிட்ட நாடு குறித்த ஆணையுரிமை கொண்டவர்களை நியமித்தல் அல்லது குறிப்பிட்ட சூழ்நிலை அல்லது பிரச்சினை தொடர்பான கவனத்தைச் செலுத்துமாறு பொதுச்சபைக்கு அல்லது பாதுகாப்புச் சபைக்கு அழைப்புவிடுத்தல்.

**4. சட்ட நுணுக்க அல்லது முறைப்படியான அதிகாரங்கள்**

மனித உரிமைகள் பேரவையானது அரசுகள் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பமையங்கள் மற்றும் தனது அலுவலர்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய பல்வேறு செயற்பாட்டாளர் களுக்கிடையே மனித உரிமைகள் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்கின்றது. கலந்துரையாடல்கள் மூலம் மனித உரிமைகளைப் மேம்படுத்துவதோடு ஆலோசனை சேவைகள் சட்ட நுணுக்க உதவிகளையும் வழங்குகின்றது. இது தவிர பேரவையானது

பல்வேறு செயற்பாடுகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெறுவதற்கான அரங்கமாகவும் செயற்படுகிறது.

**மனித உரிமைகள் பேரவையின் பணிகள்**

1. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் அதன் உறுப்பமையங்கள் என்பனவற்றின் கொள்கைகளின் அடிப்படையில் ஒத்துழைப்பு மற்றும் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதனை ஊக்கப்படுத்தி மேம்படுத்துதல்.
2. மனித உரிமைகள் தொடர்பான நெருக்கடி நிலைகள் தோன்றும் போது அவற்றில் தலையிட்டு மென்மேலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதனை தடுப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்.
3. மனித உரிமைகள் தொடர்பாக விசேட அறிவினை பெற்றவர்கள் மற்றும் துணை நிறுவனங்கள் குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் ஆலோசனைகளைப் பெறுதல்.
4. மனித உரிமைகள் தொடர்பான விசேட செயன்முறைகளைக் கொண்ட ஒரு முறைமையை நடைமுறைப்படுத்துவதோடு மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.
5. மனித உரிமைகள் கல்வியை மேம்படுத்துதல்.
6. மனித உரிமைகள் தொடர்பான நியதிகளை விருத்தி செய்தல்.

**(ஈ) சர்வதேச அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு.**

✧ ஐக்கிய நாடுகள் வரையறுப்பது போல, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) தனியாரினால் நிறுவப்பட்டவையாகும். அரசுகளிலிருந்து சுயாதீனமாக இருக்கும் சட்டத்தின் ஆட்சியை நோக்கியதாக இருக்கும் தனியார் நலன்களைக் காட்டிலும் பொது நலன்களைப் பின்பற்றவேண்டும் என்பதும் சர்வதேச பரப்பெல்லையைக் கொண்டுள்ள சாதாரண நிறுவனக் கட்டமைப்புக்களைக் கொண்ட அமைப்புக்கள் அரசசார்பற்ற அமைப்புக்கள் என வரையறுக்கப் படுகின்றது.

✧ ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபை (ECOSOC) இதனை ''அரசுகளுக்கிடையிலான உடன்படிக்கை ஒன்றினால் அன்றி அரசுகளுக்கு தமது உத்தியோகத்தர்களை நியமிக்கும் ஆற்றல் கொண்ட எனினும் அந்நியமனங்கள் அல்லது உத்தியோகத்தர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு தடை ஏற்படுத்தாத அமைப்புக்கள் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களின் கூட்டு'' என வரையறுத்துள்ளது.

✧ சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) உதவி வழங்குவதில் ஒரு சக்திவாய்ந்த அமைப்பாகவும், மேலும் சர்வதேச மேம்பாடு கட்டமைப்பிற்குள் ஒரு வகையான முக்கியமான செயற்பாட்டாளர்களாகவும் காணப்படுகின்றனர்.

✧ அவை இப்போது முன்னெப்பொழுதையும் விட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அதிக உதவிகளை வழங்கிவருகின்றன. குறிப்பாக பெரிய சர்வதேச அரச சார்பற்ற

நிறுவனங்களின் (INGOs) வரவு செலவுத்திட்டங்கள் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சில ஒழுங்கமைப்புக்களையும் சில நன்கொடை நாடுகளையும் விட அதிகமாக உள்ளன.

**உலகளாவிய ரீதியில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் (INGOs) வளர்ச்சியை ஏற்படுத்திய காரணிகள்**

அ. தேசிய அரசுகளின் வீழ்ச்சி - அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை குறைவடைதல், பொதுத்துறை வளங்கள் குறைவடைதல், தனியார்மயமாக்கல், தோல்வியுற்ற அரசுகள்.

ஆ. உலகமயமாக்கலுக்குட்பட்ட உலக முறைமையின் தோற்றம்.

இ. பல்தேசியக் கம்பனிகளின் தனியார்மயமாக்கம்.

ஈ. தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகள்.

உ. வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தை அனுமதிக்கும் நவ தாராளவாத உலக ஒழுங்கின் மேலாதிக்கம்.

ஊ. சர்வதேச இராஜதந்திரத்தின் வளர்ச்சி.

✧ சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) இறையாண்மை கொண்ட நிறுவனங்கள் அல்ல என்றாலும் சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தும் ஒரு பரந்த ஆற்றலைக் கொண்டுள்ளன. மேலும் பல சந்தர்ப்பங்களில் அந்த திறனை நிரூபித்துமுள்ளன.

✧ உள்நாட்டில் வரையறுக்கப்பட்ட தேசிய நோக்கங்களைப் பின்பற்றுவதில் ஒரு அரசாங்கத்தின் வெற்றியானது புதிய சர்வதேச அமைப்புகள் உள்ளிட்ட நிறுவன சூழல்களில் எந்தளவு வெற்றிகரமாக தொடர்புகளைப்பேணுகின்றது எனும் விடயத்திலேயே தங்கியுள்ளது.

✧ இன்று சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) உலக அபிவிருத்தி நிதிகளில் சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கையாளுகின்றனர்.

**உலக அரசியலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் (INGOs) தாக்கம்**

அ. கொள்கையாக்கத்திற்கான உள்ளீடுகளை வழங்குதல்: சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) மக்களிடையே ஆதரவு தளங்களை உருவாக்குகின்றன. சுயாதீனத்துறை தொடர்புகளை வலுப்படுத்துகின்றன. மேலும் நீண்ட காலத்தில் கொள்கையை பாதிக்கும் நோக்குடன் மாற்று அணுகுமுறைகளை உருவாக்குகின்றன.

ஆ. சேவைசார் ஒதுக்கீடுகள், திறன் விருத்தி மற்றும் நிறுவனம்சார் தாக்கங்கள்

இ. கொள்கைகளை வடிவமைத்தல், நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் நடைபெறும்.

ஈ. கண்காணிப்பு - சூழல் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான கண்காணிப்பு பொறிமுறைகளாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**முடிவுரை**

- பெரும்பாலான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் (INGOs) உலகின் வடக்கு நாடுகளை அடிப்படையாகக் கொண்டவை அல்லது உலக மூலதனச் சந்தையின் மூலம் நிதியளிக்கப் படுகின்றனவாகும். இந்த அடிப்படையில் பலம்வாய்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் (INGOs) பெரும்பாலானவர்கள் நவ தாராளவாத பொருளாதார மற்றும் சமூக நோக்கங்களின் கீழ் செயற்படுகிறார்கள்.

- சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் (INGOs) நோக்கம் நவ தாராளவாத கொள்கைகளுடன் இணைந்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவை எளிதில் அரசுகளின் தேசிய எல்லைகளை ஊடுருவிச்சென்று அபிவிருத்திச் செயற்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற முயற்சிக்கின்றன.

- குறைவிருத்தி நாடுகளின் (LDCs) ஆட்சிகள் எப்போதுமே அவற்றின் அபிவிருத்தி செயற்பாட்டில் மூலதனம் மற்றும் தொழில்நுட்ப திறன்களின் பற்றாக்குறையுடன் இருப்பதால் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (INGOs) அவற்றின் அபிவிருத்தித் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதில் முன்னிலை வகிக்கின்றன.